# முத்துக்கமலம்

## இணைய இதழ் வழங்கும்

## மின் புத்தகம்




வெளியீடு: முத்துக்கமலம் இணைய இதழ்,
19/1, சுகதேவ் தெரு, பழனிசெட்டிபட்டி, தேனி - 625 531, தமிழ்நாடு, இந்தியா.

முத்துக்கமலம் மின் புத்தகம்

இணையத்தில் ஒரு இலக்கியப் படைப்பு! இது தமிழ் ஆர்வலர்களின் இலக்கியத் துடிப்பு!!

## மின் புத்தக விபரம்



| | | |
|---|---|---|
| மின் புத்தகத்தின் பெயர் | : | சீன விலங்கு சோதிடம் |
| ஆசிரியர் | : | சித்ரா சிவக்குமார் |
| பொருள் | : | சோதிடம் |
| பக்கங்கள் | : | 76 |
| காப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| வடிவமைப்பு | : | தேனி. எம். சுப்பிரமணி |
| விலை | : | இலவசம் |
| வெளியீடு | : | முத்துக்கமலம் இணைய இதழ், 19/1, சுகதேவ் தெரு, பழனிசெட்டிபட்டி, தேனி - 625 531. தமிழ்நாடு, இந்தியா. |

மின்னஞ்சல்: msmuthukamalam@yahoo.co.in

இணைய முகவரி: www.muthukamalam.com



முத்துக்கமலம் மின் புத்தகம்
இணையத்தில் ஒரு இலக்கியப் படைப்பு! இது தமிழ் ஆர்வலர்களின் இலக்கியத் துடிப்பு!!

## உள்ளடக்கம்



| | | பக்கம் |
|---|---|---|
| ❖ நீங்கள் யார்? | : | 4 |
| ❖ எலி | : | 11 |
| ❖ எருது | : | 16 |
| ❖ புலி | : | 21 |
| ❖ முயல் | : | 26 |
| ❖ டிராகன் | : | 31 |
| ❖ பாம்பு | : | 37 |
| ❖ குதிரை | : | 42 |
| ❖ ஆடு | : | 47 |
| ❖ குரங்கு | : | 53 |
| ❖ சேவல் | : | 59 |
| ❖ நாய் | : | 65 |
| ❖ பன்றி | : | 71 |

## நீங்கள் யார் ?



புத்தபெருமான் இந்த உலகத்தை விட்டுச் செல்லும் போது, உலகிலுள்ள அனைத்து விலங்குகளிடமும் விடைபெற்றுச் செல்ல வேண்டித் தன்னைச் சந்திக்க வருமாறு அழைப்பு விடுத்தாராம். அவர் அழைப்பை ஏற்று வந்த விலங்குகள் பன்னிரண்டுதான். அவர் அழைப்பினை ஏற்று வந்த விலங்குகளுக்கு மதிப்பு தரும் வகையில், அவரைப் பார்க்க வந்த வரிசையின் படி, பன்னிரண்டு வருடங்களுக்கு ஒவ்வொரு விலங்கின் பெயரை வைத்ததாய் சீனாவில் கதை ஒன்று உண்டு. இதனால் இன்றும் சீனர்கள் ஒவ்வொரு வருடத்தையும் ஒவ்வொரு விலங்கின் பெயரைக் கொண்டே குறிப்பிடுகின்றனா;.

மனிதர்கள் தங்களுக்குக் கிடைத்த அறிவைக் கொண்டு, எத்தனையோ விசயங்களைக் கண்டுபிடித்தனர். எத்தனையோ விந்தைகளை ஆராய்ந்து தெளிவு பெற்று வருகின்றனர். எத்தனையோ புதுப்புதுக் கலைகளை உருவாக்கி வாழ்க்கையை சுவாரசியப்படுத்தி வருகின்றனர். அத்தகைய கலைகளில் ஒன்றே சோதிடக் கலை.

பல்வேறு நாடுகளில் பல்வேறு விதங்களில் சோதிடம் கையாளப்பட்டாலும், எல்லாவற்றிலும் ஒரு ஒற்றுமை உண்டு. குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட வருடத்தில் பிறந்தவர்கள் குறிப்பிட்ட சிறப்பினை, குணங்களைக் கொண்டவர்கள் என்பதையும், அவர்கள் வருங்காலம் எப்படி இருக்கும் என்பதையும் கணித்துக் கூறுவதில் எல்லா நாடுகளும் ஒன்றுபடுகின்றன. ஆனால் கணக்கிடும் முறை மட்டும் வேறுபடுகின்றன.

இந்தியாவில் நட்சத்திரங்களின் போக்கினைப் பொருத்து ஒருவரின் தன்மையையும் குணங்களையும் வருங்காலத்தையும் கணித்துக் கூறுவர். மேலை நாடுகளில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு குறியீடுகளைக் கூறி, அந்தக் குறியீடுகளில் பிறந்தவர்களின் தன்மையையும் குணங்களையும் வருங்காலத்தையும் கணிப்பர்.

சீனாவில் சோதிடம் என்பது பெரிய அளவில் நம்பப்படும் ஒன்று. வாஸ்து சாத்திரத்தின் படி பல விசயங்கள் செய்யப்படுகின்றன. ஒரு மனிதரின் பிறந்த வருடம், மாதம், நேரம் போன்றவற்றின் அடிப்படையில் பல கணிப்புகள் செய்யப்பட்டு, பின்னர் வாஸ்துக்கான கணிப்புகள் செய்யப்படுகின்றன.

சீனாவில் “உங்கள் வயது என்ன?” என்று பெரும்பாலும் கேட்க மாட்டார்கள். “நீங்கள் எந்த வருடத்தைச் சேர்ந்தவர்?” என்று கேட்பார்கள். அதற்கு நீங்கள் பிறந்த ஆங்கில வருட எண்ணைக் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லை. எந்த விலங்கு வருடத்தில் பிறந்தவர் என்பதைச் சொன்னால் போதும். உங்கள் வயதைச் சரியாய்க் கணித்து விடுவார்கள்.

முன் சொன்ன கதையில் குறிப்பிட்ட படி, சீனாவில் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு விலங்கினைக் குறிக்கும். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு மணி நேரமும் ஒவ்வொரு விலங்கினைக் குறிக்கும்.

சீனர்கள் ஒவ்வொரு மனிதரின் குணங்களும், செயல்களும், வெற்றி தோல்விகளும் அவர்கள் பிறந்த நேரத்தின் படி அமைகின்றன என்பதைப் பெரிதும் நம்புகின்றனர். கி.மு.2600ல் பேரரசர் ஹுவாங் தீ என்பவரால் இந்த விலங்குச் சக்கரம் அறிமுகப்படுத்தப்பட்டது என்று வரலாறு கூறுகிறது. கல்வியாளர்கள் இந்த சோதிடம் இந்தியாவிலிருந்து சின் வம்சத்தின் போது புத்த மத போதகர்களால் கொண்டு வரப்பட்டது என்றும் கூறுவர்.

சீனாவில் முன்னோர்கள் வருடங்களை 10 தேவலோகத் தண்டுகளாகவும் 12 துருவக் கிளைகளாகவும் கணித்தனர். ஆனால் இவை மிகவும் கடினமாய் இருந்த காரணத்தால், 12 கிளைகளை விலங்குச் சின்னங்களைக் கொண்டு குறிப்பிட ஆரம்பித்தனர். 10 தண்டுகள் என்பன ஐந்து மூலகங்கள் மற்றும் யின்-யாங் முறைகளில் அமைந்தவை. மரம், நெருப்பு, பூமி, உலோகம், நீர் என்பன ஐந்து மூலகங்கள். இத்துடன் யின்-யாங் சேர்ந்தால் யின் மரம், யின் நெருப்பு, யின் பூமி, யின் உலோகம், யின் நீர் என்ற ஐந்தும் யாங் மரம், யாங் நெருப்பு, யாங் பு+மி, யாங் உலோகம், யாங் நீh; என்ற ஐந்தும் சேர்ந்து பத்தாயின. இத்துடன் எலி, எருது, புலி, முயல், டிராகன், பாம்பு, குதிரை, ஆடு, குரங்கு, சேவல், நாய், பன்றி என்று 12 துருவக் கிளைகளான வருடங்கள் பன்னிரண்டும் சேர்த்து சீனர்களின் ஜோதிடங்கள் கணிக்கப்படுகின்றன. ஐந்து மூலகங்கள், யின்-யாங், பன்னிரண்டு வருடம் என்ற இந்தச் சக்கரம் 60 வருடச் சக்கரம்.

சந்திரனை அடிப்படையாய்க் கொண்டே வருடத்தின் ஆரம்பம் கணிக்கப்படுகின்றது. இந்த வருடத்தினுள்ளே பன்னிரண்டு மாதங்கள் சீனப் புது வருடத்தின் ஆரம்பம் முதல் இறுதி வரை பகுக்கப்படுகின்றது. அதில் இருக்கும் இருபத்து நான்கு மணி நேரத்தில், ஒவ்வொரு இரண்டு மணி நேரமும் மறுபடியும் விலங்குகளாய் பகுக்கப்படுகின்றது.

முதலில் நீங்கள் எந்த விலங்கு வருடத்தைச் சேர்ந்தவர் என்பதைத் தெரிந்து கொள்வோமா?

கீழ்கண்ட அட்டவணையைக் கொண்டு அதைத் தெரிந்து கொள்ளலாம்.

| எலி | எருது | புலி | முயல் | டிராகன் | பாம்பு | குதிரை | ஆடு | குரங்கு | சேவல் | நாய் | பன்றி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 |
| 1996 | 1997 | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 |
| 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 | 1993 | 1994 | 1995 |
| 1972 | 1973 | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 | 1979 | 1980 | 1981 | 1982 | 1983 |
| 1960 | 1961 | 1962 | 1963 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 |
| 1948 | 1949 | 1950 | 1951 | 1952 | 1953 | 1954 | 1955 | 1956 | 1957 | 1958 | 1959 |
| 1936 | 1937 | 1938 | 1939 | 1940 | 1941 | 1942 | 1943 | 1944 | 1945 | 1946 | 1947 |
| 1924 | 1925 | 1926 | 1927 | 1928 | 1929 | 1930 | 1931 | 1932 | 1933 | 1934 | 1935 |
| 1912 | 1913 | 1914 | 1915 | 1916 | 1917 | 1918 | 1919 | 1920 | 1921 | 1922 | 1923 |
| 1900 | 1901 | 1902 | 1903 | 1904 | 1905 | 1906 | 1907 | 1908 | 1909 | 1910 | 1911 |

இந்தப் பட்டியல் சீன வருடத்தை அடிப்படையாய்க் கொண்டது. சீன வருடத்தின் ஆரம்பம் முடிவு ஆங்கில வருடத்தின் ஆரம்பம் முடிவுக்கு சற்றே வேறுபடும். சீன வருடம் ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் வரும் முழு நிலவு நாளன்று ஆரம்பம் ஆகும். ஒரு மாதம் 29.5 நாட்கள் கொண்டது. ஆங்கில வருட அட்டவணைக்கு இணையாக்க சில வருடங்களில் கூடுதலாய் ஒரு மாதம் சேர்க்கப்படுகிறது.

ஜனவரி மாதம் பிப்ரவரி மாதம் பிறந்தவர்களுக்கு சற்று கணக்கிட்டே வருடத்தைக் கணிக்க வேண்டி வரும். சரி, அப்படிப் பிறந்தவர்களும் சரியாய் வருடத்தைக் கணிக்க வேண்டுமில்லையா? இதோ அதற்கான அட்டவணை.

| சீன சந்திர வருட அட்டவணை நூறு வருடங்களுக்கான புது வருட ஆரம்பத் தேதிகள் | | | | |
|---|---|---|---|---|
| சீனப் புது வருடம் | விலங்கு | | சீனப் புது வருடம் | விலங்கு |
| 1900 - ஜனவரி 31 | எலி | | 1956 - பிப்ரவரி 12 | குரங்கு |
| 1901 - பிப்ரவரி 19 | எருது | | 1957 - ஜனவரி 31 | சேவல் |
| 1902 - பிப்ரவரி 08 | புலி | | 1958 - பிப்ரவரி 18 | நாய் |
| 1903 - ஜனவரி 29 | முயல் | | 1959 - பிப்ரவரி 09 | பன்றி |
| 1904 - பிப்ரவரி 16 | டிராகன் | | 1960 - ஜனவரி 28 | எலி |
| 1905 - பிப்ரவரி 04 | பாம்பு | | 1961 - பிப்ரவரி 15 | எருது |
| 1906 - ஜனவரி 25 | குதிரை | | 1962 - பிப்ரவரி 05 | புலி |
| 1907 - பிப்ரவரி 13 | ஆடு | | 1963 - ஜனவரி 25 | முயல் |
| 1908 - பிப்ரவரி 02 | குரங்கு | | 1964 - பிப்ரவரி 13 | டிராகன் |
| 1909 - ஜனவரி 22 | சேவல் | | 1965 - பிப்ரவரி 02 | பாம்பு |
| 1910 - பிப்ரவரி 10 | நாய் | | 1966 - ஜனவரி 21 | குதிரை |
| 1911 - ஜனவரி 30 | பன்றி | | 1967 - பிப்ரவரி 09 | ஆடு |
| 1912 - பிப்ரவரி 18 | எலி | | 1968 - ஜனவரி 30 | குரங்கு |
| 1913 - பிப்ரவரி 06 | எருது | | 1969 - பிப்ரவரி 17 | சேவல் |
| 1914 - ஜனவரி 26 | புலி | | 1970 - பிப்ரவரி 06 | நாய் |
| 1915 - பிப்ரவரி 14 | முயல் | | 1971 - ஜனவரி 27 | பன்றி |
| 1916 - பிப்ரவரி 03 | டிராகன் | | 1972 - பிப்ரவரி 15 | எலி |
| 1917 - ஜனவரி 23 | பாம்பு | | 1973 - பிப்ரவரி 03 | எருது |
| 1918 - பிப்ரவரி 11 | குதிரை | | 1974 - ஜனவரி 23 | புலி |
| 1919 - பிப்ரவரி 01 | ஆடு | | 1975 - பிப்ரவரி 11 | முயல் |
| 1920 - பிப்ரவரி 20 | குரங்கு | | 1976 - ஜனவரி 31 | டிராகன் |
| 1921 - பிப்ரவரி 08 | சேவல் | | 1977 - பிப்ரவரி 18 | பாம்பு |
| 1922 - ஜனவரி 28 | நாய் | | 1978 - பிப்ரவரி 07 | குதிரை |
| 1923 - பிப்ரவரி 16 | பன்றி | | 1979 - ஜனவரி 28 | ஆடு |
| 1924 - பிப்ரவரி 05 | எலி | | 1980 - பிப்ரவரி 16 | குரங்கு |
| 1925 - ஜனவரி 25 | எருது | | 1981 - பிப்ரவரி 05 | சேவல் |
| 1926 - பிப்ரவரி 13 | புலி | | 1982 - ஜனவரி 25 | நாய் |
| 1927 - பிப்ரவரி 02 | முயல் | | 1983 - பிப்ரவரி 13 | பன்றி |
| 1928 - ஜனவரி 23 | டிராகன் | | 1984 - பிப்ரவரி 02 | எலி |
| 1929 - பிப்ரவரி 10 | பாம்பு | | 1985 - பிப்ரவரி 20 | எருது |

| | | | | |
|---|---|---|---|---|
| 1930 - ஜனவரி 30 | குதிரை | | 1986 - பிப்ரவரி 09 | புலி |
| 1931 - பிப்ரவரி 17 | ஆடு | | 1987 - ஜனவரி 29 | முயல் |
| 1932 - பிப்ரவரி 06 | குரங்கு | | 1988 - பிப்ரவரி 17 | டிராகன் |
| 1933 - ஜனவரி 26 | சேவல் | | 1989 - பிப்ரவரி 06 | பாம்பு |
| 1934 - பிப்ரவரி 14 | நாய் | | 1990 - ஜனவரி 27 | குதிரை |
| 1935 - பிப்ரவரி 04 | பன்றி | | 1991 - பிப்ரவரி 15 | ஆடு |
| 1936 - ஜனவரி 24 | எலி | | 1992 - பிப்ரவரி 02 | குரங்கு |
| 1937 - பிப்ரவரி 11 | எருது | | 1993 - ஜனவரி 23 | சேவல் |
| 1938 - ஜனவரி 31 | புலி | | 1994 - பிப்ரவரி 10 | நாய் |
| 1939 - பிப்ரவரி 19 | முயல் | | 1995 - ஜனவரி 31 | பன்றி |
| 1940 - பிப்ரவரி 08 | டிராகன் | | 1996 - பிப்ரவரி 19 | எலி |
| 1941 - ஜனவரி 27 | பாம்பு | | 1997 - பிப்ரவரி 07 | எருது |
| 1942 - பிப்ரவரி 15 | குதிரை | | 1998 - ஜனவரி 28 | புலி |
| 1943 - பிப்ரவரி 05 | ஆடு | | 1999 - பிப்ரவரி 16 | முயல் |
| 1944 - ஜனவரி 25 | குரங்கு | | 2000 - பிப்ரவரி 05 | டிராகன் |
| 1945 - பிப்ரவரி 13 | சேவல் | | 2001 - ஜனவரி 24 | பாம்பு |
| 1946 - பிப்ரவரி 02 | நாய் | | 2002 - பிப்ரவரி 12 | குதிரை |
| 1947 - ஜனவரி 22 | பன்றி | | 2003 - பிப்ரவரி 01 | ஆடு |
| 1948 - பிப்ரவரி 10 | எலி | | 2004 - ஜனவரி 22 | குரங்கு |
| 1949 - ஜனவரி 29 | எருது | | 2005 - பிப்ரவரி 09 | சேவல் |
| 1950 - பிப்ரவரி 17 | புலி | | 2006 - ஜனவரி 29 | நாய் |
| 1951 - பிப்ரவரி 06 | முயல் | | 2007 - பிப்ரவரி 18 | பன்றி |
| 1952 - ஜனவரி 27 | டிராகன் | | 2008 - பிப்ரவரி 07 | எலி |
| 1953 - பிப்ரவரி 14 | பாம்பு | | 2009 - ஜனவரி 26 | எருது |
| 1954 - பிப்ரவரி 03 | குதிரை | | 2010 - பிப்ரவரி 14 | புலி |
| 1955 - ஜனவரி 24 | ஆடு | | | |

**வருங்காலச் சீன வருடங்கள்**

2011 - பிப்ரவரி 3 - முயல்
2012 - ஜனவரி 23 - டிராகன்
2013 - பிப்ரவரி 10 - பாம்பு
2014 - ஜனவரி 31 - குதிரை
2015 – பிப்ரவரி 19 - ஆடு

சீனர்கள் இந்த உலகில் இருக்கும் பொருட்கள் அனைத்திலும் நேர், எதிர் என்று இரு விதமான சக்திகள் இருப்பதாக நம்புகின்றனர். இந்த நேர் எதிர் சக்திகள் எப்போதும் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக் கொண்டு இணைந்தே உலகத்தை இயக்குவதாகவும் நம்புகின்றனர். இரவுக்கு பகல், பெண்மைக்கு ஆண்மை, தாழ்வுக்கு உயர்வு என்று யின் யாங் எங்கும் எதிலும் நிலவுகின்றது.

கருப்பு, எதிர்மறை சக்தி, அடிமைத்தனம், நீர், உலோகம், பூமி ஆகியவை யின் என்று கருதப்படுகிறது. அது இரவு, பள்ளத்தாக்கு, நதிகள், ஓடைகள் ஆகியவற்றைச் சார்ந்தது.

வெள்ளை, நேர்மறை சக்தி, ஆளுமை, நெருப்பு, மரம், காற்று யாங் என்று கருதப்படுகிறது. அது பகல், மலைகள், குன்றுகள் ஆகியவற்றைச் சார்ந்தது.

இவ்விரு சக்திகளும் மனிதர்களின் நடவடிக்கைகளை மாற்ற வல்லது. அதனாலேயே, ஜோதிடத்தில் இதுவும் முக்கிய பங்காற்றுகிறது.

இப்போது வருடங்களை எப்படி யின்-யாங், மரம், நெருப்பு, பூமி, உலோகம், நீர் என்று குறிப்பிடலாம் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆங்கில வருட எண்ணையே இதற்கு உபயோகப்படுத்தலாம்.

வருட முடிவு 0 இருந்தால் யாங் உலோகம்.
வருட முடிவு 1 இருந்தால் யின் உலோகம்.
வருட முடிவு 2 இருந்தால் யாங் நீர்
வருட முடிவு 3 இருந்தால் யின் நீர்
வருட முடிவு 4 இருந்தால் யாங் மரம்.
வருட முடிவு 5 இருந்தால் யின் மரம்.
வருட முடிவு 6 இருந்தால் யாங் நெருப்பு.
வருட முடிவு 7 இருந்தால் யின் நெருப்பு.
வருட முடிவு 8 இருந்தால் யின் பூமி.
வருட முடிவு 9 இருந்தால யாங் பூமி.

ஒவ்வொரு மூலகமும் ஒவ்வொரு குறிகளின் தன்மைகளை ஆளும்.

| **மூலகங்கள்** | **வருடக் குறிகள்** |
|---|---|
| மரம் | முயல், புலி(மெலிந்த), டிராகன்(வலுத்த) |
| நெருப்பு | பாம்பு, குதிரை(வலுத்த), ஆடு(மெலிந்த) |
| உலோகம் | குரங்கு(வலுத்த), சேவல்;, நாய் (மெலிந்த) |
| நீர் | எலி(வலுத்த), எருது, பன்றி(மெலிந்த) |
| பூமி | டிராகன், ஆடு, நாய், எருது (சம நிலையில் இருப்பதால் அனைத்து குறிகளின் தன்மைகளை ஆள வல்லது) |

எந்த மாதத்தில் பிறந்தோமோ அந்தந்த மாதத்தின் குறிகளையும் அறிந்தால், அதன் அடிப்படையிலும் குணங்களை ஆராயலாம். கீழ் கண்ட அட்டவணை அதைக் கண்டு பிடிக்க உதவும். இதை ஒருவாpன் உள்குறி என்று குறிப்பிடலாம்.

| **சூரிய ரேகை** | **தேதி** | **சீன மாதம்** | **நிலையான மூலகம்** | **காலம்** |
|---|---|---|---|---|
| 314 | பிப்ரவரி 19 - மார்ச் 05 | புலி | மரம் | வசந்த காலம் |
| 329 | பிப்ரவரி 04 - பிப்ரவரி 18 | | | |
| 344 | மார்ச் 06 - மார்ச் 20 | முயல் | மரம் | வசந்த காலம் |
| 0 | மார்ச் 21 - ஏப்ரல் 04 | | | |
| 14 | ஏப்ரல் 05 - ஏப்ரல் 19 | டிராகன் | மரம் | வசந்த காலம் |
| 29 | ஏப்ரல் 20 - மே 04 | | | |
| 44 | மே 05 - மே 20 | பாம்பு | நெருப்பு | கோடை காலம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 59 | மே 21- ஜூன் 05 | | | |
| 74 | ஜூன் 06-ஜூன் 20 | குதிரை | நெருப்பு | கோடை காலம் |
| 89 | ஜூன் 21-ஜூலை 06 | | | |
| 104 | ஜூலை 07-ஜூலை 22 | ஆடு | நெருப்பு | கோடை காலம் |
| 119 | ஜூலை 23-ஆகஸ்ட் 06 | | | |
| 134 | ஆகஸ்ட் 07 - ஆகஸ்ட் 22 | குரங்கு | உலோகம் | இலையுதிர் காலம் |
| 149 | ஆகஸ்ட் 23 - செப்டம்பர் 07 | | | |
| 164 | செப்டம்பர் 08 - செப்டம்பர் 22 | சேவல் | உலோகம் | இலையுதிர் காலம் |
| 181 | செப்டம்பர் 23 - அக்டோபர் 07 | | | |
| 194 | அக்டோபர் 08 - அக்டோபர் 22 | நாய் | உலோகம் | இலையுதிர் காலம் |
| 211 | அக்டோபர் 23 - நவம்பர் 06 | | | |
| 224 | நவம்பர் 07 - நவம்பர் 21 | பன்றி | நீர் | குளிர் காலம் |
| 244 | நவம்பர் 22 - டிசம்பர் 06 | | | |
| 251 | டிசம்பர் 07 - டிசம்பர் 21 | எலி | நீர் | குளிர் காலம் |
| 271 | டிசம்பர் 22 - ஜனவரி 05 | | | |
| 284 | ஜனவரி 06 - ஜனவரி 19 | எருது | நீர் | குளிர் காலம் |
| 301 | ஜனவரி 20 - பிப்ரவரி 03 | | | |

ஒவ்வொரு மணி நேரத்திற்கும் குறியீடுகள் உண்டு. ஒருவர் பிறந்த நேரத்தின் படி, இந்த இரகசியக் குறிகளை அறிந்து கொள்ளலாம்.

- 23:00 - 01:00: எலி
- 01:00 - 03:00: எருது
- 03:00 - 05:00: புலி
- 05:00 - 07:00: முயல்
- 07:00 - 09:00: டிராகன்
- 09:00 - 11:00: பாம்பு
- 11:00 - 13:00: குதிரை
- 13:00 - 15:00: ஆடு
- 15:00 - 17:00: குரங்கு
- 17:00 - 19:00: சேவல்
- 19:00 - 21:00: நாய்
- 21:00 - 23:00: பன்றி

வருடக் குறி, மாதக் குறி, நேரக் குறி இம்மூன்றையும் இணைத்தே ஒருவாpன் குணாதியங்களைக் கணிக்கிறது சீன சோதிடம். சீன சோதிடத்தின் சின்னங்களுக்கு இணையாய் இந்திய ஜோதிடத்திலும், மேற்கத்திய சோதிடத்திலும் சின்னங்கள் உண்டு. அவற்றை இங்கு காண்போம்.

| **சீனம்** | **இந்தியா** | **மேலை நாடுகள்** |
|---|---|---|
| டிராகன் | மேஷம் | ஏரிஸ் |
| பாம்பு | ரிஷபம் | டாரஸ் |
| குதிரை | மிதுனம் | ஜெமினி |
| ஆடு | கார்த்திகை | கான்சர் |
| குரங்கு | சிம்மம் | லியோ |

| | | |
|---|---|---|
| சேவல் | கன்னி | விர்கோ |
| நாய் | துலா | லிப்ரா |
| பன்றி | விருச்சிகம் | ஸ்கார்பியோ |
| எலி | தனுசு | சகிடாரியஸ் |
| எருது | மகரம் | கேப்ரிகார்ன் |
| புலி | கும்பம் | அக்வாரிஸ் |
| முயல் | மீனம் | பிசிஸ் |

இவை அனைத்தையும் அடிப்படையாய் கொண்டே சீன ஜோதிடங்கள் கணிக்கப்படுகின்றன. இனி ஒவ்வொரு விலங்குக் குறிகளைப் பற்றியும் தெரிந்து கொள்வோம்.



# 1. எலி



- ✓ ஆண்டுகள் - 1900, 1912, 1924, 1936, 1948, 1960, 1972, 1984, 1996, 2008, 2020, 2032, 2044
- ✓ நேரம் - இரவு 11:00 முதல் 1:00 வரை
- ✓ உரிய திசை - மேற்கு
- ✓ உரிய காலங்கள் - குளிர் காலம், டிசம்பர் மாதம்
- ✓ நிலையான மூலகம் - நீர்
- ✓ யின் - யாங் யாங்

முன்னொரு காலத்தில் புத்தபெருமான், வருடங்களுக்குச் சின்னமிட எல்லா விலங்குகளையும் ஒரு கூட்டதிற்கு அழைத்தாராம். கூட்டம் நடக்கவிருந்த முந்தைய நாள் பூனை தன்னுடைய நண்பனான எலியிடம் கூட்டத்தைப் பற்றி கூறி விட்டு, அதிகாலையில் முதலில் எழுபவர் அடுத்தவரை எழுப்ப வேண்டும் என்று முடிவு செய்து விட்டுத் தூங்கச் சென்றது.

காலையில் எலி முதலில் எழுந்தது. தான் மட்டுமே முதலாவதாய்ச் செல்ல எண்ணம் கொண்ட எலி பூனையை எழுப்பாமல் கூட்டதிற்குச் சென்றது. அதுவே கூட்டத்தின் முதல் ஆளாகவும் இருந்தது. பிறகு எருது, புலி, முயல், டிராகன், பாம்பு, குதிரை, சேவல், நாய், பன்றி என்று ஒன்றன் பின் ஒன்றாய் விலங்குகள் வந்து சேர்ந்தன. விலங்குகள் வந்து சேர்ந்த வரிசையின்படி புத்தபெருமான் வருடங்களுக்கு சின்னமிட்டாராம். பூனை தூங்கி எழுந்து பார்த்த போது, அங்கு எலி இருக்கவில்லை. வேகவேகமாய்க் கூட்டம் நடக்கும் இடத்திற்குச் சென்றது. ஆனால் அது சென்று சேரும் போது கூட்டமே முடிந்து விட்டிருந்தது. அன்றிலிருந்து எலி பூனைக்குப் பகையானது.

இந்தக் கதை எலி வருடம் ஏன் முதலில் வந்தது என்பதைக் குறிக்க கூறப்படும் கதை.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் எலி வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ ஜனவரி 31, 1900 - பிப்ரவரி 18, 1901
- ➢ பிப்ரவரி 18, 1912 - பிப்ரவரி 05, 1913
- ➢ பிப்ரவரி 05, 1924 - ஜனவரி 24, 1925
- ➢ ஜனவரி 24, 1936 - பிப்ரவரி 10, 1937
- ➢ பிப்ரவரி 10, 1948 - ஜனவரி 28, 1949
- ➢ ஜனவரி 28, 1960 - பிப்ரவரி 14, 1961
- ➢ பிப்ரவரி 15, 1972 - பிப்ரவரி 02, 1973
- ➢ பிப்ரவரி 02, 1984 - பிப்ரவரி 19, 1985
- ➢ பிப்ரவரி 19, 1996 - பிப்ரவரி 06, 1997
- ➢ பிப்ரவரி 07, 2008 - ஜனவரி 25, 2009

**குணங்கள்**

- மக்களில் பெரும்பாலானோர்க்கு எலியைப் பிடிக்காது. இருந்தாலும் சீன சோதிடத்தில், எலியே முதல் வருடத்தைய சின்னம். இந்த விலங்கு ஆர்வம், சாதுர்யம், எச்சரிக்கைத் தன்மை, மென்மை, இணக்கம், உற்சாகம் ஆகிய குணங்களுக்கு சான்றாய் விளங்கும் விலங்கு. வருடம் 2008, எலி வருடம். இது யாங் - பூமியைச் சார்ந்த வருடம்.
- எலி வருடத்தில் பிறந்தவர்கள் வசீகரமாகவும் போராடும் மனப்பான்மையும் கொண்டவர்கள். நிகழ்காலத்தில் நன்றாய் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள். எந்தச் சூழலையும் தனக்குச் சாதகமாய் ஆக்கிக் கொண்டு வாழத் தெரிந்தவர்கள். மேம்போக்காய் பார்க்கும் போது மிகவும் அமைதியாயும் நன்கு சீர் தூக்கிப் பார்த்துச் செயல்படுபவராய் தெரிந்தாலும், உள் மனதில் அவர்கள் அமைதியற்றவர்களாயும், சிறிது பயந்த சுபாவம் கொண்டவர்களாயும் இருப்பார்கள்.
- எலிவாசிகள் எளிதில் எதற்கும் ஒத்துப் போகக் கூடியவர்கள். கடின உழைப்பில் அதிக நாட்டம் கொண்டவர்கள். காரியங்களை ஆரம்பித்தவுடன், தான் என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் அறிந்து விட்டார்கள் என்றால், அதற்குப் பிறகு அவர்களை நிறுத்தவே முடியாது. எந்தச் செயலை ஆரம்பித்தாலும் அதை முடிக்காமல் விட மாட்டார்கள். கருமமே கண்ணாக இருந்து சாதிக்க உழைப்பார்கள். சுற்றிப் பலர் இருந்த போதும் தன்னுடைய வேலையைத் திறமையாய் செய்ய வல்லவர்கள்.
- எந்தச் சூழலையும் சாதகமாக்கிக் கொள்ள வல்லவர்கள். சங்கடங்கள் ஏற்படும் போது அவற்றை மிகத் திறமையாய் கையாள வல்லவர்கள். கொக்கினைப் போல் சந்தர்ப்பங்களுக்காய் காத்திருந்து தங்கள் வாழ்க்கையை முன்னேற்றத் தெரிந்தவர்கள். அவர்கள் இயற்கையிலேயே உடலில் அபாய மணியை வைத்திருப்பவர்கள். துன்பம் வரும் முன் காக்க, செய்ய வேண்டிய செயல்களைச் செய்ய முயல்வார்கள்.
- வெளி விசயங்களில் அதிக நாட்டம் செலுத்துவார்கள். அடுத்தவர்களுக்கு அறிவுரை சொல்ல வல்லவர்கள். ஆனால் தங்கள் பிரச்சினைகளை அடுத்தவர்களிடம் சொல்லத் தயங்குவார்கள். அதனால் மற்றவர்கள் வாழ்க்கைச் சிக்கல்களில் இவர்களும் சிக்கித் தவிப்பார்கள்.
- எலிவாசிகள் பணத்திற்கு பெரிதும் முக்கியத்துவம் கொடுப்பார்கள். கால் காசுக்கும் கணக்கு பார்க்கும் தன்மை கொண்டவர்கள். எலிவாசிகளையும் பணத்தையும் பிரிப்பது மிகக் கடினம். எலிவாசிகளுக்கு பேரம் பேசுவது மிகவும் பிடிக்கும். அவர்கள் தேவையற்ற பொருட்களையும் மலிவாய் கிடைக்கிறதென்றால் வாங்கி விடுவார்கள். நினைவுப் பொருட்கள் அவர்களிடம் நிறையவே இருக்கும். பண விசயங்களில் அதிகக் கவனம் தேவை. சில சமயம் அவர்களின் கணிப்புகள் பொய்த்துப் போனால் அது அதிக நட்டத்தில் கொண்டு விட்டு விடும்.
- மாலையில் பிறந்த எலிவாசிகளுக்கு காலையில் பிறந்தவர்களை விடவும் சற்றே கடினமான வாழ்க்கையைப் பின்பற்ற வேண்டி வரும்.

**தொழில்**

- எலிவாசிகள் அதிபுத்திசாலிகள். நினைவாற்றல் மிக்கவர்கள். எதையும் எளிதில் கற்க வல்லவர்கள். உண்மையானவர்கள். அதிகம் படிக்க விரும்புவார்கள். தங்களைப் பற்றி அழகாய்க் கூறவும் எழுதவும்; தகுந்தவர்கள். துறுதுறுவென எதையாவது தெரிந்து கொள்ளும் ஆர்வம் உள்ளவர்கள்.

- எலிவாசிகள் இரகசியங்களைக் கட்டிக் காப்பதில் கை தேர்ந்தவர்கள். அடுத்தவர்களின் இரகசியங்களை அறியும் ஆர்வம் அவர்களிடத்தில் அதிகமாகவே இருக்கும். அவர்களின் இந்த விசயங்களைத் தெரிந்து கொள்ளும் ஆவல் அதிகமாய் இருப்பதின் காரணமாய், அவர்கள் தேர்ந்த எழுத்தாளர்களாய் இருப்பார்கள்.
- அவர்கள் இருக்கும் இடத்தில் அவரைப் போற்றும் கூட்டத்தவர்கள் இல்லாமல் இருக்க மாட்டார்கள். அவர்கள் மனதிற்கு பிடித்தமானவர்களாய் இருப்பார்கள். எப்போதும் பளிச்சென்று மகிழ்ச்சியுடன் இருக்கும் உருவ அமைப்பைப் பெற்றவர்கள். அதனால் அவர்கள் சமுதாயத்தில் மிகவும் போற்றத்தக்கவர்களாயும் அதிகமான வேலை உள்ளவர்களாயும் இருப்பார்கள். அவர்களுக்கு கூட்டங்களுக்குச் செல்லவும் விழாக்களுக்குச் செல்லவும் மிகவும் பிடிக்கும். அவர்கள் தனித்துவம் வாய்ந்த குழுக்களில் இருக்க விரும்புவார்கள். அவர்களுக்கு பல இரகசிய உளவாளிகள் இருப்பார்கள். எந்த விசயத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் அதிக ஈடுபாடு இருக்கும்
- மிகுந்த புத்தி கூர்மை, எளிதில் புரிந்து கொள்ளும் தன்மை காரணமாய் அவர்கள் உயர்ந்த பதவிகளை அடைய முயலலாம். அவர்களது குணம் காரணமாயும் சரியான முடிவு எடுக்கும் தன்மை காரணமாயும், பிரச்சினைகளுக்கு எளிதில் தீர்வு காணும் திறம் பெற்றவர்கள். அதனால் உயர் பதவிகளுக்குக் குறி வைக்கலாம். அது மதிப்பையும் செல்வாக்கையும் பெற்றுத் தரும். அவர்கள் நல்ல எஜமானர்களாயும் இருப்பார்கள். புதிது புதிதான காரியங்களைச் செய்ய விரும்புகிறவர்கள். அதனால் இசை வல்லுநர்கள், நகைச்சுவை வித்தகர்கள், அரசியல்வாதிகள், வழக்கறிஞர்கள், கார்ப் பந்தய வீரர்கள், ஆராய்ச்சியாளர்கள், இயக்குநர்கள், மேலாளர்கள், நிர்வாகிகள் என இருக்க முயலலாம். இவற்றில் அவர்கள் பிரகாசிக்க அதிக வாய்ப்புகள் கிட்டும்.

**உறவு**

உறவினர்கள் விசயத்தில் அவர்கள் மிகவும் தயாள குணம் மிக்கவர்கள். உறவினர்களை எப்போதும் ஆதரிக்க எண்ணுவார்கள். பெற்றோருக்கு அதிக மதிப்பு கொடுப்பார்கள். தங்கள் குழந்தைகளின் மேல் பாசம் மிகக் கொண்டவர்கள். அவர்களுக்கு குடும்பம், வீடு, மனைவி, மக்கள் மிகப் பிடித்தமான விசயங்கள். குடும்ப வாழ்க்கைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுப்பார்கள். அவர்களுக்கு சுற்றிலும் மனிதர்கள் இருக்க வேண்டும் என்று விரும்பும் காரணத்தால், எப்போதுமே புதிய புதிய மனிதர்களைச் சந்தித்துக் கொண்டே இருப்பார்கள். அவர்கள் உறவுகளைத் துண்டிக்க விரும்ப மாட்டார்கள். அதனால் சில நேரங்களில் புதிய நட்புகளை ஏற்க தடைகள் ஏற்படும். எலிவாசிகளுடன் நட்பு வைக்க விரும்புபவர்கள் அவர்களுக்கு இணையாய் சுறுசுறுப்பாய் இருக்க முயற்சி செய்வது நலம்.

**உடல் நலம்**

எலிவாசிகளின் உடல் நிலை பொதுவாய் நன்றாகவே இருக்கும். அவர்கள் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருக்கும் காரணத்தால், தங்கள் உடல் நிலையை நல்ல படியாகவும் நோய்களை எதிர்த்துப் போராடும் வகையிலும் வைத்துக் கொள்வார்கள். எலிவாசிகள் சஞ்சலமாய் இருக்கும் சமயத்தை எளிதாய் கண்டு கொள்ளலாம். அந்த சமயங்களில் மிகவும் அமைதியற்றவர்களாயும் கோபக்காரர்களாயும் இருப்பார்கள். அத்தகைய நேரங்களில் மன அழுத்தத்தால் தவிப்பார்கள். மனதை அமைதிப்படுத்தும் பயிற்சிகளை கற்றுக் கொள்ளுதல் நலம். மற்றொரு குறையும் அவர்களிடத்தில் உண்டு. ஒரே நேரத்தில் பல காரியங்களில்

ஈடுபடுவதே அது. தங்கள் சக்தியினை பல காரியங்களில் விரயம் செய்து அவற்றை முடிக்க முடியாமல் தவிப்பார்கள். இது உடலுக்கும் கேடு விளைவிக்கும்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர்கள் கலைஞர் கருணாநிதி, ஜெ. ஜெயலலிதா, விஞ்ஞானி சர். சி. வி. இராமன், முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர். எஸ். இராதாகிருஷ்ணன், விண்வெளி வீரர் ராகேஷ் சர்மா, நடிகை ஹேமமாலினி, கிரிக்கெட் வீரர்கள் சௌரவ் கங்குலி, முத்தையா முரளிதரன், நாமக்கல் கவிஞர், நடிகர் ராஜ் கபூர், ஆங்கிலக் கவிஞர் வில்லியம் ஷேக்ஸ்பியர், முதல் அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன், இசை வல்லுநர் உல்ப்காங் மோசர்ட், இளவரசர் சார்லஸ், ரஷ்ய எழுத்தாளர் லியோ டால்ஸ்டாய்

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் - 1, 4, 5, 10, 11, 14, 41, 45, 51, 54
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் - டிராகன், எருது, குரங்கு
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் - குதிரை, முயல், சேவல், ஆடு

**மூலகக் குணங்கள்**

எலிவாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்பு எலி** (ஜனவரி 24, 1936 - பிப்ரவரி 10, 1937 மற்றும் பிப்ரவரி 19, 1996 - பிப்ரவரி 06, 1997)

குணங்கள் ஆக்ரோசம், சுறுசுறுப்பு, போட்டிகளை எதிர் கொள்ளும் தன்மை, தன்னம்பிக்கை, மன உறுதி, கொள்கை பிடிப்பு போன்ற குணங்களைக் கொண்டவர்கள். துடுக்குத்தனமானவர்கள். பயணம் செல்வது விரும்பத் தக்க விசயம். புதிய வேலைகளை விரும்பி ஏற்பார்கள். ஒரே மாதிரியான வேலை ஏற்படுத்தும் சோர்விலிருந்து தப்பிக்க வித்தியாசமான வேலைகளைச் செய்ய துடிப்பர். பிறரால் விரும்பப்படுபவர்கள்.

**மர எலி** (பிப்ரவரி 05, 1924 - ஜனவரி 24, 1925 மற்றும் பிப்ரவரி 02, 1984 - பிப்ரவரி 19, 1985)

குணங்கள் ஆவல், உள்ளுணர்வு, எளிதில் புரிந்து கொள்ளுதல், சூழலுக்குகேற்ப மாறுதல், சிரத்தை போன்ற குணங்களைக் கொண்டவர்கள். வெளித்தோற்றத்தில் தன்னம்பிக்கை மிக்கவர்களாய் தோன்றிய போதும், தங்களது குறைகளை வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள். தோல்வியைக் கண்டு அஞ்சிய போதும், அவர்கள் வெற்றி பெறுவது நிச்சயம். நண்பர்களுடனும் குடும்பத்தாருடனும் இருப்பது இன்பம் தரக் கூடியது. அன்பும் மதிப்பும் அவர்கள் விரும்பும் பண்புகள்.

**பூமி எலி** (பிப்ரவரி 10, 1948 - ஜனவரி 28, 1949 மற்றும் பிப்ரவரி 07, 2008 - ஜனவரி 25, 2009)

குணங்கள் நம்பிக்கை, தெளிவாய் ஆராய்ந்து முடிவு எடுத்தல், மாறுதல்களில் விருப்பம், தூய்மை போன்ற குணங்களைக் கொண்டவர்கள். ஸ்திரத் தன்மை, வெற்றிகரமாய் வேலையை

முடிக்க வேண்டும் என்ற ஆழமான பற்றுதல் விரும்பப்படும் குணங்கள். மெதுவாய், நிதானமாய்க் காரியங்களைச் செய்வதையே சிறந்த வழி என்று எண்ணுவார்கள்.

**உலோக எலி** (ஜனவரி 31, 1900 - பிப்ரவரி 18, 1901 மற்றும் ஜனவரி 28, 1960 - பிப்ரவரி 14, 1961)

குணங்கள் எளிதில் உணர்ச்சி வசப்படும் தன்மை, உயர்ந்த கொள்கையுடன் இருத்தல், எண்ணங்களால் தன்னைத்தானே ஊக்குவித்தல், எதையும் விட்டு கொடுக்காமை போன்ற குணங்களைக் கொண்டவர்கள். எவ்வளவு விலையாயினும், தாங்கள் விரும்பியதைப் பெற விடாப்பிடிக் கொள்கையுடன் அலைவார்கள். பொறாமை, பேராசை, ஆளுமை பிரச்சினைகளைக் கொண்டு வரும். உறவுகளில் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

**நீர் எலி** (பிப்ரவரி 18, 1912 - பிப்ரவரி 05, 1913 மற்றும் பிப்ரவரி 15, 1972 - பிப்ரவரி 02, 1973)

குணங்கள் விவேகம், ஞானம், கல்வியால் ஊக்கம், எளிதில் புரிந்து கொள்ளுதல் போன்ற குணங்களைக் கொண்டவர்கள். வசீகரத் தன்மையுடையவர்கள். சாமர்த்தியச்சாலிகள். ஆழ்ந்த அறிவு பெற்றவர்கள். சிந்தனையாளர்கள். பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் சமர்த்தர்கள். நடைமுறைவாதிகள். புரிந்து கொள்ளும் தன்மை எல்லோரிடமும் நன்கு பழகவும், பலராலும் விருப்பப்படுபவராகவும் செய்யும்.

நீங்கள் எலி வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனர்.

**எலி வருடப் பலன்கள்**

சந்தர்ப்பம், நல்ல எதிர் காலம் இந்த வருடத்தின் முக்கியாம்சங்கள். தொழில் துறை பொதுவாய் நன்றாய் இருந்தாலும், வருடத்தின் பிற்பகுதியில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டு வியாபாரங்களில் கஷ்ட நஷ்டங்கள் ஏற்படும்.



## 2. எருது



- ✓ ஆண்டுகள் - 1901,1913,1925,1937,1949,1961,1973,1985,1997,2009,2021,2033,2045)
- ✓ நேரம் - இரவு 1:00 முதல் 3:00 வரை
- ✓ உரிய திசை - வடக்கு, வட கிழக்கு
- ✓ உரிய காலங்கள் - குளிர் காலம், ஜனவரி மாதம்
- ✓ நிலையான மூலகம் - நீர்
- ✓ யின் - யாங் யின்

ஒரு முறை வருடச் சக்கரத்தின் முதல் இடத்தைப் பெற விலங்குகளிடையே சண்டை மூண்டது. கடவுளர்களிடம் இந்தப் பிரச்சினை எடுத்துச் செல்லப்பட்டது. அவர்கள் இதற்குத் தீர்வு காண விலங்குகளுக்கு ஒரு ஆற்றை கடக்கும் போட்டியை வைத்தனர். யார் முதலாவதாய் வருகிறார்களோ அவர்கள் முதல் வருடத்திய சின்னமாயும் அடுத்து வருபவர்கள் வருகின்ற வரிசைப்படி சின்னமாய் கொள்ளப்படுவர் என்றும் தீர்மானிக்கப் பட்டது.

ஒரு நாள் எல்லா விலங்குகளும் ஆற்றின் கரையில் அணிவகுத்து நின்றன. போட்டியும் ஆரம்பமானது. எருதுக்குத் தெரியாமல் எலி அதன் மேல் சவாரி செய்தது. எருது அக்கரையைச் சேரும் போது, அதற்குத் தெரியாமல் சவாரி செய்த எலி, அதற்கு முன்பாய்க் கரையில் குதித்து முதல் இடத்தைப் பெற்றது. எருது இரண்டாவது இடத்தைப் பெற்றது.

இந்தக் கதை எருது ஏன் இரண்டாவதாய் வந்தது என்பதைக் குறித்துக் கூறப்படும் கதை.

கீழ்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் எருது வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ பிப்ரவரி 19,1901 - பிப்ரவரி 07,1902
- ➢ பிப்ரவரி 06,1913 - ஜனவரி 25,1914
- ➢ ஜனவரி 25,1925 - பிப்ரவரி 12,1926
- ➢ பிப்ரவரி 11,1937 - ஜனவரி 30,1938
- ➢ ஜனவரி 29,1949 - பிப்ரவரி 16,1950
- ➢ பிப்ரவரி 15,1961 - பிப்ரவரி 04,1962
- ➢ பிப்ரவரி 03,1973 - ஜனவரி 22,1974
- ➢ பிப்ரவரி 20,1985 - பிப்ரவரி 08,1986
- ➢ பிப்ரவரி 07,1997 - ஜனவரி 27,1998
- ➢ ஜனவரி 26,2009 - பிப்ரவரி 13,2010

**குணங்கள்**

- ❖ எருது வருடத்தில் பிறந்தவர்கள் சாந்தமானவர்கள் போல் காணப்படுவார்கள். ஆனால் ஜாக்கிரதை. அவர்கள் மிகவும் கோபக்காரர்கள். அவர்கள் தன்னம்பிக்கை மிக்கவர்கள்.

தங்களது குறிக்கோளை அடைய தொடர்ந்து அயராது பாடுபடத் தயங்க மாட்டார்கள். படிப்படியாய்த் தங்கள் குறிக்கோளை எட்ட முயற்சி செய்வார்கள். அவர்கள் பிடிவாதக்காரர்கள். கர்வம் மிக்கவர்கள். வெளிப்பார்வையில் அவர்கள் அமைதியாய் இருந்தாலும் அவர்கள் இறுமாப்பு மிகக் கொண்டவர்கள்.

- எருதுவாசிகள் பண்பாட்டை மதிப்பவர்கள். நேர்த்தியாய் தங்களை வைத்துக் கொள்வார்கள். அவர்களது பார்வையிலிருந்து எதுவுமே தப்ப முடியாது. எதையும் வெளிப்படையாகவே பார்ப்பார்கள். எருதுவாசிகள் மிகவும் வேகமாய் விசயங்களை கிரகிக்க வல்லவர்கள். விசயத்தின் நல்லது கெட்டதை உடன் புரிந்து செயல்படுவர். தங்களுக்குப் புரியாத விசயங்களை நம்ப மாட்டார்கள். நல்லது அல்லது கெட்டது என்பதை மட்டுமே பார்ப்பார்கள்.
- எருதுவாசிகள் மிகவும் சுத்தமாகவும், உண்மையாகவும், உழைப்பாளிகளாகவும் இருப்பார்கள். அவர்களுக்கு நல்ல நினைவாற்றல் இருக்கும். மற்றவர்கள் மறக்கும் சில சிறிய விசயங்களையும் நினைவுப்படுத்தி சொல்லக் கூடியவர்கள். ஒரு வாரம், ஒரு மாதம், ஒரு வருட விசயங்ளையும் நினைவில் வைத்துக் கொள்ளத் தக்கவர்கள். அவர்களுக்கு வருத்தம் ஏற்படும் போதும், துன்பம் வந்த போதும் மன அமைதி ஏற்படும் வரை ஏதாவது வேலையில் தங்களை ஆழ்த்திக் கொண்டு விடுவார்கள்.
- எருதுவாசிகள் உதவி கேட்க வெறுப்பவர்கள். ஒரு செயலைச் செய்ய இரண்டு மடங்கு நேரமும் முயற்சியும் தேவையானாலும் கூட, அதை யாருடைய உதவியும் இன்றி தாங்களாய்ச் செய்ய முயல்வார்கள். அடுத்தவர்களை எதிர்பார்க்க மாட்டார்கள். பிறர் செய்யும் காரியங்களைக் கவனமாய்க் கவனித்து, தங்களை பலப்படுத்திக் கொள்வார்கள்.
- நெடுநாளைய மூதலீடுகளை மிகவும் திறமையுடன் கையாள வல்லவர்கள். அவர்கள் பெரும்பாலும் சூதாட்டத்தில் கவனம் செலுத்த மாட்டார்கள். அவர்கள் தங்கள் குணத்தாலும் முயற்சியாலும் தங்கள் வெற்றியைத் தேடிச் செல்வார்கள். அதிர்ஷ்டத்தையும் அடுத்தவர் உதவியையும் என்றுமே நம்ப மாட்டார்கள்.
- எருதுவாசிகள் தங்கள் கடன்களை எப்போதும் அடைத்து விடுவார்கள். அவர்கள் யாருக்கேனும் கடன்பட்டு இருந்தால், அதன் கடைசி காசைக் கொடுக்கும் வரை ஓய மாட்டார்கள். அவர்கள் நன்றி மறவாதவர்கள். தங்கள் நன்றியை அழகு வார்த்தைகளில் பேசாவிட்டாலும், பல வழிகளில் தங்கள் நன்றியைக் காட்டுவார்கள். அவர்களது செயல்கள் அவர்களது வார்த்தைகளை விட அதிகம் பேசும்.
- எருதுவாசிகளின் தன்னம்பிக்கை அதிகமாய் இருக்கும் காரணத்தால், மற்றவர்களை ஊக்குவிக்க வல்லவர்கள். பெரும்பாலும் அமைதியும், பொறுமையும் கொண்டவர்களாதலால், அளவாகவே பேசுவார்கள். வேண்டிய போது பேசுவனவற்றை வார்த்தைச் சுத்தமாயும் கவனமாயும் பேசுவார்கள்.
- குறுக்கு வழியை நம்பாதவர்கள். உழைக்க விருப்பமில்லாதவர்களையும் சோம்பேறிகளையும் மதிக்கத்தகாதவர்களாய் எண்ணுபவர்கள். அடுத்தவர்களின் அபிப்பிராயத்தை திறந்த மனம் கொண்டு கேட்டுக் கொள்வார்கள். தங்களது அறிவார்ந்த ஆராய்ச்சியின் அடிப்படையிலேயே முடிவுகளை எடுப்பார்கள். வயதான காலத்தில் அதிக மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.
- இந்த வருடத்தில் பிறந்தவர்களிடம் உள்ள கெட்ட குணம் பிடிவாத குணம். குறுகிய மனம் கொண்டு செயல்படுதல் மற்றவர்களுடனான நட்பைக் குறைக்கும்.

**தொழில்**

- எருதுவாசிகள் மிகவும் நம்பகமானவர்கள். வேலையை முடிக்கும் வரை தங்களது செயல்களைத் திட்டமிட்டுத் தொடர்ந்து செய்த வண்ணம் இருப்பார்கள். அவர்கள் நடுநிலை கொண்டவர்கள். இவ்வளவு நற்குணங்கள் கொண்ட போதும் அவர்களது அடமும் கோபமும் சில சமயம் அவர்களது பலவீனங்களாய் அமைந்து விடும்.
- எருதுவாசிகளின் நம்பகமான தன்மையின் காரணமாய் அவர்கள் பல நேரங்களில் உயர்ந்த அதிகாரத்திலும் பொறுப்புகளிலும் இருப்பவர்களாய் திகழ்வார்கள். அவர்கள் உலகில் எல்லாரையும் விட மேலே மேலே செல்ல விருப்பம் கொண்டவர்கள். அவர்கள் தாங்கள் செய்யும் தொழிலுக்கு மட்டும் அடிமையாகாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். எருதுவாசிகள் சமயம் வரும்போது தலை சிறந்த தலைவர்களாகவும், பேச்சாளர்களாகவும் இருப்பார்கள். கடினமான நேரங்களிலும் கூட அவர்கள் அறிவு தறிகெட்டுப் போகாமல் சரியான வழியில் செயல்படும் தன்மை கொண்டவர்கள்.
- ஒரே மாதிரியான வேலையைச் செய்ய விரும்புவார்கள். ஆனால் செய்யும் வேலையைக் கோர்வையாகவும், நேர்த்தியாகவும் செய்ய முயல்வார்கள். எதையும் கவனமாய்ச் செய்ய எண்ணுவார்கள். எருதுவாசிகள் கூட்டு முயற்சிகளில் அதிகம் கலந்து கொள்ள மாட்டார்கள். வீண் பேச்சுக்கும் ஆடம்பர பகட்டுக்கும் இடம் தர மாட்டார்கள்.
- அவர்களின் பிறவிக்குணமே தலைமை தாங்கும் குணம். அவர்கள் கைத்திறன் மிக்கவர்கள் என்பதால் மருத்துவர்களாகவும், அறுவை சிகிச்சை நிபுணர்களாகவும், கட்டிட வல்லுநர்களாகவும் இருக்கத் தகுந்தவர்கள். போர் வீரர்களாகவும், வியாபார வல்லுநர்களாகவும் இருக்கலாம்.

**உறவு**

அவர்கள் குடும்பத்தை அன்புடன் கவனித்துக் கொள்வார்கள். வீட்டை அதிகம் விரும்புவார்கள். குடும்பத்தினருக்கு தேவையானவற்றை சரியான நேரத்தில் தர வல்லவர்கள். தங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தங்கள் பங்கிற்கு நிறையவே செய்யக் கூடியவர்கள்.

தாங்கள் விரும்புபவர்களிடம் அடங்காத விசுவாசம் கொள்பவர்கள். அவர்கள் எதிரிகளை எப்படி எதிர்ப்பார்கள் என்று சொல்லவே முடியாது. அதனால் எருதுவாசிகளை எதிர்க்க முயலாதீர்கள். அவர்களுடன் நெருங்கிய நட்பு கொள்வதற்கு பல காலம் பழக வேண்டியிருக்கும். ஆனால் பழகிவிட்டாலோ, அது மிகவும் பலமான நட்பாய் அமையும். அவர்கள் ஒருவர் மேல் நம்பிக்கை வைத்து விட்டால் அவர்களுக்கு மிகவும் நம்பகமாகவும் அன்புடனும் நடந்து கொள்வார்கள்.

தனக்குத் தகுந்த கூட்டாளிகளை நீண்ட நாட்கள் பழகிய பின்னரே தேர்வு செய்து கொள்வார்கள். உறவில் மாற்றங்களை விரும்ப மாட்டார்கள். எருதுவாசிகளுக்கு ஒருவர் மேல் நம்பிக்கை போய்விட்டாலும், கோபம் ஏற்பட்டாலும் அதைச் சீர் செய்து மீண்டும் உறவைப் புதுப்பித்துக் கொள்வது மிகவும் கடினம். பெண்கள் சிறந்த குடும்பத்தலைவிகளாய்த் திகழ்வார்கள். குழந்தைகளின் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்துச் செயல்படுவார்கள்.

**உடல் நலம்**

அவர்கள் பொதுவாகவே மிகவும் நல்ல உடல்நிலையைக் கொண்டவர்கள். அவர்கள் நோய்வாய்ப்படுவது மிகவும் கடினம். அதனால் அவர்கள் பலமில்லாதவர்களிடம் பழக விரும்ப மாட்டார்கள். அவர்கள் மனதை அமைதியாய் வைத்துக் கொள்ளும் பயிற்சிகளைச் செய்தல் நலம் சேர்க்கும். எருதுவாசிகள் வீட்டிலே இருப்பதையே வசதியாய் எண்ணுவார்கள். வேலைகளைத் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கும் காரணத்தால் ஓய்வு பற்றிய கவனம் இருக்காது. எருதுவாசிகளுக்கு கோபம் ஏற்பட்டால், அவர்கள் இருக்கும் இடம் இரண்டு பட்டுவிடும். அந்த நேரங்களில் எந்த வார்த்தைகளும் எடுபடாது. அவர்களாய் அமைதியாகும் வரை பொறுக்க வேண்டும்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

முன்னாள் குடியரசுத் தலைவர் நீலம் சஞ்ஜிவ ரெட்டி, டென்னிஸ் வீரர்கள் லியன்டர் பியஸ், ரமேஷ் கிருஷ்ணன், கிரிக்கெட் வீரர்கள் சச்சின் தெண்டுல்கர், தினேஷ் கார்த்திக், விஞ்ஞானி ஹோமி பாபா, நடிகர் ஹிருதிக் ரோஷன், நடிகை ஐஸ்வர்யா ராய் பச்சன், பிரான்சு மன்னன் நெப்போலியன் போனபார்ட், கார்ட்டூன் நிபுணர் வால்ட் டிஸ்னி, அமெரிக்க ஜனாதிபதி ரிச்சர்ட் நிக்சன், நடிகர் சார்லி சாப்லின்.

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் - 1, 5, 12, 15, 33, 35, 51, 53
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் : எலி, சேவல், பாம்பு
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் : புலி, குதிரை, ஆடு

**மூலகக் குணங்கள்**

எருதுவாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்பு எருது** (பிப்ரவரி 11,1937 - ஜனவரி 30,1938 மற்றும் பிப்ரவரி 07,1997 - ஜனவரி 27,1998)

சக்தி வாய்ந்த, பணத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும், போராடும் தன்மை கொண்டு, குறிக்கோளாடு வாழும் குணங்களைக் கொண்டவர்கள். பிறவித் தலைவர்கள். வேலையிலும், சமூகத்தில் முக்கியப் பொறுப்புகளில் இருப்பார்கள். பிறரின் கருத்துக்களை சமயங்களில் ஏற்காமல் சிக்கல்களில் மாட்டிக் கொள்ளக் கூடியவர்கள்.

**மர எருது** (ஜனவரி 25,1925 - பிப்ரவரி 12,1926 மற்றும் பிப்ரவரி 20,1985 - பிப்ரவரி 08,1986)

ஐதிகத்தில் நம்பிக்கை, எந்தச் சூழலையும் ஏற்றல், நீதி நெறிப்படி வாழ்தல், நடுவு நிலைமை, உண்மையுடன் ஊக்கத்துடன் செயல்படுதல் போன்ற குணங்களைக் கொண்டவர்கள். குழுவில் நன்கு செயல்பட்டாலும், அவர்களின் அணுகுமுறை, தன்னம்பிக்கை, நன்னடத்தை காரணமாய், அவர்கள் குழுத் தலைவராய் இருந்தால் மேலும் சிறப்பாய் செயலாற்றுவார்கள். எளிதில் கோபப்படுபவர்கள். துடுக்குத்தனமாய் பேசக் கூடியவர்கள்.

**பூமி எருது** (ஜனவரி 29,1949 - பிப்ரவாp 16,1950 மற்றும் ஜனவரி 26, 2009 - பிப்ரவரி 13, 2010)

துணிவு, சகிப்புத் தன்மை, பொறுமையுடன் செயல்படுதல், குறிக்கோளை நோக்கி பயணிக்கும் குணங்களைக் கொண்டவர்கள். கடின உழைப்பால் தனி மனிதராய் சாதிக்க வல்லவர்கள். மிதமான போக்கும், கண்ணியமும் பிறரால் விரும்பப்படுபவர்களாய்த் திகழச் செய்யும்.

**உலோக எருது** (பிப்ரவரி 19,1901 - பிப்ரவாp 07,1902 மற்றும் பிப்ரவரி 15,1961 - பிப்ரவரி 04,1962)

எதிர்த்துப் போராடும் தன்மை, கர்வம், பளிச்சென்று இருத்தல், திட நம்பிக்கை தரும் ஊக்கத்தால் செயல்படுதல் போன்ற குணங்களைக் கொண்டவர்கள். உலோகத்தைப் போன்றே மிக வலிமை மிக்கவர்கள். தங்கள் குறிக்கோளை அடைய கடினமாய் உழைக்கத் தயாராய் இருப்பார்கள். உணர்ச்சிகளை எளிதில் வெளிக்காட்ட மாட்டார்கள். நம்பகமானவர்கள். பிறரது உணர்வுகளை புரிந்து கொள்வதில் சங்கடங்கள் இருக்கும்.

**நீர் எருது** (பிப்ரவரி 06,1913 - ஜனவரி 25,1914 மற்றும் பிப்ரவரி 03,1973 - ஜனவரி 22,1974)

காரியங்களை முறையாய்ச் செய்தல், மனோபலத்தின் மூலம் ஊக்கம் கொண்டு செயல்படுதல், பொறுமை, அனுபவத்தை நம்பும் குணம், நடுவு நிலைமை போன்ற குணங்களைக் கொண்டவர்கள். வளைந்து கொடுக்கும் தன்மை காரணமாக பிறரது எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் மதிப்புக் கொடுப்பார்கள். இவர்களுடன் இருப்பதை பலர் விரும்புவர்.

நீங்கள் எருது வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனர்.

**எருது வருடப் பலன்கள்**

எவ்வளவு கவனமாய் உழைத்துப் பாடுபட்டாலும் வெற்றி நழுவிச் சென்று விடும். குடும்பச் சிக்கல்கள் நிறைய ஏற்பட்டு தொடர்ந்து கஷ்டங்களைத் தரும். அந்த வருடத்தில் ஒழுக்கம் நிறைய தேவைப்படும். குறுக்கு வழிகள் நன்மை தராது.



## 3. புலி



- ✓ ஆண்டுகள் - 1902 1914 1926 1938 1950 1962 1974 1986 1998 2010 2022 2034 2046
- ✓ நேரம் இரவு 3:00 முதல் 5:00 வரை
- ✓ உரிய திசை கிழக்கு, வட கிழக்கு
- ✓ உரிய காலங்கள் குளிh;காலம், பிப்ரவாp மாதம்
- ✓ நிலையான மூலகம் மரம்
- ✓ யின்-யாங் யாங்

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி முதலிலும் எருது இரண்டாவதாயும் வந்து முதல் இரண்டு வருடங்களின் சின்னங்களாய் தெரிவு செய்யப்பட்டன. எத்தனை வலியதாய் இருந்த போதும் புலி மூன்றாவது இடத்தையேப் பிடிக்க முடிந்தது. இது அவர்களை ஆச்சர்யத்திற்கு உள்ளாக்கியது. காரணம் கேட்ட போது, புலி நீந்தி வரும் போது ஆற்றின் வேகம் அதிகமாய் இருந்ததாலும் மிகவும் சிரமப்பட்டு அதை எதிர்த்து நீந்தி வந்த காரணத்தாலும் சிறிது தாமதம் ஏற்பட்டது என்று புலியார் கூறியதாய் கதை ஒன்று உண்டு.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் புலி வருடத்தைச் சோ;ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ பிப்ரவரி 08,1902 - ஜனவரி 28,1903
- ➢ ஜனவரி 26,1914 - பிப்ரவரி 13,1915
- ➢ பிப்ரவரி 13,1926 - பிப்ரவரி 01,1927
- ➢ ஜனவரி 31,1938 - பிப்ரவரி 18,1939
- ➢ பிப்ரவரி 17,1950 - பிப்ரவரி 05,1951
- ➢ பிப்ரவரி 05,1962 - ஜனவரி 24,1963
- ➢ ஜனவரி 23,1974 - பிப்ரவரி 10,1975
- ➢ பிப்ரவரி 09,1986 - ஜனவரி 28,1987
- ➢ ஜனவரி 28,1998 - பிப்ரவரி 15,1999
- ➢ பிப்ரவரி 14,2010 - பிப்ரவரி 02, 2011

**குணங்கள்**

- ❖ சீன சோதிடத்தில் மிகவும் சுறுசுறுப்புக்கு பேர் போன சக்தி வாய்ந்த சின்னம் இது. புலிவாசிகள் வசீகரத்தற்கும், அதிகாரத்திற்கும், எரிச்சலுக்கும் பேர் போனவர்கள். அவர்கள் வடிவத்தில் சிறுத்த போதும் கம்பீரமானவர்கள். பொறுமைசாலிகளானாலும்

கோபக்காரர்கள். அமைதியானவர்களானாலும் எதிர்க்க வல்லவர்கள். அச்சுறுத்தினாலும் அன்பானவர்கள்.

- அவர்களிடம் இருக்கும் பல்வேறுபட்ட இந்த குணங்களின் காரணமாய் அவர்கள் தங்களுடைய மனத்தை நிலை நிறுத்த சற்றே கடினமாய் உணர்வார்கள். அவர்கள் தன்மையைக் குறிப்பிட்டுச் சொல்வது மிகக் கடினம். புலிவாசிகள் அதிக தற்பெருமை கொண்டவர்கள். பொறாமை கொண்டவர்கள்.
- புலிவாசிகள் கட்டுக்குள் இருக்கும் போது தெரிந்த சூழலில் மிகவும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். அவர்கள் தங்கள் உணர்வுகளைக் கட்டுக்குள் வைக்காமல் போனால், பல பிரச்சினைகளைச் சந்திக்க நேரும். அவர்களின் வாழ்க்கை முழுவதுமே உணர்ச்சிப் பூர்வமாய் இருக்கும். அதுவே அவர்களுக்கு பிடித்த குணமும் கூட. வாழ்க்கையை விரும்பி வாழ வேண்டும் என்ற மனோநிலையைக் கொண்டவர்கள். நிறைவாய் வாழ வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள்.
- ஏதாவது ஒரு தீரச் செயலில் ஈடுபட வேண்டுமென்றாலும் நொடியில் முடிவு செய்து காரியத்தில் இறங்கத் தயங்க மாட்டார்கள். புலிவாசிகள் புதிய புதிய சவால்களைச் சந்திக்கப் பாய்வார்கள். பணத்திற்கும் அதிகாரத்திற்கும் செவி சாய்க்க மாட்டார்கள், மயங்க மாட்டார்கள்.
- அவர்கள் உணர்வுப்பூர்வமானவர்கள். தங்களுக்காகவோ அல்லது உறவினர்கள் நண்பர்களுக்காகவோ முன்னின்று பேச வேண்டிய, செய்ய வேண்டிய சமயங்களில், அச்சமற்று தங்களை முன்னிலைப் படுத்திக் கொண்டு செயல்படுவர். சமுதாயத்தில் இருக்கும் அநீதிகளை எதிர்க்கத் துணிவார்கள். சரியான கருத்துக்களை ஏற்று, அதன்படி சமுதாயம் நடக்க வேண்டும் என்று அதற்கான காரியங்களில் ஈடுபட முயல்வார்கள்.
- அவர்களுக்குத் துணிகரமான செயல்களில் ஈடுபட மிகவும் பிடிக்கும். புலிவாசிகள் ஒப்பிட்டுக் கூறமுடியாத அளவிற்கு மிகுந்த தைரியசாலிகள். போர்க்காலங்களில் முன் நிற்க வல்லவர்கள். மக்கள் மனதைத் தன் பக்கம் ஈர்ப்பதில் அரசர்கள். அவர்களது கம்பீரமான தோற்றம், செயல் மற்றவர்களை அவர்கள் பால் ஈர்க்கும் தன்மை கொண்டது. புலிவாசிகள் எப்போதும் உண்மையின் பக்கமே நிற்பதன் காரணமாய், அவர்கள் நல்லவற்றிற்காய் போராடி, இறுதி வரை போராடி வெல்ல முயல்வார்கள்.
- கோபப்பட்டாலும் அவர்கள் உண்மையானவர்களாகவும் தாராள மனம் உள்ளவர்களாகவும் அன்பானவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் நகைச்சுவைத் தன்மை கொண்டவர்கள். அவர்கள் மக்களிடமும் சமுதாய நலனிலும் மிகுந்த அக்கறை கொண்டவர்கள். புலிவாசிகள் செய்வதை ஒத்துக் கொள்ளாதவர்களும் கூட உள்ளுக்குள் அவர்களைப் போற்றுவார்கள்.
- புலி காட்டின் அரசனாய் இல்லாத போதும், மிகச் சாதாரண விலங்கன்று. புலிவாசிகள் திறமை வாய்ந்த சுயப்பற்று மிக்க மனிதர்கள். அவர்கள் வசீகரமானவர்களாகவும் நகைச்சுவைத் தன்மை கொண்டவர்களாகவும் இருந்த போதிலும், சில நேரங்களில் தனிமையை விரும்புவார்கள். புலிவாசிகளின் பலமான குணம் வாழ்க்கையில் உயரும் நோக்கமும் அதை அடைய இருக்க வேண்டிய கட்டுப்பாடும் தான்.
- புலிவாசிகளுடன் பழகும் போது சற்றே ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். அவர்கள் எப்போது பாய்வார்கள் என்றே சொல்ல முடியாது. அவர்களது உணர்வுகள் அதிகமாகவே ஊசலாட வல்லது. இத்தகைய குணம் சில சமயம் அவர்களுக்கு சாதகமாகவும் பாதகமாகவும் அமைகிறது.

- புலிவாசிகள் கற்றுக் கொள்ள வேண்டிய விசயம் எல்லாவற்றிலும் மிதமாய் நடந்து கொள்வது. அவர்களது சக்தியை ஒருமுகப்படுத்திச் செயல்பட்டால் அவர்களால் எதையும் நல்லபடியாய் சாதிக்க முடியும். அவர்கள் எப்போதும் எந்தக் கூட்டத்திலும் தங்களைக் குறிப்பிட்டுக் காட்டிக் கொள்ளும்படி நடந்து கொள்வார்கள். அவர்கள் எப்போதும் செயல்கள் செய்து கொண்டே இருக்க விரும்புவார்கள். சும்மா இருப்பது சுகமன்று என்ற எண்ணம் கொண்டவர்கள்.

- எவ்வளவு தாழ்ந்த நிலையை அடைந்த போதும் அவர்கள் மனம் தளர மாட்டார்கள். முதலிலிருந்து ஆரம்பிக்க வேண்டுமென்றாலும் அதைச் செய்யத் தயங்க மாட்டார்கள்

**தொழில்**

- பிறவியிலேயே தலைமை தாங்கும் குணம் கொண்டவர்கள். அவர்களிடம் இருக்கும் அதிகாரத் தன்மை அவரருகே இருக்கும் அனைவரையும் அவர்கள் விரும்பியபடி வழி நடத்திச் செல்ல உதவும்.
- வேலை இடங்களில் அவர்கள் தங்களுக்குள் இயற்கையாகவே அமைந்த தலைமை குணத்தைப் பயன்படுத்த முயல்வர். அப்படி இருந்த போதும், அவர்கள் தனியே வேலை செய்ய விரும்புவார்கள். அவர்கள் வியாபார வல்லுநர்களாகவும், சமுதாயப் போராட்ட வீரர்களாகவும், ஆராய்ச்சியாளர்களாகவும், பயணக்குறிப்பாளர்களாகவும், நடிகர்களாகவும், விமான ஓட்டுநர்களாகவும், எழுத்தாளார்களாகவும் இருக்கத் தகுந்தவர்கள்.

**உறவு**

அன்பு கொண்டவர்களிடம் காட்டும் பரிவும் நம்பிக்கையும் அவர்களை வசீகரமானவாகளாயும், ஆளும் தன்மை உள்ள உருவம் கொண்டவர்களாயும் காட்டும். புலிவாசிகள், பழகுகிறவர்களிடம் மதிப்பும் மரியாதையும் எளிதில் பெற்று விடுவார்கள். புலிவாசிகளின் கூட்டாளிகளும் அவர்களுக்கு இணையாய் சுறுசுறுப்பாய் இருப்பது நல்லது. அவர்கள் உறவுகளில் தங்களது ஆதிக்கத்தைக் காட்டுவார்கள். இங்கிதமாய் நடந்து கொள்பவர்களைக் கண்டால் அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். பற்பல பரிசுகளைத் தந்து அவர்களை ஆதரிக்கத் தயங்க மாட்டார்கள். விருந்து வைத்தால், விருந்தாளிகளை மிகவும் அன்புடனும் ஆதரவுடனும் கவனித்துக் கொள்வார்கள். அவர்கள் உணர்வுகளைப் புண்படுத்தும்படி நடந்து கொள்வது நல்லதல்ல. அவர்கள் எளிதில் யாரையும் மன்னிக்க மாட்டார்கள்.

**உடல் நலம்**

பாதிப்புக்குள்ளாகும் போது மிகவும் மோசமாய் நடந்து கொள்வார்கள். உணர்ச்சிக் கொந்தளிப்பில் மூழ்கி விடுபவர்கள். அவர்களின் செயல்கள் நண்பர்களையும் பகைவர்களையும் மிகவும் அச்சுறுத்தும். புலிவாசிகளுக்கு உடலில் ஏதும் காயம் பட்டால் அவர்கள் எல்லாரின் அனுதாபத்தையும் எதிர்பார்ப்பார்கள். எந்த வித லாஜிக்கும் பார்க்க மாட்டார்கள். அவர்களுக்கு உடல்நிலை சீராவதே முக்கிய நோக்கமாய் இருக்கும். அதனால் யார் எதைச் சொன்னாலும் அதை சிரமேற்கொண்டு அப்படியே செய்ய முற்படுவார்கள். வேலை செய்வதில் மற்ற எல்லா விசயங்களையும் மறந்து விடுவார்கள். அதனால் விரைவில் களைப்படைந்து விடுவார்கள். பிறகு வெகு விரைவிலேயே பாயத் தயாராகி விடுவார்கள். அதனாலேயே அவர்களின் உடல் நிலை பாதிப்புக்கு உள்ளாகும். அதனால் வாழ்க்கையைச் சமநிலையுடன் எடுத்துக் கொள்ளும் தன்மையைப் பெற முயல வேண்டும்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

எழுத்தாளர் தேவநேயப் பாவாணர், மூதறிஞர் ராஜாஜி, நடிகர் ரஜினிகாந்த், பாடகி எஸ். ஜானகி, நடிகர் விஜய், டென்னிஸ் வீரர்கள் மகேஷ் பூபதி, சானியா மிர்சா, ரஷ்யாவின் காரல் மார்க்ஸ், நடிகை மர்லின் மன்ரோ, வெனிஸ் நகர வாணிகன் மார்க்கோ போலோ, இரண்டாம் எலிசபெத், நடிகர் டாம் குரூஸ்

- ✓ அதிர்ட எண்கள் 4, 5, 7, 9, 13, 34, 44, 45, 54
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் : நாய், குதிரை, டிராகன்
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் : ஆடு, எருது, குரங்கு

**மூலகக் குணங்கள்**

புலிவாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன சோதிடம் நம்புகிறது.

**நெருப்புப் புலி** (பிப்ரவரி 13,1926 - பிப்ரவரி 01,1927 மற்றும் பிப்ரவரி 09,1986 - ஜனவரி 28,1987)

உதார குணம், உதவும் தன்மை, ஆர்வம், ஊக்கம் போன்ற குணங்களின் இருப்பிடம். நல்ல பக்கத்தையே பார்க்கும் சுபாவம் உள்ளவர்கள். மற்றவர்களை மகிழ்விக்கும் பண்பு கொண்ட காரணத்தால் தலைவர்களாய் இருப்பாh;கள்.

**மரப் புலி** (ஜனவரி 26,1914 - பிப்ரவரி 13,1915 மற்றும் ஜனவரி 23,1974 - பிப்ரவரி 10,1975)

வசீகரம், தலைமை, கூட்டுறவில் நாட்டம், பொறுமை, உதவும் மனப்பான்மை போன்ற குணங்களைக் கொண்டவர்கள். பிறருடன் இணைந்து பணியாற்ற வேண்டிய போது சிறப்பாய் செயல்படுவார்கள்.

**பூமிப் புலி** (ஜனவரி 31, 1938 - பிப்ரவரி 18,1939 மற்றும் ஜனவரி 28,1998 - பிப்ரவரி 15,1999)

கடின உழைப்பு, படிப்பதில் அக்கறை, நடுவு நிலைமை, பொறுப்பு, குறிக்கோளின் மேல் பற்றுதல் ஆகிய குணங்களைக் கொண்டவர்கள். சூழ்நிலைக் கைதியாக மாட்டார்கள். பாய்வதற்கு முன் எல்லாப் பக்கங்களையும் அலசி ஆராயும் தன்மை பெற்றவர்கள்.

**உலோகப் புலி** (பிப்ரவரி 17,1950 - பிப்ரவரி 05,1951 மற்றும் பிப்ரவரி 14, 2010 - பிப்ரவரி 02, 2011)

ஆக்ரோஷம், வசீகரம், சுயநலம், ஊக்கம் போன்ற குணங்களால் ஆனவர்கள். குறிக்கோளை அடையும் வரை ஓய மாட்டார்கள். தவறான முடிவை எடுப்பதில் வல்லவர்கள். அதனால் அதைத் திருத்திக் கொள்வது நலம் பயக்கும்.

**நீர்ப் புலி** (பிப்ரவரி 08,1902 - ஜனவரி 28,1903 மற்றும் பிப்ரவரி 05,1962 - ஜனவரி 24,1963)

கூர்ந்து நோக்குதல், நடுவு நிலைமை, நேர்மை, திறந்த மனம், சாந்தம் போன்ற குணங்களைக் கொண்டவர்கள். அடுத்தவர்களின் வார்த்தைகளுக்கு செவி மடுப்பவர்கள். அவர்களது ஆராயும் தன்மை, கடினமான சூழ்நிலைகளிலும் சரியான முடிவை எடுக்க வைக்கும்.

நீங்கள் புலி வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனா;.

**புலி வருடப் பலன்கள்**

புலி வருடம் நிலையற்ற தன்மை கொண்டது. அந்த வருடத்தில் போh;, இயற்கை சீற்றம், போராட்டங்கள் ஏற்படும். மாற்றங்கள் நிறைந்து காணப்படும். அவை நன்மையில் முடியும் தன்மையும் கொண்டனவாய் அமையும்.



# 3. முயல்



- ✓ ஆண்டுகள் - 1903 1915 1927 1939 1951 1963 1975 1987 1999 2011 2023 2035 2047
- ✓ நேரம் - காலை 5:00 முதல் 7:00 வரை
- ✓ உரிய திசை - கிழக்கு
- ✓ உரிய காலங்கள் - வசந்த காலம், மாh;ச் மாதம்
- ✓ நிலையான மூலகம் - மரம்
- ✓ யின்- யாங் யின்

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி முதலிலும் எருது இரண்டாவதாகவும், புலி மூன்றாவதாகவும் வந்து முதல் மூன்று வருடங்களின் சின்னங்களாய் தெரிவு செய்யப்பட்டன. இருந்தாலும் நான்காவதாய் வந்தது கடவுளர்களுக்கு ஆச்சர்யத்தை அளித்தது. காரணம் கேட்ட போது, தான் முதலில் ஆற்றை கடக்க என்ன செய்வது என்று யோசித்ததாயும், பிறகு ஆற்றின் நடுவே இருந்த பாறைகளின் மேல் குதித்து குதித்து பாதி தூரத்தைக் கடந்ததாயும் முயல் கூறியதாம். பிறகு என்ன நடந்தது என்று கடவுளர்கள் ஆவலாய்க் கேட்க, பாறை முடிவுற்றதும் தான் போட்டியில் ஜெயிக்க முடியாது என்று எண்ணிய நேரத்தில் அந்தப் பக்கம் ஒரு மரக் கட்டை மிதந்து வர அதைப் பற்றிக் கொண்டு தான் கரையைச் சேர்ந்ததாய் முயல் கூறியதாம்.

இந்தக் கதை முயல் ஏன் நான்காவதாய் வந்தது என்பதைக் குறித்துக் கூறப்படும் கதை.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் முயல் வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்

- ➢ ஜனவரி 29,1903 - பிப்ரவரி 15,1904
- ➢ பிப்ரவரி 14,1915 - பிப்ரவரி 02,1916
- ➢ பிப்ரவரி 02,1927 - ஜனவரி 22,1928
- ➢ பிப்ரவரி 19,1939 - பிப்ரவரி 07,1940
- ➢ பிப்ரவரி 06,1951 ஜனவரி 26,1952
- ➢ ஜனவரி 25,1963 - பிப்ரவரி 12,1964
- ➢ பிப்ரவரி 11,1975 - ஜனவரி 30,1976
- ➢ ஜனவரி 29,1987 பிப்ரவரி 16,1988
- ➢ பிப்ரவரி 16,1999 - பிப்ரவரி 04, 2000
- ➢ பிப்ரவரி 03,2011 - ஜனவரி 22, 2012

**குணங்கள்**

- முயல் வருடத்தைச் சேர்ந்தவர்கள் அதிர்ஷ்ட ராசியைப் பெற்றவர்கள். அந்த ராசிக்காரர்கள் நீண்ட ஆயுள் பெற்றவர்கள். நிலவின் அத்தனைச் சக்தியையும் பெற்றவர்கள். அவர்கள் அழகை ஆராதிப்பவர்கள். வசீகரமானவர்கள். மிகவும் மென்மையாய் பேசுபவர்கள். அவர்கள் ராஜதந்திரிகள். அமைதி விரும்பிகள். சாந்தமான வாழ்க்கை வாழ விரும்புவார்கள். அவர்களுக்கு அமைதியான மாலைப் பொழுது மிகவும் பிடிக்கும். அவர்கள் கலைநயம் மிக்கவர்கள். நல்ல அறிவார்ந்த பண்பாளர்கள்.
- அவர்கள் மிகவும் அதிர்ஷ்டசாலிகளாய் இருப்பார்கள். அவர்களுக்கு கேட்காமலேயே பல அதிர்ஷ்டப் பரிசுகள் வந்து குவியும். அமைதியான, சாதுவான, விரும்பத்தக்க வகையில் உள்ள முயல்வாசிகள் மிகவும் உயர்ந்த நோக்கம் கொண்டவர்களாய் இருப்பார்கள். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்களின் உள்ளுணர்வு கொண்டே ஊகித்துச் செயல்படும் தன்மை கொண்டவர்கள்.
- பெரும்பாலும் முயல்வாசிகள் தங்களையும் தங்களைச் சுற்றியுள்ள இடங்களையும் மிகவும் அழகாகவும் சுத்தமாகவும் வைத்துக் கொள்வர். அவர்களுக்கு கலை, அழகுபடுத்துதல், உடையலங்காரம் ஆகியவற்றில் அதிக ஈடுபாடு இருக்கும்.
- முயலைப் பலரும் கோழையாய் எண்ணினாலும், அவர்கள் பிறவியிலேயே மிகுந்த எச்சரிக்கைத் தன்மையும் விவேகமும் கொண்டவர்கள். முயல்வாசிகள் எந்தச் செயலையும் முழுமையாய் அலசி ஆராயாமல், திடீரென முடிவு எடுத்து காரியத்தைச் செய்ய முன் வர மாட்டார்கள். செய்ய வேண்டும் என்று சட்டென குதிக்க மாட்டார்கள். அவர்களின் சாந்தமான குணம் போட்டிகளை எதிர் கொள்ள தடைச் செய்யும். அதனால் அபாயகரமான செயல்களைச் செய்ய ஆர்வம் காட்ட மாட்டார்கள். சில சமயம் நல்ல சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தாமல் விட்டு விடுவார்கள்.
- அவர்கள் சுகவாசிகளைப் போல் தெரிந்தாலும் அவர்கள் சிறந்த தந்திரிகள். அவர்கள் மனோபலம் மிகக் கொண்டவர்கள். அதனால் தங்கள் நோக்கத்தை அடைய அவர்கள் அமைதியாகவும் உறுதியாகவும் செயல்படுவர். அவர்கள் எந்தவிதத்திலும் ஆர்ப்பாட்டம் செய்து செயலில் ஈடுபட மாட்டாh;கள்.
- முயல்வாசிகள் எப்போதும் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். தவறான வார்த்தைகளையும் பேச்சுக்களையும் பயன்படுத்த மாட்டார்கள். நீங்கள் செய்வதை நன்கு கவனித்து அனைத்துச் செயல்களையும் திறம்படச் செய்து, சமயத்தில் உங்களையே முந்த வல்லவர்கள். அவர்கள் மிகவும் மெத்தனமாய் இருப்பது போல் தோன்றும். ஆனால் அது அவர்கள் எச்சரிக்கை தன்மை காரணமாய் அப்படி இருக்கும். எல்லாவற்றையும் தீர ஆராய்ந்து, வாக்கு வரி படித்து விட்டே தங்கள் கையொப்பத்தை இடுவார்கள்.
- எல்லோரும் ஓடிக்கொண்டு இருக்கும் போது, அவர்கள் அமைதியாகவே இருப்பார்கள். செயலிலே வெற்றியும் பெறுவார்கள். தானும் வாழ்ந்து அடுத்தவரையும் வாழ விடும் தன்மை கொண்டவர்கள். எந்தப் பிரச்சினைகளிலும் சிக்கிக் கொள்ள மாட்டார்கள். கஷ்டங்களைக் கண்டு அனுதாபப்பட்டு உதவ முன் வருவார்கள். ஆனால் அதற்காக எதிர்த்துப் போராட வேண்டுமென்றால், ஆள் கண்களில் பட மாட்டார்கள். உடனே வெளியேறி விடுவார்கள்.
- அவர்களுக்குக் கஷ்டங்களும் துன்பங்களும் பிடிக்காத ஒன்று. முயல்வாசிகள் கஷ்டங்களைவிட்டு வெகு தொலைவில் ஓட எத்தனிப்பார்கள். பயம் ஏற்படும் போது அவர்கள் என்ன செய்வார்கள் என்றே தெரியாது. அவர்களை மிகவும் வற்புறுத்தினால்,

உறவே வேண்டாம் என்று வெட்டிச் செல்லும் தன்மை கொண்டவர்கள். அவர்களிடம் பிறவியிலேயே எதிர்க்கும் தன்மை கிடையாது. அவர்கள் தங்கள் வழியில் பிரச்சினைகளை எதிர் கொள்வார்கள். தங்களைப் பாதுகாத்துக் கொள்ள நன்கு அறிந்தவர்கள். தங்கள் சொந்த விசயங்களையும் பொருட்களையும் கவனித்துக் கொள்ள என்ன விலை கொடுக்கவும் தயாராய் இருப்பார்கள்.

- என்ன நடந்தாலும் அவர்களுக்கு தங்கள் காலிலேயே நிற்கும் திறனைப் பெற்று தடைகளைத் தாண்ட வல்லவர்கள். தங்கள் மேல் அதிக நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் திருப்தியான வாழ்க்கை வாழ விரும்புவார்கள்.

**தொழில்**

- வேலை இடங்களிலும் அவர்களின் அமைதியும், பணிவும் அவர்களை நம்பகமானவர்களாய்க் காட்டும். மிகவும் கடினமான வியாபாரப் பேச்சுக்களை அமைதியான முறையில் பேசி முடிக்கும் திறன் அவர்களிடம் இருக்கும். அவர்கள் நன்கு தெளிவாய்ப் பேசும் தன்மை கொண்டவர்கள் என்பதால் அறிந்தவர்களும் நண்பர்களும் இவர்களின் அறிவுரைகளைக் கேட்க வருவார்கள். எந்தவொரு குழுவில் இருந்தாலும், முயல்வாசிகள் அமைதிக்குப் பெயர் போனவர்கள்.

- சண்டை சச்சரவுகள் ஏற்பட்டால், அங்கு சமாதானம் செய்ய முன்னிற்பவர்கள் அவர்களாக இருப்பார்கள். எந்தச் சூழலிலும் அமைதியைக் கடைபிடித்து, ஆத்திரம் கொள்ளாமல் செயலை முடிக்க வல்லவர்கள். அவர்களுக்கு கோபமே அதிகம் வராது. வேகமாய் கோபம் வராத ஆசாமிகள் முயல்வாசிகள். அதனால் அவர்கள் அரசியல்வாதிகளாகவும், அதிகாரிகளாகவும் இருக்கத் தகுந்தவர்கள். அவர்கள் ஆசிரியர், நடிகர்கள், உடை அலங்காரம் செய்பவர்கள், புத்தக வெளியீட்டாளர், பொதுச் சேவை செய்பவர் போன்ற தொழில்களில் ஈடுபடலாம்.

**உறவு**

முயல்வாசிகள் ரசனை மிக்கவர்கள். அடுத்தவரையும் மகிழ்விக்க வல்லவர்கள். எல்லோரைப் பற்றியும் நல்ல விதமாய்ச் சொல்ல விசயங்களை வைத்திருப்பார்கள். வெளியே சொல்லா விட்டாலும், ஒருவரை நன்கு கணித்து, அவர்களிடம் எப்படிப் பழக வேண்டுமோ அப்படிப் பழக வல்லவர்கள். முயல்வாசிகள் நன்கு கவனமாய் இருப்பார்கள். அடுத்தவரின் பேச்சினை சரியாய் செவிமடுத்துச் செயல்படுவார்கள். அவர்கள் இரக்க குணம் பெற்றவர்கள். இயற்கையிலேயே இனிமையான தன்மை பெற்றவர்கள். அதனால் அவர்கள் உறவினர்கள் நண்பர்கள் மத்தியில் பிரபலமானவர்களாய் இருப்பார்கள். அவர்களுக்கு நம்பத்தகுந்த நண்பர்கள் பலர் இருப்பார்கள். முயல்வாசிகளுக்கு விரோதிகள் அவ்வளவாக இருக்க மாட்டார்கள்.

மனிதர்களை சரியாய்ப் புரிந்து கொள்ளும் குணம் அவர்களிடம் பிறவியிலேயே இருப்பதால், அவர்கள் சற்றே அகந்தையுடன் நடப்பது போல் தோன்றும். அவர்கள் எப்போதும் நட்புடனும் பாசத்துடன் இருப்பார்கள். பொது இடங்களில் யாரையும் தர்ம சங்கடமான நிலைக்குத் தள்ள மாட்டார்கள். எப்படி ஒருவரைக் காக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்கத் தெரிந்தவர்கள் என்பதால், அனைவராலும் விரும்பப்படும் ஜீவன்கள் இவர்கள்.

மிக நெருங்கிய உறவினர்கள் மத்தியில் சாகசிகளாய் மயக்குபவர்களாய் இருப்பார்கள். ஆனால் அவர்களிடம் இருக்கும் பிறவிக் குணமான எச்சரிக்கைத் தன்மை அவர்களை நிலையான உறவு வைத்துக் கொள்ளத் தடை செய்யும். அதனால் கண்டதும் காதல் என்பது இவர்களிடம் சற்று கடினமே. நட்பும் தோழமையும் மிகக் கொண்டவர்கள். சச்சரவு ஏற்படும் போது எதிர் தரப்பினரைப் பற்றியும் எண்ணிப் பார்ப்பர். அவர்கள் நண்பர்களையும் உறவினர்களையும் நம்பி விட்டால் அதில் வலுவாக இருப்பார்கள்.

**உடல் நலம்**

அவர்களுக்கு எப்படி, எப்போது ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது நன்கு தெரியும்.

அவர்கள் மன அமைதியின்றி தவிக்கும் போது மிகவும் வித்தியாசமாய் நடந்து கொள்வார்கள். அவர்கள் மனச்சங்கடங்கள் ஏற்படும் போது அதைப் பற்றி வெளியில் காட்டிக் கொள்ளாமல் தங்களுக்குள்ளாகவே வைத்து மருகுவார்கள். அதனால் உடல்நிலை பாதிப்புக்கு உள்ளாகும் நிலை கூட ஏற்படும். அவர்களது சங்கடங்ளை தினசரி காரியங்கள் செய்து, மறக்கச் செய்தால் உடல் நிலை சீராகும்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் அவிநாசலிங்கம் செட்டியார் பாவேந்தர் பாரதிதாசன், கவிஞர் கண்ணதாசன், தாவிரவியலாள பீர்பல் சகனி, பெருந்தலைவர் காமராசர், தந்தை பெரியார், நடிகர்கள் சிவாஜி கணேசன், சூர்யா, நடிகை ஸ்ரீதேவி, பாடகர் இயேசுதாஸ், தபலா இசை கலைஞர் சாகிர் ஹூசைன், விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், பதினான்காம் போப் பேனடிக்ட், கால்பந்தாட்ட வீரர் டேவிட் பெக்காம், கோல்ப் வீரர் டைகர் ஊட்ஸ், நடிகை விட்னி ஹூஸ்டன்.

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் - 1, 3, 5, 9, 15, 19, 35.
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் - பன்றி, நாய், ஆடு
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் : சேவல், எலி

**மூலகக் குணங்கள்**

முயல்வாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்பு முயல்** (பிப்ரவரி 02,1927 - ஜனவரி 22,1928 மற்றும் ஜனவரி 29,1987 - பிப்ரவரி 16,1988)

அன்பு, உணர்ச்சி வசப்படுதல், கூர்ந்து நோக்குதல், பாராட்டை எதிர்பார்த்து உழைத்தல் போன்ற குணங்களைக் கொண்டவர்கள். தீ முயல்வாசிகளை புதிய புதிய சாகசங்களை எதிர் கொள்ள வைக்கும்.

**மர முயல்** (பிப்ரவரி 14,1915 - பிப்ரவரி 02,1916 மற்றும் பிப்ரவரி 11,1975 - ஜனவரி 30,1976)

இரக்கம், தாராளத் தன்மை, கூர்ந்து யோசிக்கும் தன்மைகளைப் பெற்றவர்கள். அடுத்தவர்களை திருப்திப்படுத்த முயல்வர். பிறருக்காக அதிகமாய் வேலை செய்யக் கூடியவர்கள். அவர்களுக்குத் தெரியாமலேயே அவர்களிடம் எல்லோரும் காரியங்களைச் சாதித்துக் கொள்வர்.

**பூமி முயல்** (பிப்ரவரி 19,1939 பிப்ரவரி 07,1940 மற்றும் பிப்ரவரி 16, 1999 - பிப்ரவரி 04, 2000)

செல்வத்தில் நாட்டம், ஆர்வம், சம நோக்கு, கவலை போன்ற தன்மைகளைப் பெற்றவர்கள். அவர்களது ஆலோசனைகள் மிகவும் உண்மையானவையாய் இருக்கும். குடும்ப வாழ்க்கைக்கு மிகவும் முக்கியத்துவம் தருவர்.

**உலோக முயல்** (பிப்ரவரி 06,1951 - ஜனவரி 26,1952 மற்றும் பிப்ரவரி 03,2011 - ஜனவரி 22, 2012)

கலைநயம், சாந்தம், உணர்ச்சி வசப்படுதல், ஆராய்ந்து அறியும் தன்மை ஆகிய குணங்களைப் பெற்றவர்கள். அவர்கள் பலசாலிகளாகவும் குறிக்கோளுடையவர்களாகவும் இருப்பார்கள். செய்யும் செயலில் கண்ணும் கருத்துமாய் இருப்பா;.

**நீர் முயல்** (ஜனவரி 29,1903 - பிப்ரவரி 15,1904 மற்றும் ஜனவரி 25,1963 - பிப்ரவரி 12,1964)

மென்மை, அமைதி தரும் ஊக்கம், நடுவு நிலைமை, அதிகம் வெளியாட்களுடன் பழகாத குணம் போன்ற குணங்களைக் கொண்டவர்கள். வாழ்க்கை போகும் திசையில் செல்லும் தன்மை, பிரச்சினைகளை தவிர்க்கும் தன்மை, அடுத்தவருக்கு உதவி செய்யும் தன்மை பெற்றவர்கள்.

நீங்கள் முயல் வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனர்.

**முயல் வருடப் பலன்கள்**

முயல் வருடம் புலி வருடத்தைப் போன்று வெடிக்காமல் மிகவும் அமைதியைத் தரக் கூடிய வருடம். கஷ்டங்கள் அதிகம் இராமல், மிதமான வருடமாய் இருக்கும்.



# 4. டிராகன்



- ✓ ஆண்டுகள் - 1904 1916 1928 1940 1952 1964 1976 1988 2000 2012 2024 2036
- ✓ நேரம் - காலை 7:00 முதல் 9:00 வரை
- ✓ உரிய திசை - கிழக்கு, தென் கிழக்கு
- ✓ உரிய காலங்கள் - வசந்த காலம், ஏப்ரல்; மாதம்
- ✓ நிலையான மூலகம் - மரம்
- ✓ யின்- யாங் யாங்

டிராகன் என்பது சிங்கம் போன்ற தலையும் பாம்பு போன்ற வளைவான நீண்ட உடலும் கொண்ட விலங்கு.

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி முதலிலும் எருது, புலி, முயல் அடுத்தடுத்து வந்து முதல் நான்கு வருடங்களின் சின்னங்களாய் தெரிவு செய்யப்பட்டன. வீரமும் பலமும் கொண்ட டிராகன் வாயில் நெருப்பைக் கக்கிக் கொண்டே, ஐந்தாவதாய் பறந்து வந்து நின்ற போது கடவுளர்களுக்கு ஆச்சர்யத்தைத் தந்தது. காரணம் கேட்ட போது, டிராகன் உலக உயிர்களுக்காகவும் மக்களுக்காகவும் மழையைத் தர வேண்டி இருந்ததால் சிறிது பின் தங்கியதாகவும், கரையை வந்தடையும் சமயம் முயல் மரக்கட்டையைப் பிடித்துக் கொண்டு திண்டாடிக் கொண்டிருந்ததைத் பார்த்ததும் அதற்குக் கரை சேர உதவ எண்ணி ஒரு பெரிய மூச்சை அதன் பக்கம் விட்ட பின் வந்ததால் தமாதமாகி விட்டது என்று கூறியதாம். இதைக் கேட்ட கடவுளர்கள் மகிழ்ந்து அதை வாழ்த்தி வருடச் சக்கரத்தின் ஐந்தாம் சின்னமாய் தெரிவு செய்தார்கள் என்பது கதை.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் டிராகன் வருடத்தைச் சேர்ந்தவா;கள் ஆவார்கள்.

- ➢ பிப்ரவரி 16,1904 - பிப்ரவரி 03,1905
- ➢ பிப்ரவரி 03,1916 - ஜனவரி 22,1917
- ➢ ஜனவரி 23,1928 - பிப்ரவரி 09,1929
- ➢ பிப்ரவரி 08,1940 - ஜனவரி 26,1941
- ➢ ஜனவரி 27,1952 - பிப்ரவரி 13,1953
- ➢ பிப்ரவரி 13,1964 - பிப்ரவரி 01,1965
- ➢ ஜனவரி 31,1976 - பிப்ரவரி 17,1977
- ➢ பிப்ரவரி 17,1988 - பிப்ரவரி 05,1989
- ➢ பிப்ரவரி 05, 2000 - ஜனவரி 23,2001
- ➢ ஜனவரி 23, 2012 - பிப்ரவரி 09,2013

**குணங்கள்**

- ஐந்தாம் இடத்தில் இருக்கும் டிராகன் வருடத்தில் பிறந்தவர்கள் மிகவும் அதிர்ஷ்டச் சின்னத்தில் பிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இது முக்கியமான மிகவும் சக்தி வாய்ந்த சின்னமாகக் கருதப்படும் ஒன்று. டிராகன் என்பது உண்மையான விலங்கு கிடையாது. இது கற்பனையில் தீட்டப்பட்ட, உருவாக்கப்பட்ட விலங்கு. சீனாவில் டிராகன் சிங்கத்திற்கு இணையான சக்தி பொருந்திய விலங்காய் கருதப்படுகிறது.
- டிராகன்வாசிகள் நெருப்புப் பந்துகள் என்றே சொல்லலாம். அவர்கள் உடல் உரம் கொண்டவர்கள். அவர்களுக்கு வீரம் உடன்பிறந்த ஒன்று. டிராகன்வாசிகளில் அகந்தையும் அகங்காரமும் கொண்டவர்களும் உண்டு. பித்தர்கள். அதிகாரம் செலுத்துபவர்கள். எந்தச் சமயத்திலும் உதவிக்கரம் நீட்ட வல்லவர்கள். விட்டுக் கொடுக்கக் கூடியவர்கள். அவர்கள் எதையும் நேரடியாய் எதிர் கொள்ளத் துணிவார்கள். பேசுவார்கள்.
- வாழ்க்கையை வாழ விரும்புபவர்கள். வாழ்க்கையை நேசிப்பவர்கள். வாழ்க்கையை முழுமையாக மிகவும் ஆடம்பரமாய் அனுபவிக்க எண்ணுபவர்கள். டிராகன்வாசிகளுக்கு வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் வேண்டும். போராட ஏதாவது காரணம் வேண்டும். அடைய வேண்டிய இலக்கு வேண்டும். எதிலுமே ஆர்வம் காட்டாத டிராகன்வாசிகள் மிகவும் கவலைக்கிடமானவர்கள்.
- எப்போதுமே ஓடிக் கொண்டே இருப்பவா;கள். அந்த ஓட்டத்தில் தனக்கென ஒரு கூட்டத்தையும் கொண்டு செலுத்தக் கூடியவர்கள். தங்களது உயர்ந்த கொள்கையின் மேல் பற்று கொண்டு, அதை அடைய முயற்சி செய்பவர்கள்.
- அவர்கள் பேச்சும் செயல்களும் அனைவரையும் கவரத்தக்கவை. ஏதாவது கூட்டத்தில் டிராகன்வாசிகள் நுழைந்தால், உடனே அதைக் கண்டுவிடலாம். அவர்கள் கூடவே அவர்களது சுவாரசியமானச் செயல்களும் பேச்சும் கூட்டத்தினர் மத்தியிலும் ஊடாடி அவர்கள் இருக்கும் இடத்தைக் காட்டிக் கொடுக்கும். அவர்களது மென்மையான உணர்வுப்பூர்வமான செயல்கள் அவர்களைத் தெரிந்தவர்கள் மத்தியில் விரும்பத்தக்கவர்களாய் உயர்த்தும். மிகுந்த ஆர்வமும் நம்பிக்கையும் எப்போதும் வெளிக்காட்டும் வகையில் நடந்து கொள்வார்கள். அதனால் அவர்களது நேர்மையும் துடுக்குத்தனமும் அனைவரையும் அவர்களிடம் நம்பிக்கை கொள்ளும்படி செய்யும்.
- எப்போதுமே அவர்கள் பேச்சு உள்ளத்திலிருந்து வரும் வார்த்தைகளாய் இருக்கும். அவை உண்மையும் கபடமற்றும் இருக்கும். அவர்கள் முற்போக்கானவர்களாய் இருப்பார்கள்.
- அவர்கள் இயற்கையில் ஆட்டமும் வேகமும் கொண்டவர்கள். எதையும் அசைக்கவல்ல மனிதர்கள். தனக்கு வேண்டியதைப் பெற எந்தவொரு வெட்கமும் படாமல் செயல்பட வல்லவர்கள். அவர்கள் அதிகாரத் தன்மையே அவர்களுக்கு பல சமயம் எதிரியாகிவிடும் வாய்ப்பு உண்டு. அவர்கள் சில நேரங்களில் ஆழ்ந்து சிந்திக்காமல் பேசி எதிராளியின் மனதைப் புண்பட வைக்கும் தன்மை உடையவர்கள்.
- தங்கள் முட்டாள்தனமான செயல்கள் மற்றும் முடிவுகளால் வருத்தப்பட்டாலும், உடனே அதை விட்டு வெளியே வர முயற்சி செய்வார்கள். தங்களது தவறை உணர்ந்து மேலும் அதிக தன்னம்பிக்கையுடன் உடனே செயல்படக் கூடியவர்கள். அவர்களது புத்திசாலித்தனமும் பிடிவாதமும் அவர்கள் எந்தத் துறைக்குச் சென்றாலும், அதில் பிரகாசிக்கச் செய்யும். அவர்கள் சாதிக்கப் பிறந்தவர்கள் என்றே சொல்லலாம். எதிர்க்க

வேண்டிய சமயங்களில், விதியை நொந்து கொண்டு அமைதியாய் இருக்க மாட்டார்கள், எதிர்க்கத் துணிவார்கள்.

- அவர்கள் வேலை செய்வதிலும் அதிகாரம் செய்வதிலும் திறமை வாய்ந்தவர்கள். மேல் தட்டில் இருக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொண்டே இருப்பார்கள். அவர்களுக்கு மிக உயர்ந்த செயல்களைச் செய்து சாதிக்க வேண்டும் என்ற உறுதியும், ஆர்வமும் இருந்த போதும், அவர்களால் அதை அடைய மிகவும் போராட வேண்டும். மிக உயரத்திற்கு எளிதில் செல்ல முடியாமல் தவிப்பார்கள். டிராகன்வாசிகள் நல்லதோ கெட்டதோ எதைச் செய்தாலும், அடுத்தவர் கண்ணிலிருந்து தப்பவே முடியாது. அவர்கள் செய்யும் காரியங்கள் எப்போதுமே எல்லாருக்கும் தெரியும் செய்தியாகி விடும்.
- வாதம் செய்வதிலும் அவர்கள் வல்லவர்கள். அவர்களை வெற்றி கொள்வது மிகவும் கடினமான காரியம். அவர்கள் சவாலை நேரடியாய் எதிர் கொள்வார்கள். அவர்களை எதிரியாகவோ கோபம் கொள்ளவோ செய்துவிட்டால், அவர்கள் விடாமல் துரத்தக் கூடியவர்கள்.
- அவர்கள் தங்களை எல்லோரும் விரும்புவார்கள் என்று தானாகவே எண்ணிக் கொண்டு செயல்படுவார்கள். அவர்கள் பிடிவாதமாய் இருந்தாலும் அற்பகுணம் கொண்டவர்களாய் இருக்க மாட்டார்கள். அவர்கள் தங்களது உணர்வுகளை மறைத்துக் கொள்வது கடினம். அதை மறைக்கவும் முயல மாட்டார்கள். அவர்கள் தங்களது ரகசியங்களையேக் காக்கத் தடுமாறுவார்கள். அதனால் நம்பிக்கையை நெடுநாட்களுக்கு தாக்குப்பிடிக்க முடியாது.
- செயல்களைச் செய்து முடிப்பதிலேயே குறியாய் இருப்பார்கள். டிராகன் செயல்பாட்டிற்கு பெயர் போன சின்னமென்பதால் அவர்கள் அடுத்தவர்களை ஊக்குவிக்க வல்லவர்கள். அவர்கள் வேகமாய்ச் செயல்பட எண்ணம் கொண்டவர்கள் என்பதால் அவர்களுக்கு அதைச் செய்வதில் ஏற்படும் தவறுகளைக் கவனிக்க நேரம் கிடைக்காது. அதனால் டிராகன்வாசிகளே, எப்போதும் செயல்களைச் செய்ய தலைகீழாய் விழுவதை விட்டு, அதை ஆராய்ந்து செயல்படுதல் நலம் பயக்கும்.
- அவர்கள் தங்களைச் சக்தி வாய்ந்தவர்களாய்க் கருதுவார்கள். பல செயல்களை ஒரே நேரத்தில் திறம்படச் செய்யும் தன்மையும் அவர்களிடத்தில் உண்டு. அகலக் கால் வைப்பவர்கள். மெல்வதற்கு அதிகமாகவே கடித்துச் சாப்பிடுவார்கள். துன்பப்படும் நேரங்களில், அகந்தையின் காரணமாய் அடுத்தவர்களிடம் உதவி கேட்க விரும்ப மாட்டார்கள். அவர்கள் அகந்தையும் கர்வமும் கொண்ட காரணத்தால் தனியே செயல்படுவது போன்று தோன்றினாலும், அவை முக்கியக் காரணங்களாகா. அவர்கள் மிகுந்த கோபக்காரர்கள். கோபம் வந்தால் என்ன நடக்கும் என்று சொல்லவே முடியாது.
- டிராகன்வாசிகளிடம் இருக்கும் வேண்டாத குணம் தலைக்கனமும், துடுக்குத்தனமான நாக்கும் தான். வலிமை, சுறுசுறுப்பு, ஓடிக்கொண்டே இருக்கும் தன்மை பெற்றவர்கள். தங்களிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார்களோ அதையே அடுத்தவரிடமும் எதிர்பார்ப்பார்கள். சில சமயங்களில் சொல்வதைத் தான் செய்யாமல் அடுத்தவர்களுக்கு போதிப்பதும் நடக்கும். அதிகத் தன்னம்பிக்கை, அடுத்தவர்களை குறை சொல்வது, தானே கூட்டங்களுக்குத் தலைவன் என்ற எண்ணம், அதிக சுறுசுறுப்பான போதிலும் மிக வேகத்துடன் செயல்படும் தன்மை துன்பத்தை வரவழைக்க வல்லது.

**தொழில்**

- அரசியல்வாதிகள், மருத்துவர்கள், அமைச்சர்கள், கலைஞர்களாய் இருக்கத் தகுந்தவர்கள். அவர்கள் சரியானத் தொழிலை தேர்வு செய்துவிட்டால், அதில் அவர்களுக்கு வெற்றி

நிச்சயம். அதற்கே தங்களை அர்ப்பணித்துக் கொண்டுவிடுவார்கள். அதனால் அவர்களை வெற்றி பெறுவதிலிருந்து தடுக்கவே முடியாது.

- செல்வாக்கும் குறிக்கோளும் கொண்டவர்கள். இவர்கள் தாங்களாக விதித்த விதிகளின்படி தங்கள் வாழ்க்கையை வாழ்பவர்கள். தனியாக விட்டால், பெரும்பாலும் அவர்கள் வெற்றி பெறுவார்கள். அவர்கள் சுய ஊக்கம் கொண்டு, போட்டிகளை எதிர் கொண்டு, துணிந்து காரியங்களைச் செய்ய வல்லவர்கள். அவர்கள் செய்யும் காரியங்களை விரும்பிச் செய்வார்கள். அதை பிரம்மாண்டமாய்; செய்ய விரும்புபவார்கள். இந்த விருப்பமும் ஆர்வமும் சில சமயம் அவர்களை சோர்வடைச் செய்து அதிருப்தியையும் தரக் கூடும்.
- டிராகன்வாசிகள் மற்றவர் பின் போவதைக் காட்டிலும், வழி நடத்திச் செல்ல விருப்பம் கொண்டவர்கள். அவர்கள் புதிது புதிதாய் படைக்கும் படைத்தல் தொழிலில் ஈடுபட்டால் நன்மை பயக்கும். கண்டுபிடிப்பாளர், மேலாளர், கணிப்பொறி வல்லுநர், வழக்கறிஞர், பொறியாளர், கட்டிட நிபுணர், வியாபாரி, தரகர் போன்ற வேலைகள் இவர்களுக்கு உகந்த வேலைகளாகும்.

**உறவு**

காதலில் அவர்கள் பெரும்பாலும் தோல்வியைத் தழுவுவார்கள். அவர்கள் இதயங்களை உடைக்க வல்லவர்கள். அவர்கள் இளவயதில் பெரும்பாலும் மணம் செய்து கொள்ள விரும்பமாட்டார்கள். தனியாய் வாழ்வதில் மகிழ்ச்சியும் திருப்தியும் கொள்பவர்கள். டிராகன்வாசிகளுக்கு அளவிற்கு அதிகமான நண்பர்களும், போற்றுபவர்களும் இருப்பார்கள். அவர்கள் மிகவும் மென்மையானவர்கள். அதனால் பிரிவுகள் அவர்களைப் பெரிதும் பாதிக்கும். அதனாலேயே தனி வாழ்க்கை வாழ விரும்புபவர்கள்.

அவர்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் உண்மையானவர்களாய் நடந்து கொள்வார்கள். வேண்டிய போது காப்பாற்ற முன் நிற்பார்கள். அவர்கள்தான் உதவிக்கு முதல் ஆளாய் நிற்பார்கள். அடிக்கடி அடுத்தவருக்கு உதவி செய்யும் டிராகன்வாசிகள், தங்களுக்கென உதவி கேட்கத் தயங்குவார்கள். அவர்களது தன்மையும், நடத்தையும் பலரை அவர்களுடன் பழக வைத்தாலும், அவர்கள் அடிப்படையில் தனிமை விரும்பிகள். அதனாலேயே அவர்கள் தனித்து விடப்பட்டால் காரியங்களைச் செவ்வனேச் செய்து முடிப்பார்கள்.

காதலை விட்டுக் கொடுத்தாலும் கொடுப்பார்களேயொழிய, சுதந்திரத்தை விட்டுக் கொடுக்க விரும்பமாட்டார்கள். அவர்களது துடுக்குத்தனமான பேச்சும் கோபமும் அவர்கள் உடன் இருப்பவர்களை வருத்தக் கூடியது. அதனால் அவர்கள் திடம் மிக்கவர்களாய் இருக்க வேண்டும். அவர்கள் நெருங்கிய நண்பர்களிடமும் உறவினர்களிடமும் மட்டுமே தங்களின் சுக துக்கங்களை எடுத்துச் சொல்லி அன்பைப் பொழியக் கூடியவர்கள்.

**உடல் நலம்**

கடின உழைப்பை விரும்பும் இவர்கள் பெரும்பாலும் ஆரோக்கியம் மிக்கவர்கள். துணிகரமான காரியங்களில் அதிகம் ஈடுபடுவதால் அவர்கள் மன அழுத்தம் கொண்டு அடிக்கடி தலைவலிக்குள்ளாகும் வாய்ப்பு உண்டு. அதனால் மிகச் சாதாரண காரியங்களைச் செய்வது அவர்களுக்கு நலம் பயக்கும். யோகாசனம், நடத்தல் போன்ற பயிற்சிகள் அவர்களது உடலையும் மனதையும் நன்முறையில் வைக்க உதவும். அவர்கள் மிகவும் உணர்வுப்பூர்வமானவர்கள். இருந்தாலும் அவர்கள் மனக்கிளர்ச்சி கொள்ள மாட்டார்கள்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

பாரத் ரத்னா விருது பெற்ற பாடகி எம். எஸ். சுப்புலட்சுமி, பாடகி எம். எல். வசந்தகுமாரி, கார்ப் பந்தய வீரா; நரேன் கார்த்திகேயன், தேசபக்தர் திருப்பூர் குமரன், தொழிலதிபர் ஜே. ஆர். டி. டாடா, முன்னாள் குடியரசுத் தலைவர் கியானி ஜெயல் சிங், உதவிக்கரம் நீட்டிய புளாரன்ஸ் நைட்டிங்கேல், வீராங்கனை ஜோன் ஆப் ஆர்க், மனோதத்துவ நிபுணர் சிக்மண்ட் பிராட், நடிகர் கினு ரிவ்ஸ், கால்பந்தாட்ட வீரர் ரோனால்டோ.

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் - 3, 4, 5, 6, 15, 21, 34, 35, 36, 45.
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் : குரங்கு, எலி, பாம்பு, சேவல்
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் : எருது, ஆடு, நாய்

**மூலகக் குணங்கள்**

டிராகன்வாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்பு டிராகன்** (பிப்ரவரி 03,1916 - ஜனவரி 22,1917 மற்றும் ஜனவரி 31,1976 - பிப்ரவரி 17,1977)

இரக்கம், எதிர் கொள்ளுதல், நேர்மை போன்ற நற்குணங்கள் உடையவர்கள். உணர்ச்சிப் போராட்டம் அதிகம் கொண்டவர்கள். அவசரமும், ஆர்வமும் தவறான முடிவுகளை எடுக்கத் தூண்டும். அத்தகையவர்களின் வேகம் கட்டுப்பட வேண்டும். உணர்வுகளைக் கட்டுக்குள் வைக்க முயல வேண்டும்.

**மர டிராகன்** (பிப்ரவரி 16,1904 - பிப்ரவரி 03,1905 மற்றும் பிப்ரவரி 13,1964 - பிப்ரவரி 01,1965)

அகங்காரம், விட்டுக் கொடுத்தல், வெகுளித்தனம், கபடமற்ற தன்மை உடையவா;கள். அடுத்தவா;களின் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுப்பவா;கள். அவா;கள் கலை நயம் சிறந்தது. அடுத்தவா;களிடம் நன்கு பழகினாலும், அதிகாரம் செலுத்துவாh;கள். அவா;கள் படைப்பு முயற்சிகளில் கைத் தோ;ந்தவா;கள்.

**பூமி டிராகன்** (ஜனவரி 23,1928 - பிப்ரவரி 09,1929 மற்றும் பிப்ரவரி 17, 1988 - பிப்ரவரி 05, 1989)

வீரம், விவேகம், நிலையான தன்மை உடையவர்கள். உல்லாசிகள். டிராகன் நிலத்தில் ஊன்றி இருப்பதால், அவர்கள் முடிவுகளைச் சரியாய் எடுப்பார்கள். சமநோக்கு உடையவர்கள். தங்களது செயல்களைக் கட்டுக்குள் வைத்திருப்பவர்கள். அடுத்தவர்களை ஆதரித்தாலும், தன்னைப் போற்ற வேண்டும் என்று எண்ணுவார்கள். நடைமுறைச் செயல்பாடுகளை நம்புபவார்கள்.

**உலோக டிராகன்** (பிப்ரவரி 08,1940 - ஜனவரி 26,1941 மற்றும் பிப்ரவரி 05,2000 - ஜனவரி 23, 2001)

உண்மை, வேகம், வளையாத தன்மை, திடம், துணிவு கொண்டவர்கள். உலோகம், டிராகன் சின்னத்தின் பலத்தை மேலும் பலப்படுத்தக் கூடியது. அவர்கள் கொள்கை பிடிப்புக்

கொண்டவர்கள். தான் நம்புவதை செயல்படுத்தப் போராடுவார்கள். தன்னுடைய கருத்துகளை எதிர்ப்பவர்களுடன் இருக்க அதிகம் விரும்புவார்கள். தலைமை தாங்கும் குணம் பெற்றவர்கள். அவர்களின் பின் நடக்க பலர் இருப்பார்கள்.

**நீர் டிராகன்** (ஜனவரி 27,1952 - பிப்ரவர் 13,1953 மற்றும் ஜனவரி 23, 2012 - பிப்ரவரி 09,2013)

நீர் டிராகனின் ஆக்ரோஷத்தை சற்றே மட்டுப்படுத்த வல்லது. அர்ப்பணிப்பு குணம் கொண்டவர்கள். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். நம்பத் தகுந்தவர்கள். அடுத்தவர்களின் கணிப்புகளை சீர் தூக்கிப் பார்ப்பவர்கள். அவர்கள் எப்போதுமே சரியான முடிவுகளை எடுக்கக் கூடியவர்கள் அல்ல. அவர்கள் முடிவுகள் ஆராயப்பட்ட முடிவாய் இருந்தால், மற்றவர்களின் கருத்துகளும் அதில் அடங்கி இருந்தால், முடிவு சரியானதாய் இருக்கக் கூடும்.

நீங்கள் டிராகன் வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனா;.

**டிராகன் வருடப் பலன்கள்**

டிராகன் வருடம் சந்தோசத்தையும் அதிர்ஷ்டத்தையும் தரும். அது சக்தி வாய்ந்த, பலம் பொருந்திய சின்னம். அதனால் இயற்கைச் சீற்றம் அதிகம் இருந்த போதிலும், நல்லன பல நடக்கும். திருமணம் செய்பவர்கள், புதிய தொழிலை ஆரம்பிப்பவர்கள் இந்த வருடத்தில் செய்தால், நன்மை பெறுவார்கள்.



# 6. பாம்பு



- ✓ அதிர்ஷ்ட எண்கள் - 1905 1917 1929 1941 1953 1965 1977 1989 2001 2013 2025 2037 2049
- ✓ நேரம் - காலை 9:00 முதல் 11:00 வரை
- ✓ உரிய திசை - தெற்கு, தென் கிழக்கு
- ✓ உரிய காலங்கள் - வசந்த காலம், மே மாதம்
- ✓ நிலையான மூலகம் - நெருப்பு
- ✓ யின்- யாங் யின்

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி, எருது, புலி, முயல், டிராகன் முதல் ஐந்து இடங்களில் வந்தன. டிராகன் வந்து சேர்ந்த பின், குழம்புச் சத்தம் கேட்டு கடவுளர்கள் அந்தப் பக்கம் பார்த்தனர். கரையை எட்டும் நேரத்தில் திடீரென குதிரையின் குழம்பிலிருந்து பாம்பு வெளி வந்தது. இதைக் கண்டு பயந்து பின் வாங்கியது குதிரை. பாம்பு ஆறாவதாய் போட்டியில் வந்தது. கடவுளர்கள் அதை வாழ்த்தி வருடச் சக்கரத்தின் ஆறாவது சின்னமாய் தெரிவு செய்தார்கள் என்பது கதை.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் பாம்பு வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ பிப்ரவரி 04,1905 - ஜனவரி 24,1906
- ➢ ஜனவரி 23,1917 - பிப்ரவரி 10,1918
- ➢ பிப்ரவரி 10,1929 - ஜனவரி 29,1930
- ➢ ஜனவரி 27,1941 - பிப்ரவரி 14,1942
- ➢ பிப்ரவரி 14,1953 பிப்ரவரி 02,1954
- ➢ பிப்ரவரி 02,1965 - ஜனவரி 20,1966
- ➢ பிப்ரவரி 18,1977 - பிப்ரவரி 06,1978
- ➢ பிப்ரவரி 06,1989 - ஜனவரி 26,1990
- ➢ ஜனவரி 24,2001 - பிப்ரவரி 01, 2002
- ➢ பிப்ரவரி 10,2013 - ஜனவரி 30, 2014

**குணங்கள்**

- ❖ ஆழமான ஆற்றைப் போல், பாம்புவாசிகள் மேலோட்டமாய் அமைதியாய்த் தெரிந்தாலும், அவர்களது எண்ணங்களும் உணர்வுகளும் மிகவும் ஆழமானது, ஆர்ப்பாட்டமற்றது. பாம்புவாசிகள் சாகசக்காரர்களாகவும் வசீகரம் மிக்கவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் ஆழ்ந்த சிந்தனையாளர்கள். அவர்கள் எப்போதும் பூடகமானவர்கள். மென்மையானவர்கள். புத்தகங்களை விரும்பிப் படிப்பவர்கள். எல்லாக் கலைகளையும் போற்றுவார்கள். வாழ்க்கையின் மெல்லிய உணர்வுகளையும் ரசிக்க வல்லவர்கள்.

மற்ற எல்லாரையும் விடத் தங்கள் மேல் அதிக நம்பிக்கை கொண்டவர்கள். அவர்கள் தவறு செய்வது மிகக் கடினம். மூடநம்பிக்கை கொண்டவர்கள். சந்தேகவாதிகள். மயக்கக் கூடியவர்கள். தந்திரவாதிகள். பேசும் முன் மிகவும் யோசித்தே பேசுவார்கள்.

- ❖ அமைதியாகவும் ஆர்ப்பாட்டமில்லாமலும் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கும் தன்மை கொண்டவர்கள். அடுத்தவர்களின் கவனத்தைப் பெற வேண்டும் என்று ஆர்ப்பாட்டமான செயல்களில் ஈடுபட மாட்டார்கள். ஆனால் தங்கள் வேலையைக் கவனமாய்ச் செய்து சாதிக்க வேண்டியதைச் சாதித்துக் காட்டுவார்கள். பாம்புவாசிகள் எதையும் எளிதில் கற்றுக் கொள்வார்கள். ஒரு முறை தவறு செய்வது புரிந்து விட்டால், அதைத் திரும்பவும் செய்ய மாட்டார்கள். சத்தியம் தவறுதலை அவர்கள் மன்னிக்க மாட்டார்கள்.
- ❖ தோல்வியை வெறுப்பவர்கள். பண விசயத்தில் மிகவும் அதிர்ஷ்டசாலிகள். அவர்கள் பணத்தைச் சேமிப்பவர்கள். சிக்கனமாகவும் கவனமாகவும் அதைப் பாதுகாப்பர். மிகவும் முக்கியமான விசயங்களில், அடுத்தவர்களின் எண்ணங்களையும் ஆலோசனைகளையும் நம்பாமல், தங்களது மனம் காட்டும் பாதையின் மேல் அதிக நம்பிக்கை வைத்துச் செயல்படுவார்கள். தான், தனது எண்ணம், தனது செயல் என்று இருப்பவர்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர் நோக்கும் போதும், தங்கள் ஆழ்மனத்தின் முடிவுகளை ஏற்று, செயல்பட்டு, அந்த பிரச்சினைகளைத் தீர்க்க வழி தேடுவார்கள்.
- ❖ பாம்புவாசிகள் மனத்தால் ஆழ்சிந்தையும், இயற்கையில் பொறாமை குணம் கொண்டவர்களாயும், விலக்கப்பட்டால் அதை ஏற்க முடியாத தன்மையையும் கொண்டவர்கள். அவர்களைக் கோபம் கொள்ள வைத்தால், அவர்கள் வார்த்தைகளால் கத்தாமல் அமைதியாய் இருப்பதைக் காணலாம். அவர்கள் வஞ்சம் வைத்துக் கவிழ்க்க நேரம் பார்த்துக் காத்திருக்க வல்லவர்கள்.
- ❖ இயற்கையாகவே எதையும் கூர்ந்து நோக்குவார்கள். ஆனாலும் சந்தேகங்களைப் பகிர்ந்து கொள்ளாமல், தங்களுக்குள்ளாகவே வைத்துக் கொள்வார்கள். அடுத்தவர் விசயங்களில் தலையிடுதலை விரும்பாதவர்கள். ஊர் வம்பு பேசுவது பிடிக்காத விசயம்.
- ❖ பாம்புவாசிகள் அழகாய் உடையலங்காரம் செய்து கொள்வார்கள். நன்னடத்தை உடையவர்கள். முன் ஜாக்கிரதைவாசிகள். அமைதியாகவே காணப்படுவார்கள். தங்கள் உண்மை உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்து நடப்பார்கள்.
- ❖ அவர்களுக்கு நகைச்சுவை உணர்வு அதிகம் இருக்கும். கஷ்டமானச் சூழலிலும், இந்த உணர்வால், சூழலை அனுகூலமாக்க வல்லவர்கள். தங்களைக் கஷ்டத்திற்கு உட்படுத்திக் கொண்டாலும், அவர்கள் தங்கள் பளிச்சிடும் எண்ணங்களை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். பலமுள்ள தூண்களைப் போன்ற அவர்களின் எண்ணங்கள், அவர்களுக்கு குழப்பக் காலத்திலும், பிரச்சினைகள் நிறைந்த நேரத்திலும், நிதானமாய்க் கவனமாய் செயல்பட வைக்கும்.
- ❖ அவர்கள் தங்களைப் பற்றிய அருமையான எண்ணங்களைக் கொண்டவர்கள். விலை மதிப்புள்ள பொருட்களை விரும்புவார்கள். போலிகளை விரும்பாமல் உண்மையான நல்ல பொருட்களை வாங்கிக் கொள்ள விரும்புவார்கள். பாம்புவாசிகள் அதிகாரத்தைப் பெரிதும் விரும்புவார்கள். வெற்றியாளர்களைத் தங்களைச் சுற்றி இருக்கும்படி பார்த்துக் கொள்வார்கள். அவர்களை அதிர்ஷ்டமும் புகழும் தானே தேடி வரும்.
- ❖ புத்திசாலித்தனம், நன்னடத்தை, பொருள் மேல் பற்று என்ற குணங்கள் குறிப்பிடத்தக்கவை. முடிவுகள் எடுக்க வேண்டிய நேரங்களில் அவர்கள் கணக்காய் யோசித்துச் செயல்படுவார்களேயொழிய, தவறான சூழலை உருவாக்கிக் கொள்ளும்

வகையில் முடிவுகளை எடுக்க மாட்டார்கள். தனக்கு வேண்டுவனவற்றைப் பெற, செய்ய வேண்டியதைச் செய்து, அச்செயலை முடிக்க வல்லவர்கள்.

- வாழ்க்கையில் பெற வேண்டிய அனைத்துப் பொருட்களையும் தங்களைச் சுற்றி வைத்துக் கொள்ள விரும்பும் பொருளாசை கொண்டவர்கள் இவர்கள். அவர்களது இல்லங்களைக் காணும் போது அது தெரியும். மிகவும் ஆடம்பரமான பொருள்களால் வீட்டை அலங்கரித்து, அமைதி தேட விரும்புவார்கள்.

**தொழில்**

- அவர்களது பல விதமான திறமைகளும் இயல்பான தன்மைகளும் அவர்களைத் தலைமை நிலைக்கு உயர்த்த வல்லவை. பாம்புவாசிகளை நன்கு புரிந்து கொள்ள முடியாவிட்டாலும், மக்கள் அவர்களைக் கண்டு பிரமிப்பார்கள். பாம்புவாசிகள் சிறந்த அரசியல்வாதிகளாகத் திகழ முடியும். அவர்கள் எதை வேண்டுமானாலும் பேரம் பேச வல்லவர்கள்.
- என்ன நடந்தாலும், பாம்புவாசிகள் தாங்களாகவே எந்தச் செயலையும் செய்ய முயல்வார்கள். அவர்களுக்கு மனிதர்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது நன்கு தெரியும். அவர்கள் செய்யும் செயல்கள் பலவும் முன்பே திட்டமிடப் பட்டவையாய் இருக்கும். தங்கள் பதவியைக் கடைசி வரை தக்க வைத்துக் கொள்ள முயல்வார்கள். அதிக வேலை செய்ய விரும்பாமல், செய்யத் தகுந்த மிதமான வேலை பளுவை விரும்பும் தன்மை கொண்டவர்கள்.
- அவர்களுக்கு பணம் ஒரு பாடாய் இருக்காது. முதலீடுகளைப் பற்றி அவர்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்காது. பணம் தேவைப்படும் போது, தவறாமல் கிடைத்துவிடும். பண விசயத்தில் அதிர்ஷ்டம் இருந்த போதும், அவர்கள் சூதாட்டத்தில் நாட்டம் வைத்தல் ஆபத்தை விளைவிக்கும். பெருத்த நஷ்டத்தைப் பார்க்க வேண்டி வரும்.
- கடின உழைப்பாளிகளாய் இருந்தாலும், அடிக்கடி வேலை மாற்றம் செய்யும் தன்மை கொண்டவர்கள். ஒரே மாதிரியான வேலை செய்வதால், வேகமாய் சோர்வு அடைந்து, அடுத்த வேலையைத் தேட ஆரம்பிப்பார்கள். அவர்கள் படைப்பாளிகளாகவும் மிகுந்த சுறுசுறுப்புள்ளவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவர்கள். மிகவும் இறுக்கமானச் சூழலிலும் வாழத் தெரிந்தவர்கள். விஞ்ஞானி, ஓவியர், பானை வினைஞர், ஆசாரி, சோதிடர், ஜாலவித்தைக்காரர், சமூக ஆய்வாளர், எழுத்தாளர், தத்துவஞானி, ஆசிரியர் போன்ற வேலையில் சிறந்த நிலையை அடைய முடியும்.
- வியாபார விவகாரங்களில், பாம்புவாசிகள் தங்கள் சாதனைகளை அடுத்தவர்கள் மதிக்க வேண்டும் என்று எண்ணுவார்கள். வியாபார விசயங்களில் எச்சரிக்கை அதிகம் தேவை.

**உறவு**

பாம்புவாசிகள் உறவுகளைச் சொந்தம் கொண்டாடத் தயங்க மாட்டார்கள். அவர்கள் தீவிரக் காதலர்களான போதும் பொறாமை மிக்கக் காதலர்கள். தங்கள் குறிக்கோளை அடைய எவ்வளவு தூரம் செல்வார்கள் என்று யாரும் சொல்ல முடியாது. இரக்கமற்றவர்கள். அவர்களது மூளை கணிப்பொறி வேகத்தில் சதியாலோசனை செய்து கொண்டே இருக்கும். பாம்புவாசிகள் தங்கள் துணைகளை மிகவும் மதிப்புக் கொடுத்து சொந்தமாக்கிக் கொள்ள எண்ணுவார்கள். அதில் பொறாமையும் கொள்வார்கள். அவர்களே உறவுகளை எந்த அளவிற்கு

வைத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்பவர்கள். தன்னுடைய துணையைத் தேர்வு செய்த பின்னரே, அவர்களது மறுபக்கத்தைக் காட்டுவார்கள்.

பாம்புவாசிகள் தங்கள் உணர்வுகளை அதிகமாய் வெளிக்காட்டிக் கொள்ள மாட்டார்கள். தங்களுக்குள்ளாகவே வைத்துக் கொள்வார்கள். எப்போதும் அவர்களை ஏமாற்ற எண்ணாதீர்கள். ஏனென்றால் அதைத் திருப்பிக் கொடுக்கச் சமயம் கிடைக்கும் வரை மறக்கவும் மாட்டார்கள். நண்பர்களுக்குக் கடன் கொடுக்க பெரிதும் தயங்குவார்கள். அவசியத்திற்கு அவர்கள் கட்டாயம் உதவத் தயங்க மாட்டார்கள். கஷ்டப்படுபவர்களைக் கண்டால் மனமிரங்கி தன்னாலானதைச் செய்வார்கள். நம்பியவர்களும் அன்பு கொண்டவர்களும் ஏமாற்றும் போது துக்கம் அதிகம் கொள்வார்கள்.

**உடல் நலம்**

அமைதியான வாழ்க்கை வாழ விரும்புவார்கள். சத்தத்தை விரும்பாமல் அமைதியை விரும்பும் மனம் உடையவர்கள். மன அழுத்தம் எளிதில் பெறுவர். அமைதியான வாழ்க்கைப் போக்கு இல்லையென்றால் வருந்தி அழுத்தம் கொண்டு தவிப்பர். அப்படி அதிகமாய் வேலை செய்து செயல்பட்டால், அவர்கள் வாழ்நாள் குறையும் தன்மை ஏற்படலாம்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

இசையமைப்பாளர் ஏ. ஆர். ரஹ்மான், மகாத்மா காந்தி, முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர், கவிஞர் வைரமுத்து, கிரிக்கெட் வீரர்கள் மகில ஜயவர்தனே, அரவிந்த டி சில்வா, நடிகர் ஷாருக் கான், டென்னிஸ் ஆட்ட வீரர் விஜய் அமிர்தராஜ், முன்னாள் அமெரிக்க அதிபர் ஜான். எப். கென்னடி, ஓவியர் பப்லோ பிகாசோ, அமெரிக்க அரசியல்வாதி டிக் சீனி, அமெரிக்கப் பாடகர் பாப் டைலன்

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் 1, 2, 4, 6, 13, 24, 42, 46
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் : சேவல், எருது
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் : பன்றி, குரங்கு

**மூலகக் குணங்கள்**

பாம்புவாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்புப் பாம்பு** (பிப்ரவரி 10,1929 - ஜனவரி 29,1930 மற்றும் பிப்ரவரி 06,1989 - ஜனவரி 26,1990)

தன்னம்பிக்கை, வளைந்து கொடுக்காத தன்மை, பதவி மற்றும் பலம் காரணமாய் ஊக்கம் பெறும் தன்மை கொண்டவர்கள். வெளிப்படையானவர்கள். எப்போதும் தங்களது கருத்துக்களையும், தங்கள் மனத்தில் தோன்றுவதையும் மாற்றாறிடம் சொல்லிய வண்ணம் இருப்பர். அனைவரும் இவர்களின் பேச்சைக் கேட்டு மகிழ்வர். அவர்கள் தாங்கள் சொல்வதே சிறந்தது என்று நம்ப வைக்கும் சொல்வன்மை கொண்டவர்கள்.

**மரப் பாம்பு** (ஜனவரி 23,1917 - பிப்ரவரி 10,1918 மற்றும் பிப்ரவரி 18,1977 - பிப்ரவரி 06,1978)

இரக்க மனம், உண்மை, ஸ்திரத் தன்மை, பகுத்தறிவு, வசீகரம் இவர்களின் இயல்பான குணங்கள். உறவினர்களிடமும் நண்பர்களிடமும் சிறந்த பலமான உறவு கொண்டு, அவர்களுடன் இருப்பதையே பெரிதும் விரும்புவர். எவ்வளவு ஆதரவு இருந்த போதும், மற்றவர்களின் ஆலோசனைகளைக் கேட்பது மிகவும் அரிது.

**பூமிப் பாம்பு** (ஜனவரி 27, 1941 - பிப்ரவரி 14, 1942 மற்றும் ஜனவரி 24, 2001 - பிப்ரவரி 01, 2002)

அமைதி, திருப்தி, தோழமை, ஆழ்ந்த அறிவு உடையவர்கள். ஆலோசனைப் பெறத் தகுந்தவா;கள். கடின உழைப்பால் வாழ்க்கையில் நல்ல பலன்களை அடைவர். தங்களின் ஆராய்ந்து உணரும் அறிவின் மேல் அதிகம் நம்பிக்கை வைத்து அதைச் சார்ந்து இருப்பர். நம்பிக்கைக்கு உகந்தவர். நம்பத் தகுந்தவர்.

**உலோக பாம்பு** (பிப்ரவரி 14,1953 - பிப்ரவரி 02,1954 மற்றும் பிப்ரவரி 10, 2013 - ஜனவரி 30, 2014)

குணங்கள் எச்சாpக்கை தன்மை, விடாமுயற்சி, திட்டமிடும் தன்மை, சுறுசுறுப்பு கொண்டவா;கள். கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு, குறிக்கோள் நோக்கியே அவா;கள் எண்ணம் இருக்கும். தங்களுக்குக் கிடைக்க வேண்டியதை எந்தத் தடை வந்த போதும் பெறும் முயற்சி இவா;களிடத்தில் உண்டு. தோல்வி என்பது இவா;களின் அகராதியில் கிடையாது. பணத்தைக் கொண்டு தங்களுக்கென தொடா;ந்து எதையேனும் வாங்கிய வண்ணம் இருப்பா;.

**நீர் பாம்பு** (பிப்ரவரி 04,1905 - ஜனவரி 24,1906 மற்றும் பிப்ரவரி 02,1965 - ஜனவரி 20,1966)

பணத்தின் மீது பற்று, ஆழ்ந்த சிந்தை, பொறுமை உடையவர்கள். செல்வாக்கு, ஊக்கம், கூரிய அறிவு இவர்களின் குணத்தைக் குறித்துச் சொல்லப்படும் வார்த்தைகள். குழுவில் சிறந்த முறையில் பணி செய்வர். கவனிப்பையும் பாராட்டையும் எதிர்பார்ப்பர். மிக நெருக்கமானவர்களிடம் மட்டுமே தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வர்.

நீங்கள் பாம்பு வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனர்.

**பாம்பு வருடப் பலன்கள்**

பாம்பு வருடம் மாற்றங்கள் பலவற்றைக் கொண்டு வரும். முயற்சிகளும், யோசனைகளும் அதிகமாய் இருக்கும்;. அமைதியாய் பல புதிய புதிய விசயங்கள் கண்டுபிடிக்கப்படும். ஆனால் அமைதியான வருடமாய் இருக்காது. மிகவும் கடினமானச் சூழல், வேற்றுமைகள் தீர்க்கப்படாத காரணங்களால், போர், போராட்டங்கள் அதிகமாய் இருக்கும். பாம்பு வருடம் மிகவும் எதிர்மறையான சக்திகளை உருவாக்கும் வருடம்.



# 7. குதிரை



- ✓ ஆண்டுகள் - 1904 1918 1930 1942 1954 1966 1978 1990 2002 2014 2026 2038 2050
- ✓ நேரம் - காலை 11:00 முதல் மதியம் 1:00 வரை
- ✓ உரிய திசை - தெற்கு
- ✓ உரிய காலங்கள் - கோடை காலம், ஜுன் மாதம்
- ✓ நிலையான மூலகம் - நெருப்பு
- ✓ யின்- யாங் யாங்

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி, எருது, புலி, முயல், டிராகன் முதல் ஐந்து இடங்களில் வந்தன. டிராகன் வந்து சேர்ந்த பின், திடீரென குதிரையின் குழம்பிலிருந்து பாம்பு வெளி வந்தது. இதைக் கண்டு பயந்து பின் வாங்கியது குதிரை. இதனால் குதிரை போட்டியில் ஏழாவதாய்ப் போனது. கடவுளர்கள் அதை வாழ்த்தி வருடச் சக்கரத்தின் ஏழாவது சின்னமாய் தெரிவு செய்தார்கள் என்பது கதை.

கீழ்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் குதிரை வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ ஜனவரி 25,1906 - பிப்ரவரி 12,1907
- ➢ பிப்ரவரி 11,1918 - ஜனவரி 31,1919
- ➢ ஜனவரி 30,1930 - பிப்ரவரி 16,1931
- ➢ பிப்ரவரி 15,1942 - பிப்ரவரி 04,1943
- ➢ பிப்ரவரி 03,1954 - ஜனவரி 23,1955
- ➢ ஜனவரி 21,1966 - பிப்ரவரி 08,1967
- ➢ பிப்ரவரி 07,1978 - ஜனவரி 27,1979
- ➢ ஜனவரி 27,1990 - பிப்ரவரி 14,1991
- ➢ பிப்ரவரி 12, 2002 - ஜனவரி 31,2003
- ➢ ஜனவரி 31, 2014 - பிப்ரவரி 18,2015

**குணங்கள்**

- ❖ குதிரைவாசிகள் சிறந்த புத்திசாலிகள். புதிய விசயங்களை உடனுக்குடன் புhpந்து கொள்ள வல்லவர்கள். உற்சாகம் மிகக் கொண்டவர்கள். எல்லோராலும் விரும்பப்படுபவர்கள். பிடிவாதக்காரர்கள். சமயங்களில் எரிச்சலூட்டினாலும், பழகுவதற்கு உகந்தவர்கள்.
- ❖ உண்மை, தோழமை, திறந்த மனம் போன்ற குணங்களைப் பெற்றவர்கள். சுதந்திரமாய், நடுவு நிலைமை கொண்டவராய், திறமைகள் பலவும் கொண்டவராய், சூழலுக்கு ஏற்ப தன்னைப் பொருத்திக் கொள்பவராய், எப்போதும் துறுதுறுப்புடன் உயிர்ப்புடன் இருப்பவர்கள். உணர்வுப்பூவமானவர்கள். மனிதர்களையும் சூழலையும் சரியாய் எடை

போட வல்லவர்கள். தங்களுக்குப் பிடித்ததை தன் வழியிலேயே செய்யும் சுதந்திரத்தை விரும்புபவர்கள். வேகமாய் முடிவுகளை எடுக்கக் கூடியவர்கள். மறதி, சமயங்களில் பிரச்சினைகளைக் கொடுக்கும். இருந்தாலும் செய்வதைச் செய்து முடிக்க முயல்வர். நம்பகமானவர்கள். பொறாமை குணமற்றவர்கள்.

- ❖ நேரத்தை வீணாக்குபவர்கள். அட்டவணைப்படி நடக்க விரும்பாதவர்கள். நண்பர்கள் குழுவில் பலர் இருந்தாலும் தான் செய்ய வேண்டிய வேலையைத் தான் விரும்பிய வழியில் செய்ய எண்ணம் கொண்டு செயல்படுவர். பலம், வேகம், பழக இலகுவான குணங்களைக் கொண்டவர்கள். முக்கிய நபராய் எண்ணப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே செயல்படுவர். சந்தோசமாய் வாழ்க்கை வாழ வேண்டும் என்ற குறிக்கோள் கொண்டவர்கள் என்பதால், கூட்டங்களில் தங்களது நகைச்சுவை மூலம் கூடியுள்ளவர்களை சந்தோசப்படுத்துவர்.
- ❖ பல வேலைகளை ஒரே நேரத்தில் செய்யக் கூடிய சக்தி படைத்தவர்கள். ஆனால் தொடங்கிய பல வேலைகளை முடிக்க மாட்டார்கள். ஏனென்றால் அடுத்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தே வேலை செய்கின்ற காரணத்தினால், இருக்கும் வேலைகளை அப்படியே போட்டு விட்டு, அடுத்த வேலைக்குத் தாவி விடுவார்கள். அவர்கள் தங்களைப் பற்றியே அதிகம் எண்ணிக் கொண்டே இருக்கும் காரணமாய், ஏதாவது தான் விரும்பியபடி நடக்கவில்லையென்றால், அதற்காகக் கோபப்பட்டு, பக்கத்தில் உள்ளவர்களைச் சாடுவார்கள்.
- ❖ அவர்கள் பேசுவதில் சுகம் காண்பவர்கள். அவர்கள் உற்சாகம் மிகக் கொண்டு, மாறுதல்களை வரவேற்பவர்கள். சில நேரங்களில் அவர்கள் அதிகக் கோபம், அகந்தை, மூர்க்கத்தனம் கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.
- ❖ இன்று வாழ். நாளை பார்த்துக் கொள்ளலாம் என்ற கொள்கை உடையவர்கள். குதிரைவாசிகளுக்கு அவர்களது உணர்வுகளைக் காட்ட வாய்ப்பு கொடுக்கப்பட வேண்டும். பொறுமையற்றவர்கள். கோபம் மிகக் கொள்வார்கள். அவர்கள் எச்சரிக்கையுடன் செயல்பட முயல வேண்டும்.
- ❖ துணிச்சல் மிக்கவர்கள். கூர்மையான அறிவு கொண்டவர்களாதலால் பண விசயங்களை திறம்படக் கையாளக் கூடியவர்கள். சுயமாய் எதையும் செய்ய வல்லவர்கள். உற்சாகப் பேர்வழிகள். உடற்பயிற்சியும் மனப்பயிற்சியும் விருப்பமானவை. வேகமாய் ஓடாடக் கூடியவர்கள். வேகமாய்ப் பேசினாலும் நளினமாய் பேசுவர். தான் விரும்பிய வழியில் எதுவும் நடக்க வேண்டும் என்று ஆசைப்படுவர். அப்படி நடக்கவில்லையென்றால் ஆவேசப்படுவர். எதை விடவும் தங்கள் சுதந்திரத்தை விரும்புவர். யாரையும் பேராசைக் கண்ணோடு பார்க்க மாட்டார்கள். எதையும் உடைமை கொண்டாட மாட்டார்கள். மிகவும் அமைதியாய் இருப்பர். உள்ளுணர்வைச் சார்ந்திருப்பர்.
- ❖ குதிரைவாசிகள் புதிய புதிய எண்ணங்கள் கொண்டவர்கள். கடினமான பிரச்சினைகளுக்கும் புதிய வழியில் தீர்வு காண்பர். ஒரு கருத்துத் தோன்றியதுமே, அதைச் செய்து முடிக்கத் துடிப்பர். வேலையை முடிக்கும் வரை நேரம் காலம் பார்க்க மாட்டார்கள். நேரமின்மை காரணமாய் எந்த முடிவையும் விரைவில் எடுக்கத் துடிப்பர். தவறான முடிவாய் இருந்தாலும் சரி, நேரத்தை வீணடிக்காமல் முடிவு எடுத்தால் சரி.

**தொழில்**

- பல காரியங்களை ஒரே நேரத்தில் செய்யும் திறம் படைத்தவர்கள். செயல்கள் நடந்து கொண்டு இருக்கும் போதே, அதைத் தன் வழியே செய்ய வல்லவர்கள். நேரம் காலம்

பாராமல் உழைக்கக் கூடியவர்கள். அவர்கள் பெரிதும் களைப்படையும் போது மட்டுமே வேலைச் செய்வதை நிறுத்துவார்கள். அவர்களுக்கு அன்றாடம் செய்யும் வேலை அட்டவணை என்பதெல்லாம் பிடிக்காத ஒன்று. நேரப்படி காரியம் செய்ய விரும்பாதவர்கள். எப்போதும் தங்களை ஏதோவொரு செயலில் ஈடுபடுத்திய வண்ணம் இருப்பர்.

- பலருடன் இணைந்து செய்யும் வேலைகளை விரும்பிச் செய்வர். ஆணைகளுக்கு அடி பணிவது அவர்களுக்கு பிடிக்காத விசயம். தினமும் ஒரே மாதிரியாக செய்யும் வேலைகளைக் கண்டு ஓடுவர். புதிய புதிய விசயங்களை உடனுக்குடன் புரிந்து கொள்ளும் சாமர்த்தியம் இருப்பதன் காரணமாய், அவர்கள் எல்லா வேலைகளையும் திறம்படச் செய்வார்கள். அவர்கள் நல்ல மக்கள் தொடர்பாளர்கள். பதவி, அதிகாரம் விருப்பத்தக்க விசயங்கள்.
- கவிஞர், பயணக்கட்டுரையாளர், எழுத்தாளர், அரசியல்வாதி, துணிகரச் செயல்கள் செய்பவர், பத்திரிக்கையாளர், மொழிபெயர்ப்பாளர், மொழி கற்பிப்பவர், சுற்றுலா உதவியாளர், நூலகர், விமான ஓட்டுநர், விற்பனையாளர், விளம்பரப் பணியாளர் பணிகள் உகந்தவை.

**உறவு**

அனைவரையும் கவரத்தக்கவர்கள். அவர்கள் தோழமை குணம் அதிகம் கொண்டவர்களாதலால், நிறைய மனிதர்கள் கூடியிருக்கும் கூட்டங்களில் கலந்து கொள்ள விரும்புவார்கள். நேசிக்கும் அதே வேகத்தில் வெறுக்கவும் செய்வார்கள். வேகமாக நண்பர்களாவார்கள். அதே வேகத்தில் பழகுவதில் ஆர்வமாக இருப்பார்கள். சட்டென முடிவு எடுக்கக்கூடியவர்கள் என்பதால், எதையும் வேகத்துடன் செய்வர். அதனால் உடன் இருப்பவர்களுக்கு அவர்களுடன் ஒத்துப் போவது சற்றே சிரமம். ஒவ்வொரு புதிய உறவிலும், தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் தரக் கூடியவர்கள். இத்தகைய தன்மை அவர்களது பிற்கால வாழ்வில் ஸ்திரமான, பலமான உறவினை ஏற்படுத்தக் கூடியது.

அன்பிற்காக எதையும் கொடுக்கத் தயாராய் இருப்பார்கள். குதிரைவாசி வீட்டில் இருந்தால், வீட்டில் இருப்பவர்கள் அனைவரது கவனமும் அவர்களிடம் இருக்கும்படி நடந்து கொள்வார்கள். அவர்கள் எப்போதும் நடுநாயகமாய் இருந்து, எல்லாம் அவர்களைச் சுற்றி நடக்க வேண்டும் என்று எண்ணும் இயல்பினர். அதற்கு பரிசாக, உழைத்து, எல்லோருடனும் அதைப் பகிர்ந்து கொள்வர்.

**உடல் நலம்**

ஆரோக்கியமான உடல் கொண்டவா;கள். வாழ்க்கையைச் சாp நோக்கில் காண்பதால், அவா;கள் உடல்நிலை நன்றாகவே இருக்கும். விளையாட்டில் ஆh;வம் அதிகம் உள்ளவா;கள். அவா;களை வெட்ட வெளியில் விட்டு விட்டால், மிகுந்த உற்சாகத்துடன் செயல்படுவா;. கட்டிப் போட்டால் மட்டுமே நோயுறுவா;. தூக்கமின்மை நோயினால் தவிக்கும் வாய்ப்பும் உண்டு.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

மகாகவி பாரதியார், கர்நாடக இசைக்கலைஞர் பாலமுரளி கிருஷ்ணா, முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி, முன்னாள் ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா, கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், எழுத்தாளர்கள் ஆர். கே. நாராயணன், சிவசங்கரி, நடிகர்கள்; கமலஹாசன், அமிதாப்பச்சன், நடிகர்கள் கிளிண்ட் இஸ்ட்வுட், ஹரிசன் போர்ட், பாடகி ஜனேட் ஜாக்சன், குத்துச் சண்டை வீரர் மைக் டைசன், முன்னாள் அமெரிக்க அதிபர் டேட்டி ரூஸ்வெல்ட், தொழிலதிபர் வாரன் பபெட்

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் - 1, 3, 4, 8, 13, 14, 41, 43
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் - நாய், புலி, ஆடு
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் - எலி, குரங்கு

**மூலகக் குணங்கள்**

குதிரைவாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்புக் குதிரை** (ஜனவரி 25,1906 - பிப்ரவரி 12,1907 மற்றும் ஜனவரி 21,1966 - பிப்ரவரி 08,1967)

உறுதியானவர்கள். முரணானவர்கள். மன உறுதி மூலம் செயல்படுவார்கள். மயக்குபவர்கள். உள்ளுக்குள் எப்போதும் தீ கொழுந்து விட்டு எரிந்து கொண்டு இருக்கும். அவர்கள் வாழ்க்கையின் முனையில் வாழ விரும்புவர். மாற்றங்களுக்கு எப்போதும் தயாராய் இருப்பர். மாற்றமே சுவாரசியம் என்று எண்ணுபவர்கள். கருத்தில் உறுதியுடையவர்கள். எங்குமே நெருப்புக் குதிரைவாசிகள் கருத்துக்களின் எல்லையில் நிற்க மாட்டாh;கள்.

**மரக் குதிரை** (பிப்ரவரி 03,1954 - ஜனவரி 23,1955 மற்றும் ஜனவரி 31,2014 - பிப்ரவரி 18,2015)
உதவுதல், நம்பகத் தன்மை குணங்கள். முன்னேற்றம் பெற பெற ஊக்கத்துடன் உழைக்க வல்லவர்கள். உறுதி, வலிமை, திறமான முடிவு அவர்களின் முக்கியத் தன்மைகள். மாற்றாருடன் நன்கு பழகுவர். அவர்களிடம் நெருங்கிய உறவுகளிலும் தொழில் சார்ந்த விசயங்களிலும் வெற்றி பெறும் திறம் உண்டு.

**பூமிக் குதிரை** (பிப்ரவரி 11,1918 - ஜனவரி 31,1919 மற்றும் பிப்ரவரி 07,1978 - ஜனவரி 27,1979)

நம்பகத்தன்மை, விவேகம், நிதானம், தீர்க்கமான முடிவு எடுக்கும் தன்மை உடையவர்கள். எவ்வளவு காலமானாலும், தங்கள் குறிக்கோளுக்காக முயற்சி செய்து கொண்டே இருப்பர். எல்லாப் பக்கங்களிலிருந்தும் சூழலை ஆராய்ந்து நன்முடிவை எடுப்பர். சூழலுக்கு ஏற்ப தங்களைப் பொருத்திக் கொள்வர். அவர்கள் வேடிக்கையானவர்களும் கூட.

**உலோகக் குதிரை** (ஜனவரி 30,1930 - பிப்ரவரி 16,1931 மற்றும் ஜனவரி 27,1990 - பிப்ரவரி 14,1991)

பாசம், அகந்தை, பிடிவாதம் கொண்டவர்கள். போட்டியினால் ஊக்கம் கொண்டு உழைப்பார்கள். சொன்ன வாக்கை சாதாரணமாக எடுத்துச் செயல்படுவார் பொறுப்பைக் கொடுத்து அவர்களை எளிதில் அச்சுறுத்தலாம். ஒரு உறவிலிருந்து மற்றொரு உறவு, ஒரு வேலையிலிருந்து மற்றொரு வேலை என்று இருக்க விரும்புவர். அதனால் துணையை விடவும் அவர்களுக்கு நண்பர்கள் அதிகம் இருப்பர்.

**நீர்க் குதிரை** (பிப்ரவரி 15,1942 - பிப்ரவரி 04,1943 மற்றும் பிப்ரவரி 12, 2002 - ஜனவரி 31,2003)

சுய கருத்துக்களில் பற்றுடையவர். செயலால் ஊக்கம் கொள்பவர். உல்லாசப் பேர்வழிகள். முரணானவர்கள். சூழலுக்கு தங்களை எளிதில் பொருத்திக் கொள்வர். ஆனால் எளிதில் முடிவு எடுக்க முடியாதவர்கள். ஓடுகிற ஓட்டத்தில் செல்ல விரும்புவர். திறமான முடிவுகளை எடுக்க முடியாத காரணத்தால் எப்போதும் அடுத்தவர்களை குழப்பத்தில் ஆழ்த்த வல்லவர்கள். இது சற்றே தொந்தரவாக இருந்த போதும், நீர்க் குதிரைவாசிகள் இருக்கும் போது மகிழ்ச்சி தரக்கூடியதே. அதனால் உடன் இருப்பவர்கள் அதற்குப் பழகி விடுவர்

நீங்கள் குதிரை வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர் என்று சீனர் கணிக்கின்றனர்

**குதிரை வருடப் பலன்கள்:** குதிரை வருடம் முன்னேற்றம் தரும் வருடம். மகிழ்ச்சிகரமானது. துணிச்சலான காரியங்கள் செய்யத் தகுந்த வருடம். திருப்தியைத் தரும் வருடம். துணிவும், தைரியமும் அதிகமாய் செயல்படுமாதலால் வளர்ச்சி உயர உயரச் செல்லும். ஸ்திரமான சூழல் இருந்த தும், மற்ற வருடங்களில் நடப்பன போன்று அதிர வைக்கும் சம்பவங்கள் நிச்சயம் நடக்கும்.



# 8 ஆடு



- ✓ ஆண்டுகள் - 1907 1919 1931 1943 1955 1967 1979 1991 2003 2015 2027 2039 2051
- ✓ நேரம் - மதியம் 1:00 முதல் 3:00 வரை
- ✓ உரிய திசை - தெற்கு, தென்மேற்கு
- ✓ உரிய காலங்கள் - கோடை காலம், ஜூலை மாதம்
- ✓ நிலையான மூலகம் - நெருப்பு
- ✓ யின்- யாங் யின்

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி, எருது, புலி, முயல், டிராகன், பாம்பு, குதிரை முதல் ஏழு இடங்களில் வந்தன. குதிரை வந்து சேர்ந்த பின், ஆடு, குரங்கு, சேவல் மூன்றும் கடவுளர்களின் கண்களில் தென்பட்டன. இம்மூன்று விலங்குகளும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து கொண்டே கரையை வந்து சேர முயன்றன. சேவல் ஒரு மரப் பலகையைக் கண்டுபிடித்து, மற்ற இரண்டு விலங்குகளையும் அதில் ஏறச் செய்து அழைத்து வந்தது. வழியில் இருந்த புதர்களில் பலகை மாட்டிக் கொண்ட போதெல்லாம் குரங்கும், ஆடும் அதை விலக்கி வழி ஏற்படுத்திக் கொடுத்து, இறுதியில் கரையை வந்தடைந்தன. கடவுளர்கள் அவற்றை வாழ்த்தி வருடச் சக்கரத்தின் எட்டாவதுச் சின்னமாய் ஆட்டைத் தெரிவு செய்து குரங்கை ஒன்பதாவதாகவும், சேவலை பத்தாவதாகவும் அறிவித்தார்கள் என்பது கதை.

இந்தக் கதை ஆடு ஏன் எட்டாவதாய் வந்தது என்பதைக் குறித்துக் கூறப்படும் கதை.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் ஆடு வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ பிப்ரவரி 13,1907 - பிப்ரவரி 01,1908
- ➢ பிப்ரவரி 01,1919 - பிப்ரவரி 19,1920
- ➢ பிப்ரவரி 17,1931 - பிப்ரவரி 05,1932
- ➢ பிப்ரவரி 05,1943 - ஜனவரி 24,1944
- ➢ ஜனவரி 24,1955 - பிப்ரவரி 11,1956
- ➢ பிப்ரவரி 09,1967 - ஜனவரி 29,1968
- ➢ ஜனவரி 28,1979 - பிப்ரவரி 15,1980
- ➢ பிப்ரவரி 15,1991 - பிப்ரவரி 03, 1992
- ➢ பிப்ரவரி 01,2003 - ஜனவரி 21, 2004
- ➢ பிப்ரவரி 19,2015 - பிப்ரவரி 07, 2016

**குணங்கள்**

- சீன ஜோதிடத்தில் ஆடு வருடத்தில் பிறந்தவர்களே மிகச் சிறந்த படைப்பாளிகளாய் கருதப்படுகின்றனார். அவர்கள் பெரும்பாலும் கலை நயம் மிக்கவர்களாகவும், இனிமையானவர்களாகவும், வசீகரமானவர்களாகவும் இருப்பர். படைப்பு, புத்திசாலித்தனம், அமைதி, சார்ந்திருத்தல் ஆகிய குணாம்சங்கள் கொண்டவர்கள். தனிமையை விரும்புபவர்கள். மனத்தின் ஓட்டத்தை ஆராய்ந்து கொண்டு இருப்பது பிடித்த விசயம். கூட்டத்தினருடன் இருப்பது பிடித்தாலும், நடுநாயகமாய் இருக்க விரும்ப மாட்டார்கள். அவர்களது கவனிக்கும் திறன் அவர்களை நல்ல பாதுகாவலர்களாய் இருக்கச் செய்யும். அவர்கள் அடக்கமும், அமைதியும் கொண்டவர்கள். அதிக நேரத்தைத் தங்கள் எண்ண ஓட்டங்களைக் கவனிப்பதிலேயே செலவழிப்பர்.
- இயற்கையில் கூச்ச சுபாவம் உள்ளவர்கள். அவர்கள் நற்பண்புகளைப் பெற்றிருந்தாலும், வாழ்க்கை நடைமுறைகளை ஏற்றுக் கொள்ளாதவர்கள். தவறான நேரங்களில் தவறானவற்றைக் கூறி மாட்டிக் கொள்ளும் பண்பு பலரிடத்தில் இருக்கும். இருந்தாலும் அவர்களது வசீகரமும், கபடமற்ற தன்மையும் அவர்களுக்கு குறைவில்லாத நண்பர்களையும், தொண்டர்களையும் ஏற்படுத்திக் கொடுக்கும்.
- அவர்கள் இயற்கையிலேயே சூரர்கள். கெட்டனவற்றை ஊகிக்க வல்லவர்கள். அவர்கள் புரிந்து கொள்ளும் தன்மையும், மன்னிக்கும் குணமும், இளகிய மனமும் கொண்டவர்கள். வெளியுருவில் அவர்கள் கற்பனையில் மதிப்பவர்களாய் இருந்த போதிலும் உள்ளுக்குள் அவர்கள் மிகுந்த ஆவலுள்ள பத்திரத் தன்மையற்ற மனம் கொண்டவர்கள். அவர்களுக்கு அன்றாட வாழ்க்கையே கடினமானதாகவும் தடுமாற்றமானதாகவும் இருக்கும்.
- தங்களைச் சுற்றி அழகியப் பொருட்கள் இருக்க வேண்டும் என்று விரும்புவர். அவர்கள் நன்முறையில் தங்களை அலங்கரித்துக் கொள்வர். சில சமயங்களில் உருவத் தோற்றத்தில் அதிகக் கவனம் செலுத்தவும் செய்வர். தங்களுக்கு சிறந்த தோற்றத்தைத் தர, அதிகமாய் செலவு செய்து சிறந்த உடைகளைப் பெற முயல்வர். வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களைப் பெற செலவு செய்த போதும், அவர்கள் செலவழிப்பவர்களாகவும் பகட்டாகவும் இருக்க மாட்டார்கள்.
- அவர்கள் எப்போதும் நடிப்பு, கைவினைக் கலைகள் போன்ற படைப்பு முயற்சிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு மகிழ்ச்சி அடைவர். அழகற்ற பொருட்கள் அவர்களைப் பெரிதும் பாதிக்கும். அவர்களுக்கு வீட்டில் ஆடம்பரமான அலங்காரங்கள் தேவையில்லை. அவர்களது கலை நயத்தைக் காட்டும் பொருட்கள் இருந்தாலே போதும்.
- சீன ஜோதிடத்தில் அவர்கள் சமூகச் சேவகர்களாய் வர்ணிக்கப்படுகிறார்கள். அவர்கள் மிகவும் உண்மையானவர்கள். கவலைக்கிடமான கதைகளை அப்படியே நம்புபவர்கள். மற்றவர்கள் செய்யும் தவறுகளைப் புரிந்து கொண்டு மன்னிப்பதில் சமர்த்தர்கள். அவர்களைப் பற்றி பிறர் விமர்சனம் செய்வது அவர்களுக்குப் பிடிக்காத விசயம்.
- உணர்வுகளுக்கு அடிமையாகிப் போனவர்கள். அடிக்கடி எதையேனும் யோசித்துக் கொண்டும், வருத்தப்பட்டுக் கொண்டும், துக்கித்தும் இருப்பார்கள். ஆடுவாசிகளை யாரேனும் ஒழுங்குபடுத்த வேண்டும். அவர்களது திறமையைப் பயன்படுத்த எடுத்துக் கூறிச் செய்யச் சொல்ல வேண்டும். யாரேனும் அவர்களை அன்புடன் கவனித்துக் கொள்ளவும் பார்த்துக் கொள்ளவும் இருக்க வேண்டும். அவர்களிடம் அடிக்கடிப் பேசி, நம்பிக்கை தர வேண்டும்.

- ஆடுவாசிகள் தங்களை வாட்டும் விசயங்களை நேரடியாய்ச் சொல்ல மாட்டார்கள். நீங்கள் மெல்ல மெல்ல அவர்களிடமிருந்துத் துருவித் துருவிக் கேட்டு அறிய வேண்டும். எல்லா முயற்சியும் தோற்றால், அவர்களிடம் கோபமாய்ப் பேசினால் போதும். விசயங்கள் வெளிவந்து விடும். சொல்ல வேண்டும் என்ற எண்ணம் அவர்கள் மனதில் பதிய வேண்டும். பின் எல்லா ரகசியங்களையும் கொட்டி விடுவர்.
- ஆடுவாசிகள் பல சமயங்களில் கவலையுடனே இருப்பார்கள். அவர்களை மற்றவர்கள் உற்சாகப்படுத்த வேண்டும். எல்லாம் நலமே என்று எடுத்துக் கூறி செயல்பட வைக்க வேண்டும். பாராட்டுக்கள் அவர்களை மகிழச் செய்யும். ஊக்குவித்தால் அவர்கள் நெடுந்தொலைவு செல்ல வல்லவர்கள்.
- ஆடுவாசிகளுக்கு நல்ல எதிர்காலம் இருக்கும். அதிர்ஷ்டமும் உண்டு. அவர்களுக்கு சொத்து, உயில் விசயங்களில் நல்ல பலன் கிடைக்கும். கஷ்டமான சூழலிலும், ஆடுவாசிகளுக்குத் தேவையானவை எளிதில் கிடைத்துவிடும். அவர்கள் அச்சுறுத்தலின்றி தங்கள் காரியங்களைச் சரி வரச் செய்யக் கூடியவர்கள். அவர்களது பொறுமையும் சகிப்புத் தன்மையும் சமயங்களில் மற்றவர்களைப் பைத்தியமாகச் செய்யும். அவர்களது சமாதானச் சாக்கு தளரச் செய்து விடும். அவர்களை உடைக்கவே முடியாது.
- ஆடுவாசிகள் அதிகச் செலவாளிகளாகவும் இருப்பார்கள். அவர்கள் பண விவகாரங்களில் அதிகம் ஈடுபடுதல் நல்லதல்ல. அவர்கள் ஆடம்பரமாகவும் ஜாலியாகவும் இருக்க விரும்புவர். நடைமுறைக்கு ஒத்துப் போகாதவர்கள். திடமான முடிவை எடுக்காமல் மதில் மேல் பூனையாய் நிற்பர்.
- ஆடுவாசிகளுக்கு இயற்கையின் மீது அதிக நாட்டமிருக்கும். நிலவொளி, ரோஜாக்கள், இனிய இசை, மெழுகுவர்த்தி ஒளி அவர்களை மயக்கும். அவர்கள் உலகத்தை அழகிய கண்ணாடி கொண்டு பார்க்க விரும்புவர். அவர்கள் எப்போதும் கடினமாய் உழைக்க வேண்டி இருக்காது. நல்ல விசயங்கள் தானாகவே நடக்கும். அவர்களுக்கு மிகவும் வெளிச்சமான காற்றோட்டமான சூழல் பிடிக்கும். படைக்கும் தொழிலில் சிறந்து விளங்குவர்.
- வீட்டில் மட்டுமே அவர்கள் மிகுந்த சுகத்தைப் பெறுவர். அங்கே அவர்கள் தங்கள் கலை நயத்தைக் காட்ட முடியும். ஓவியம், சமையல் கலை என்று பற்பலக் கலைகளில் ஈடுபட்டு மகிழ்வர். அவர்கள் படுக்கையைப் பெரிதும் நேசிப்பர். அங்குதான் ஓய்வு எடுத்துக் கொண்டே, தங்கள் எண்ணங்களை ஆராயலாம் அல்லவா?
- பயணம் செய்யும் போதும், மகிழ்ச்சி தரக்கூடிய நிகழ்ச்சிகளுக்குச் செல்லும் போதும், ஆடுவாசிகள் குழுவாய்ச் செல்லவே விரும்புவர். அதிக மக்கள் இருக்கும் இடங்களுக்குச் செல்ல விரும்புவர்.

**தொழில்**

- கூட்டத்துடன் சேர்ந்து வேலை செய்ய விரும்புவார்கள். அதிகாரம், பதவி அவர்களுக்கு ஒரு பொருட்டே அல்ல. அவர்கள் நேரடியாகக் கேட்டுக் கொண்டால் மட்டுமே தலைமைப் பொறுப்பை ஏற்கச் சம்மதிப்பார்கள். பூக்கடையாளர், வீட்டு அலங்கார நிபுணர், குழந்தைக் காப்பாளர், குழந்தை மருத்துவர், நடிகர், ஒளிப்பதிவாளர், சிகை அலங்காரம் செய்பவர், ஓவியர், இசையமைப்பாளர், கலை பயிற்றுவிப்பவர், வரலாற்று ஆசிரியர் போன்ற பணிகளுக்கு உகந்தவர்கள்.

- தங்களுக்கான வேலை நேரங்களை அமைத்துக் கொண்டு செயல்படுவர். அவர்கள் மிக அதிகமான ஒழுக்க முறைகளைக் கடைபிடிக்க விரும்ப மாட்டார்கள். வியாபார விசயங்களில் அவர்கள் சற்றே ஒழுங்கின்மை உடையவர்கள். அத்தனை அக்கறை செலுத்த மாட்டார்கள். கடினமான சமயங்களில் வேலையைச் சரியாய்ச் செய்து முடிக்க முடியாமல் தவிப்பர். அவர்களது போக்கில் விட்டால் செயலைச் செவ்வனே செய்து முடிப்பர்.

- ஆடுவாசிகள் உயர்ந்த நோக்கம் கொண்டவர்களாய் இல்லாத போதும், அவர்களது திறமைக்கேற்ற வேலை கிடைத்து விட்டால் அதைச் செய்வதில் தீவிரமும் பேராவலும் கொண்டு செயல்படுவர்.

**உறவு**

ஆடுவாசிகள் அந்தரங்கவாசிகள். அதனால் அவர்களை அறிந்து கொள்வது, புரிந்து கொள்வது மிகவும் கடினம். அவர்களாகவே எங்கே, எப்போது யாருடன் தங்களது அந்தரங்க விசயங்களைப் பகிர்ந்து கொள்வது என்பதை முடிவு செய்ய வேண்டும். அதனால் பெரும்பாலான ஆடுவாசிகளுக்கு நெருங்கிய நண்பர்கள் இருக்க மாட்டார்கள். ஆனாலும் அவர்கள் நேசிப்பவர்களுக்காக மிகக் கடுமையாய் உழைப்பார்கள். அவர்கள் தாங்கள் விரும்புபவர்களை வெறுப்புக்கு உள்ளாக்க விரும்பாதவர்கள். ஆடுவாசிகள் குடும்பத்தில் பற்றுடையவர்கள். அவர்கள் யாருடைய பிறந்த நாளையும் மறக்க மாட்டார்கள். நீங்களும் அவர்களுடையதை மறக்காமல் இருப்பது நல்லது.

**உடல் நலம்**

ஆடுவாசிகள் அமைதியாய் இருக்கும் காரணத்தால், அவர்களுக்கு உடல் கோளாறுகள் மிகக் குறைவே. அவர்களது நல்ல வெளித் தோற்றம், அவர்களை எப்போதும் ஆரோக்கியமானவர்களாகவே காட்டும். அவர்கள் மகிழ்வுடன் இருக்கும் போது ஆரோக்கியம் மிக்கவர்கள். மகிழ்ச்சியின்றி இருக்கும் நேரங்களில், அதுவும் அன்பு கொண்டவர்களினால் ஏற்படும் பிரச்சினைகள் வரும் போது, சோர்வுற்று நோய்வாய்ப்படுவார்கள். கஷ்டங்கள் மிகவும் சங்கடப்படுத்தும். எளிதில் உணர்ச்சி வயப்படக் கூடியவர்கள். சமயங்களில் அளவுக்கு அதிகமாகவும் செயல்படுவர்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் அப்துல் கலாம், தொழிலதிபர்கள் பில்கேட்ஸ், விஜய் மல்லையா, வடலூர் வள்ளலார், விஞ்ஞானி விக்ரம் சாராபாய், பாட்மின்டன் ஆட்டக்காரர் பிரகாஷ் படுகோன், பாடகி டி. கே. பட்டம்மாள், கவிஞர் வாலி, நடிகை மாதுரி தீட்சித், டென்னிஸ் ஆட்டக்காரர் போரிஸ் பெக்கர், விமானத்தைக் கண்டுபிடித்த ஆர்வில் ரைட், ஓவியர் மைக்கலேன்ஜலோ, அமெரிக்க எழுத்தாளர் மார்க் டிவைன், நடிகர் பரூஸ் வில்ஸ், எழுத்தாளர் ஜேன் ஆஸ்டின்.

**பிற தகவல்கள்**

- ✓ **அதிர்ஷ்ட எண்கள்** - 3, 4, 5, 12, 34, 45, 54

- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் - முயல், பன்றி, குதிரை
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் - எலி, எருது

**மூலகக் குணங்கள்**

ஆடுவாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்பு ஆடு** (பிப்ரவரி 13,1907 - பிப்ரவரி 01,1908 மற்றும் பிப்ரவரி 09,1967 - ஜனவரி 29,1968)

தெளிவு, ஆக்ரோஷம், உற்சாகம் கொண்டவர்கள். மற்ற ஆடுவாசிகளைப் போன்றல்லாது அடுத்தவரின் அனுமதியை எதிர்பார்க்க மாட்டார்கள். எப்போதும் மற்றவர்களின் நடுவில் தங்களை முன்னிலைப்படுத்திக் கொள்வர். அவர்கள் சமூக விரும்பிகள். அதனால் அவர்களின் குடும்பம், நண்பர்கள் வட்டம் மிகவும் பலமானதாய் இருக்கும்.

**மர ஆடு** (ஜனவரி 24,1955 - பிப்ரவரி 11,1956 மற்றும் பிப்ரவரி 19,2015 - பிப்ரவரி 07,2016)

நம்பகத் தன்மை, பரந்த மனம், நம்பிக்கையால் ஊக்கம், உணா;ச்சி வசப்படும் தன்மை உடையவர்கள். நண்பர்களும் உறவினர்களும் இவர்களுடன் இருக்க பெரிதும் விரும்புவர். அதனால் குழுவில் அவர்கள் எப்போதும் சுகமாய் இருப்பர். உதவி செய்வதைப் பெரிதும் விரும்புவர். அவர்களின் அந்த இரக்க குணம் பல நேரங்களில் மற்றவர்களால் சாதகமாய்ப் பயன்படுத்தப்படும். மர ஆடுவாசிகள் தங்களைப் கவனித்துத் தற்காத்துக் கொள்ள சமயம் ஒதுக்க வேண்டியிருக்கும்.

**பூமி ஆடு** (பிப்ரவரி 01,1919 - பிப்ரவரி 19,1920 மற்றும் ஜனவரி 28,1979 - பிப்ரவரி 15,1980)

கடின உழைப்பு, சுய அதிகாரம், நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை உடையவர்கள். ஸ்திரமானவர்கள். நிலத்தில் கெட்டியாய் கால் பதித்து நிற்பர். சுதந்திரமானவர்கள். உலக அனுபவம் மிக்கவர்கள். ஆனால் தன்னம்பிக்கை சற்றே குறைவு. அவர்களுக்கு வாழ்க்கையின் முக்கிய விசயம் குடும்பமே. வாழ்க்கை தரும் எதையுமே மகிழ்ச்சியுடன் ஏற்பர்.

**உலோக ஆடு** (பிப்ரவரி 17,1931 - பிப்ரவரி 05,1932 மற்றும் பிப்ரவரி 15,1991 - பிப்ரவரி 03, 1992)

பொறாமை, தற்காப்புத் தன்மை, ஸ்திரத் தன்மை உடையவர்கள். வெளித்தோற்றத்தில் உறுதியாய் தோன்றினாலும், உள்ளத்தால் மிகவும் இளகியவர்கள். நன்கு புரிந்து கொண்ட நெருங்கிய நண்பர்கள் இதை நிச்சயம் ஆமோதிப்பார்கள். அவர்கள் கலாச்சாரத்தை நேசிப்பவர்கள். எல்லாக் கலைகளையும் உயர்வாய் மதிப்பார்கள்.

**நீர் ஆடு** (பிப்ரவரி 05,1943 - ஜனவரி 24,1944 மற்றும் பிப்ரவரி 01,2003 - ஜனவரி 21, 2004)

தன்னம்பிக்கை குறைவு, வசீகரம், ஆலோசனைகள் வழங்குவது, நேரத்தை சமயோசிதமாய் பயன்படுத்தும் தன்மை உடையவர்கள். கவலையற்ற உல்லாசிகள். வாழ்க்கை போகிற போக்கில் செல்ல விரும்புவர். அதனால், அவர்கள் நம் அருகில் இருந்தால், மகிழ்ச்சி தரும். தாங்கள் நினைத்தது நடக்கவில்லையென்றால் மிகவும் புலம்புவார்கள்.

நீங்கள் ஆடு வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனர்.

## ஆடு வருடப் பலன்கள்

ஆடு வருடம் அமைதியும் நிதானமும் கொண்ட வருடமாய் இருக்கும். ஒருவரை ஒருவர் நன்கு கவனித்துக் கொள்வர். கற்பனையும், படைப்புத் திறனும் அதிகமாய் வெளிக்காட்டும். மிதவாதத்தில் ஒற்றுமை என்ற கொள்கை பின்பற்றப்பட வேண்டும்.



# 9. குரங்கு



- ✓ ஆண்டுகள் - 1908 1920 1932 1944 1956 1968 1980 1992 2004 2016 2028 2040 2052
- ✓ நேரம் - மாலை 3:00 முதல் 5:00 வரை
- ✓ உரிய திசை - மேற்கு, தென்மேற்கு
- ✓ உரிய காலங்கள் - இலையுதிர் காலம், ஆகஸ்ட் மாதம்
- ✓ நிலையான மூலகம் - உலோகம்
- ✓ யின்- யாங் யாங்;

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி, எருது, புலி, முயல், டிராகன், பாம்பு, குதிரை, ஆடு முதலியன முதல் எட்டு இடங்களில் வந்தன. ஆடு, சேவல் இரண்டின் உதவியுடன் குரங்கும் கரையை வந்தடைந்தது. கடவுளர்கள் அவற்றை வாழ்த்தி வருடச் சக்கரத்தின் ஒன்பதாவதுச் சின்னமாய்க் குரங்கைத் தெரிவு செய்து அறிவித்தார்கள் என்பது கதை.

இந்தக் கதை குரங்கு ஏன் ஒன்பதாவதாய் வந்தது என்பதைக் குறித்துக் கூறப்படும் கதை.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் குரங்கு வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ பிப்ரவரி 02,1908 - ஜனவரி 21,1909
- ➢ பிப்ரவரி 20,1920 பிப்ரவரி 07,1921
- ➢ பிப்ரவரி 06,1932 - ஜனவரி 25,1933
- ➢ ஜனவரி 25,1944 பிப்ரவரி 12,1945
- ➢ பிப்ரவரி 12,1956 - ஜனவரி 30,1957
- ➢ ஜனவரி 30,1968 - பிப்ரவரி 16,1969
- ➢ பிப்ரவரி 16,1980 - பிப்ரவரி 04,1981
- ➢ பிப்ரவரி 04,1992 - ஜனவரி 22,1993
- ➢ ஜனவரி 22,2004 - பிப்ரவரி 08, 2005

**குணங்கள்.**

- ❖ அழகானவர்கள். வசீகரமானவர்கள். கற்பனை வளம் மிக்கவர்கள். சுட்டித்தனம், புத்திசாலித்தனம், அறிந்து கொள்ளும் ஆர்வம் அதிகம் உடையவர்கள். விளையாட்டுத் தனத்துடன் எப்போதும் இருப்பார்கள். நகைச்சுவை உணர்வு கொண்டவர்கள். சுறுசுறுப்பானவர்கள். அறிவுக்கும் புத்திசாலித்தனத்திற்கும் பேர் போனவர்கள். சவாலைச் சந்திப்பதில் சமர்த்தர்கள். தேர்ந்த ராஜீயவாதி. அறிஞர்கள். நினைவாற்றல் மிகக் கொண்டவர்கள்.

- அறிவுத் தாகமும், புதியனவற்றை தெரிந்து கொள்ளும் ஆர்வமும் அதிகம் கொண்டவர்களாதலால், விசயங்களை தெரிந்து கொள்ளும் போதும் கிரகித்துக் கொள்ளும் போதும் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். கற்றதனைத்தையும் படங்களாய் தங்களது மனதில் பதித்துக் கொள்ளும் திறம் பெற்றவர்கள். அவர்கள் கண்ட, கேட்ட, படித்தறிந்த உண்மைகளை மிக நுட்பமான விசயங்களையும் துல்லியமாக நினைவில் வைத்துக் கொள்ளும் திறன் படைத்தவர்கள். அவர்கள் முழுக்க முழுக்க இந்த நினைவாற்றலைச் சார்ந்தே இருக்க வேண்டும். ஏனென்றால் பலர் நிலையான புத்தியற்றவர்கள். மனம் எப்போதும் அலைபாய்ந்து கொண்டே இருக்கும்.
- பிரச்சினைகளுக்குள் புகுந்து எளிதில் வெளியே வரத் தெரிந்தவர்கள். சுய பிரச்சினைகளையும் பிறருக்கு ஏற்படும் பிரச்சினைகளையும் எத்தனை பெரிதாய் இருந்த போதும் சரியான வகையில் தீர்வு காண வல்லவர்கள். மிகவும் கடினமான பிரச்சினைகளை மிக எளிய வகையில் புது முறையில் தீர்க்கும் சக்தியைப் பெற்றவர்கள். அதனால் தொழில் சம்பந்தப்பட்டவர்கள் மத்தியிலும் நண்பர்கள் மத்தியிலும் பாராட்டும் மதிப்பும் பெற வல்லவர்கள்.
- அவர்களது சிறந்த கவர்ச்சிகரமான தோற்றத்தாலும், நடந்து கொள்ளும் விதத்தாலும் சாதுர்யத்தாலும் அனைவரையும் தங்கள் பக்கம் ஈர்க்க வல்லவர்கள். அவர்களிடம் மிகச் சிறப்பான வசீகரிக்கக் கூடிய தன்மைகள் இருப்பதால், மற்றவர்களை ஈர்க்க வல்லவர்கள். குரங்குவாசிகளை மக்கள் மொய்ப்பர்.
- தாங்கள் எண்ணியது நடக்கவில்லையென்றால் பொறுமையின்றித் தவிப்பார்கள். கோபப்படுவார்கள். ஆனால் வந்த கோபம், வேகமாகவே தணிந்துவிடும். எந்தக் காரியமும் அவர்களுக்கு அசாதாரணமாய் இருக்காது. அவர்கள் எதிலும் சிறப்பானவர்கள். தங்கள் மேல் பலமான முழு நம்பிக்கை கொண்டவர்கள். தங்கள் சாதனைகளை எண்ணி மகிழ்வதில் குரங்குவாசிகளை மிஞ்ச யாராலும் முடியாது.
- குரங்குவாசிகள் பண விசயங்களில் மந்திரவாதிகள் என்று கூட சொல்லலாம். அவர்கள் நினைத்தால் யாரை வேண்டுமானாலும் ஏமாற்றக் கூடியவர்கள். ஏமாற்றத்தை ஏமாற்றக் கூடியவர்கள். குரங்குவாசிகளை ஏமாற்ற நினைத்தால் மாட்டிக் கொள்வதைத் தவிர வேறு வழி இருக்காது. குரங்குவாசிகளுக்கு பணம் அத்தியவசியமான ஒன்று. அதைப் பெரும்பாலும் அவர்கள் தட்டுப்பாடில்லாமல் வைத்திருப்பார்கள். இல்லையென்றால் அதைப் பெறும் காரியங்களில் தீவிரமாய் ஈடுபட்டிருப்பார்கள். அவர்கள் தாங்கள் அதிர்ஷ்டசாலிகள் என்பதை அறிந்தவர்கள்.
- தேவைப்படும் போது எதையும் மாற்றும் திறன் தங்களிடம் இருப்பதை அறிந்தவர்கள். குரங்குவாசிகள் எந்தக் காரியத்திலும் தங்களை மூழ்கடித்துக் கொண்டு திண்டாட மாட்டார்கள். எதிர்ப்புகளும் கஷ்டங்களும் வந்த போது, அந்தக் காரியத்திலிருந்து வெளியே வரச் சமயம் பார்த்து, சாதுர்யமாய் வெளியே வந்து விடுவார்கள். நேரம் காலம் பார்த்து காரியங்களைச் செய்வதில் வல்லவர்கள். எந்த விதத்திலும் நல்ல சந்தர்ப்பத்தைக் கண்டு கொள்ளக் கூடியவர்கள். அவர்கள் மற்றொரு சந்தர்ப்பத்திற்காக காத்திருக்க விரும்ப மாட்டார்கள். திட்டமின்றி எதையும் செய்யத் துணிய மாட்டார்கள். திட்டமிடுதலில் வல்லவர்கள்.
- இயற்கையிலேயே மகிழ்வுடன் இருப்பார்கள். பயணம் செல்வதைப் பெரிதும் விரும்புவார்கள். அதையும் வசதியுடன் முதல் வகுப்பில் சிறந்த முறையில் செய்ய எண்ணுவார்கள். தங்கள் வாழ்க்கையில் சுவாரசியமான விசயங்களை எதிர் நோக்கி காத்திருப்பார்கள். குரங்குவாசிகள் தாங்கள் விரும்பியதைக் கஷ்டமில்லாமல் பெறத்தக்கவர்கள் என்பதால் தாங்கள் சாதித்தவற்றைப் பற்றிக் கண்டு கொள்ள

மாட்டார்கள். அவர்கள் வெகு விரைவில் ஆர்வத்தை இழக்கக் கூடியவர்கள். அதனால் செய்யத் தொடங்கிய காரியங்களை விரைவில் முடிக்க வேண்டும். இல்லையென்றால் பாதியிலேயே ஆர்வமற்று விட்டுவிடக் கூடியவர்கள்.

- ❖ எதுமே ஸ்திரமானதல்ல என்பதை நன்கு உணர்ந்தவர்கள். அவர்கள் தங்கள் பணியைத் தொடர்ந்து செம்மைப்படுத்திக் காட்டுபவர்கள். சில சமயம் தங்கள் செயலைக் கண்டு அசந்து போகக் கூடியவர்கள். குரங்குவாசிகளுக்கு செய்திகளைத் தெரிந்து கொள்வது விருப்பமான பொழுதுபோக்கு. அசலானவர்கள். சாதுர்யமானவர்கள். குரங்குவாசிகள் எப்போதும் முன் நிற்பவர்கள். அவர்கள் எண்ணம் நல்லதாய் இருந்த போதும், சில நேரங்களில் அவர்கள் செய்யும் செயல்களும் பேச்சுக்களும் மற்றவர் மனதைப் புண்படுத்துவதாய் அமையக் கூடும்.
- ❖ அறிவும், ஆற்றலும், ஆக்கப்பூர்வமும் பிறவியிலேயே உள்ள போதும், பல சமயங்களில் அந்தத் தன்மைகளை வெளியே காட்ட மாட்டார்கள். அது வெளியே தெரியும் போது, மற்றவர்கள் குழம்பி விடுவார்கள். அவர்கள் தான் என்ற அகந்தை மிகக் கொண்டவர்கள். அது அவர்களுக்கு பல சமயங்களில் நல்லதைச் செய்யக் கூடியதும் உண்டு.
- ❖ குரங்குவாசிகள் கிராம வாழ்க்கையை விட நகர வாழ்க்கையையே அதிகம் விரும்புவார்கள். நேரத்தை வீணடிக்க மாட்டார்கள். ஆனால் அவர்கள் மனிதர்களைக் கூர்ந்து கவனிப்பதில் நேரம் கழிப்பதை பொழுது போக்காகக் கொள்ள விரும்புவார்கள்.

**தொழில்**

- காரியம் செய்யத் துணிந்து விட்டால், கருமமே கண்ணான கடின உழைப்பாளியாய் இருப்பார்கள். பெரிய காரியங்களைச் சிறப்பாகச் செய்யும் திறன் படைத்தவர்கள். அவர்களிடம் இருக்கும் திறமையும் சுயமான அசலான காரியங்கள் செய்யும் தன்மையும் குரங்குவாசிகளை அதிர்ஷ்டசாலிகளாக்கும். அவர்கள் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் அதில் பிரகாசிப்பார்கள்.
- மிகவும் மகிழ்ச்சியுடன் ஒரு முறையேனும் முயன்று பார்த்து விட வேண்டும் என்று அனைத்துக் காரியத்தையும் செய்து பார்க்கத் துடிப்பார்கள். அவர்களுக்கு நூற்றுக்கணக்கான யோசனைகள் தோன்றிய வண்ணம் இருக்கும். அவற்றில் பலவற்றை செய்து காட்டும் திறனும் பெற்றவர்கள்.
- எந்த வேலையை எடுத்துச் செய்தாலும் அதைத் திறம்பட செய்ய முடியும். மாறும் சூழலுக்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்ளக் கூடியவர்கள். வேகமாய் வேலையைச் செய்வார்கள். ஆனால் செய்யும் வேலைக்கு இரண்டு மடங்கு கூலியை எதிர்பார்ப்பார்கள். அவர்கள் வங்கி மற்றும் கணக்கிடல் துறையில் சிறப்பார்கள். பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பவராய், விஞ்ஞானியாய், ஆய்வாளராய், கண்டுபிடிப்பாளராய் அவர்கள் பிரபலமாவது மிகவும் எளிது. மேலும், பொறியாளர், பங்குச் சந்தை வியாபாரி, திரை இயக்குநர், நகை வியாபாரி, விற்பனையாளர், வியாபாரி ஆகிய தொழில்களில் சிறக்க அதிக வாய்ப்புக்கள் உண்டு.

**உறவு**

யாரையும் எளிதில் நம்ப மாட்டார்கள். அவர்கள் மிகவும் எச்சரிக்கையுடன் தங்கள் கூட்டாளிகளைத் தேர்ந்தெடுத்து அவர்களுடன் மட்டுமே பழக விரும்புவார்கள். நண்பர்களிடம் விசுவாசமும் பக்தியும் உடைய குரங்குவாசிகள் எளிதில் காதல் வயப்படத்தக்கவர்கள். ஆனால்

மிக விரைவிலேயே தாங்கள் விரும்பியதின் மேலுள்ள பற்றை ஆர்வமின்மையால் விட்டுவிட்டு மற்றொன்றை நாட வல்லவர்கள். அதே போன்று தங்கள் வேலையை நாட்டத்துடன் ஆரம்பித்த போதும், சில காலத்திற்குப் பிறகு விரும்பாமல் விட்டுச் செல்லக் கூடியவர்கள்.

அவர்கள் அடுத்தவர்களின் கருத்துக்களை செவி மடுத்துக் கேட்க விரும்ப மாட்டார்கள். இருந்த போதும் அவர்களுடன் இருந்தால் அவர்களை கோபித்துக் கொள்ளவே முடியாது. குரங்குவாசிகள் காதலில் சற்றே எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. எவ்வளவுதான் வெளிப்படையான மனம் உடையவர்களான போதும், சமயத்தில் தங்களது நல்ல உறவாக எண்ண முடியாத போது, அவர்கள் மேல் ஆர்வமற்று, பிரிய சற்றும் தயங்க மாட்டார்கள்.

குரங்குவாசிகள் உறவு விசயங்களில் விரைவில் பணியக் கூடியவர்கள் கிடையாது. எதிலும் விரைவில் ஆர்வம் இழக்கக் கூடியவர்கள் என்ற காரணத்தால், உறவுகள் பலமானதாய் இருக்காது. எல்லாவற்றையும் மீறி யாரேனும் அதிகமாக நம்பி தன் துணையாய் ஏற்றுக் கொண்டால், அந்த உறவைத் தங்கள் வாழ்நாள் முழுக்க தொடர முழுமையாய் செயல்படுவார்கள்.

**உடல் நலம்**

உணவு விவகாரத்தில் அவசர கதியில்  உண்பதையே விரும்புவர். அவர்களிடத்தில் நேரம் எடுத்து முழு உணவை உண்ண அத்தனை ஆர்வம் இருக்காது. உண்பதில் நேரத்தை விரயமாக்குவது அவர்களுக்குப் பிடிக்காது.

நோயுற்ற போது ஓய்வு எடுப்பது நேர விரயம் என்று உணர்ந்த காரணத்தால், அவர்கள் நோய்வாய்ப்படுவது மிகவும் அபூர்வம். சுறுசுறுப்பான வாழ்க்கை முறைகளும், செயல்பாடுகளும் அவர்களை எப்போதும் ஆரோக்கியமாய் வைத்துக் கொள்ள உதவும். அவர்கள் நோய்வாய்ப்படுவது பெரும்பாலும் பதற்றம் காரணமாய் இருக்குமேயொழிய வேறு பெரிய காரணங்கள் இருக்காது.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

இந்தியக் குடியரசுத் தலைவர்கள் டாக்டர் இராஜேந்திர பிரசாத், கே. ஆர். நாராயணன், நகைச்சுவை நடிகர் கலைவாணர், இந்தியப் பிரதமர்கள் ராஜீவ் காந்தி, டாக்டர் மன்மோகன் சிங், இசை வல்லுநர் செம்மங்குடி சீனிவாச ஐயர், விடுதலைப் போராட்ட வீரர் வ.உ.சிதம்பரனார், பறவை நிபுணர் சலீம் அலி, கிரேக்க மன்னன் ஜூலியஸ் சீசர், நடிகை எலிசபெத் டைலர், பல்கலை அறிஞர் லியானார்டோ டாவின்சி.

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் - 3, 4, 5, 7, 16, 23, 34, 45, 54.
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் - ராகன், எலி
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் - புலி, பாம்பு, பன்றி

**மூலகக் குணங்கள்**

குரங்குவாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்புக் குரங்கு** (பிப்ரவரி 12,1956 - ஜனவரி 30,1957)

ஆளுமை, உயிர்ப்பு, ஆக்கப்பூர்வம், எதிர்ப்புகளால் ஊக்கம் கொண்டு செயல்படுதல் ஆகிய குணங்களைக் கொண்டவர்கள். ஆற்றலும், நம்பிக்கையும் கொண்டவர். குறிக்கோளை முடிவு செய்வதில் உள்ள சாமர்த்தியம் ஆகியவை இருக்கும். எந்தச் சூழலிலும் தானே உயர்ந்தவராய் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்த போதும் அவருடன் பழகுவதை மற்றவர்கள் விரும்புவர்.

**மரக் குரங்கு** (ஜனவரி 25,1944 பிப்ரவரி 13,1945)

மற்றவர்களிடம் பேசிப் பழகித் தொடர்பு கொள்வதில் கை தேர்ந்தவர்கள். அதனால் பலருடன் கலந்து பேசிக் கொள்ளும் தன்மை உடையவர்கள். கடின உழைப்பாளிகள். காரியங்கள் எப்படி நடக்கின்றன என்பதைப் புரிந்து கொள்வதில் வல்லவர்கள். எச்சரிக்கை உடையவர்கள். வாய்ப் பேச்சு அதிகம் இருக்கும். புரிந்து கொள்வதில் சாதுர்யம் இருக்கும். அமைதியற்றவர்கள்.

**பூமிக் குரங்கு** (பிப்ரவரி 02,1908 - ஜனவரி 21,1909 மற்றும் ஜனவரி 30, 1968 - பிப்ரவரி 16, 1969)

நற்குணமும், முறையோடு செயல்களைச் செய்யும் தன்மையும் கொண்டவர்கள். சமூக ஆர்வலர்களாய் இருப்பார்கள். வாழ்க்கையை சரியான வகையில் வாழ விருப்பம் கொண்டவர்கள். வேலைக்கும் உறவுகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பார்கள். நம்பத் தகுந்தவர்கள். எல்லா வேலையிலும் தங்கள் நூறு சதவீத முயற்சியைக் காட்டுவார்கள். பிறர் தங்களிடம் மதிப்புடனும் மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்புகள், சற்றே கடுகடுக்கும் தன்மை கொண்டவா;கள்.

**உலோகக் குரங்கு** (பிப்ரவரி 20,1920 - பிப்ரவரி 07,1921 மற்றும் பிப்ரவரி 16,1980 - பிப்ரவரி 04, 1981)

தன்னம்பிக்கை மிகக் கொண்ட குறிக்கோளுடையவர்கள். அதனால் எப்போதும் வெற்றி பெறும் தன்மை கொண்டவர்கள். அவர்கள் விரும்பத்தக்கவர்களாகவும், அன்பானவர்களாகவும் எண்ணப்பட்டாலும் அவர்கள் தனிமையை விரும்புவார்கள். அவர்கள் தங்கள் தொழில் முறை நண்பர்களிடமும், எஜமானர்களிடமும் விசுவாசம் உடையவர்கள். அன்பு, நேர்த்தி, உறுதி போன்ற குணங்களுக்கு சான்றாய் விளங்குவார்கள்.

**நீர்க் குரங்கு** (பிப்ரவரி 06,1932 - ஜனவரி 25,1933 மற்றும் பிப்ரவரி 04,1992 - ஜனவரி 22,1993)

புத்திசாலித்தனம், கூடி வேலை செய்வதில் விருப்பம், பட்டும்படாமலும் நடந்து கொள்வது அத்தகையவர்களின் குணங்கள். அதிக உணர்வுப்பூர்வமானவர்கள். மற்றவர்கள் கூறுவதைக் கேட்டு அடிக்கடி மனச் சங்கடம் கொள்ளும் தன்மை கொண்டவர்கள். தங்கள் உணர்வுகளை வெளிக்காட்ட மாட்டார்கள். அதனால் அதை மறைக்க நகைச்சுவை உணர்வுடன் இருப்பார்கள். அவர்களிடம் பெரும்பாலும் குறிக்கோளிலிருந்து மிக எளிதில் நழுவும் தன்மை இருப்பதால், அவர்கள் ஒரே வேலையில் கவனம் செலுத்தினால், நிச்சயம் வெற்றி கிட்டும்.

நீங்கள் குரங்கு வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனர்.

**குரங்கு வருடப் பலன்கள்**

எதுவானாலும் எல்லாமும் நிச்சயம் நடக்கக்கூடிய வருடம். பல அதிசயமான காரியங்கள் நடக்கும் சாத்தியக் கூறுகள் அதிகம் உடைய வருடம். சாத்தியமில்லாத விசயங்களும் நடந்து வெற்றி தரக்கூடிய வருடம். எட்டுத் திக்கிலும் வெற்றி வெற்றி என்ற பேச்சே இருக்கும் என்ற காரணத்தால், யார் என்ன செய்தார்கள் என்பதே தெரியாமல் போகும். அதிர்ஷ்ட வருடம். இந்த வருடத்தில் யாரும் இல்லை என்ற பதிலை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.



# 10. சேவல்



- ✓ ஆண்டுகள் - 1909 1921 1933 1945 1957 1969 1981 1993 2005 2017 2029 2041 2053
- ✓ நேரம் - மாலை 5:00 முதல் 7:00 வரை
- ✓ உரிய திசை மேற்கு
- ✓ உரிய காலங்கள் - இலையுதிர் காலம்;, செப்டம்பர்; மாதம்
- ✓ நிலையான மூலகம் - உலோகம்;
- ✓ யின்- யாங் யின்

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி, எருது, புலி, முயல், டிராகன், பாம்பு, குதிரை, ஆடு, குரங்கு முதலியன முதல் ஒன்பது இடங்களில் வந்தன. ஆடு, குரங்கு இரண்டின் உதவியுடன் சேவலும் கரையை வந்தடைந்தது. கடவுளர்கள் அவற்றை வாழ்த்தி வருடச் சக்கரத்தின் பத்தாவதுச் சின்னமாய் சேவலைத் தெரிவு செய்து அறிவித்தார்கள் என்பது கதை.

இந்தக் கதை சேவல் ஏன் பத்தாவதாய் வந்தது என்பதைக் குறித்துக் கூறப்படும் கதை.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் சேவல் வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ ஜனவரி 22,1909 - பிப்ரவரி 09,1910
- ➢ பிப்ரவரி 08,1921 ஜனவரி 27,1922
- ➢ ஜனவரி 26,1933 - பிப்ரவரி 13,1934
- ➢ பிப்ரவரி 13,1945 - பிப்ரவரி 01,1946
- ➢ ஜனவரி 31,1957 - பிப்ரவரி 17,1958
- ➢ பிப்ரவரி 17,1969 பிப்ரவரி 05,1970
- ➢ பிப்ரவரி 05,1981 - ஜனவரி 24,1982
- ➢ ஜனவரி 23,1993 - பிப்ரவரி 09,1994
- ➢ பிப்ரவரி 09,2005 - ஜனவரி 28, 2006

**குணங்கள்**

- ❖ சேவல்வாசிகள் பண்பாளர்கள். சமயோசித புத்தியுள்ளவர்கள். அனைத்தையும் கவனிக்கும் தன்மை மிக்கவர்கள். பகுத்தறியும் உணர்வுடையவர்கள். நேர் நோக்குடையவர்கள். காரியங்களைக் குற்றமற பூர்ணமாய் செய்பவர்கள். துறுதுறுப்புடனும், பயமற்றவர்களாகவும், பேச்சாளர்களாகவும், தம்பட்டம் அடித்துக் கொள்பவராகவும் இருப்பார்கள்.
- ❖ கண்ணியம், நம்பிக்கை போன்ற குணங்களைப் பிறவிக் குணமாய்க் கொண்ட சேவல் வருடத்தில் பிறந்தவர்கள், பழகுவதற்குகந்தவர்களாகவும், பெரும்பாலும் நல்ல உடை

அணிபவர்களாகவும், சிறந்தவர்களாகவும் இருப்பார்கள். நாணமும், பணிவும் கொண்ட சேவல்வாசிகள், தங்கள் தோற்றத்தின் மேல் அக்கறை கொண்டவர்கள். நாகரீகமான உடைகளை அணிய விரும்புவார்கள்.

- சேவல்வாசிகளைக் குறைத்து மதிப்பிடாதீர்கள். அவர்கள் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று எண்ணுபவர்கள். பயமறியாதவர்கள். உலகமே தவறு என்று சொன்னாலும், தங்கள் வழியை மாற்றிக் கொள்ள எண்ண மாட்டார்கள். எண்ணிய, நம்ப முடியாத, கற்பனை காணும் திட்டங்களைச் செயல்படுத்துவதில் கண்ணும் கருத்துமாய் இருப்பார்கள். சில சமயங்களில் அதை நடத்தியும் காட்டி விடுவார்கள். அவர்களது பல தரப்பட்ட விநோதமான வழிகளும் முயற்சிகளும் அவர்களைப் பெரிதாய் சாதிக்க வைக்கும்.
- கூர்ந்த அறிவும், ஆராய்ந்துணரும் பண்பும் அவர்களை ஆழ்ந்த சிந்தனையாளர்களாய் காட்டும். அவர்கள் தோற்பது மிக அரிது. சேவல்வாசிகள் நடைமுறையாளர்களாய் இருந்த போதும், பெரிய கனவுகள் காண்பவர்களாய் இருப்பர். அவர்கள் இயற்கையிலேயே தீரம் மிக்கவர்கள். தாங்கள் விரும்பியதை எப்படிப் பெற வேண்டும் என்பதை அறிந்தவர்கள். பெரிய இலட்சியத்தை அடையும் பாதையில் தடங்கல் ஏற்பட்டால், அதை எண்ணி வருத்தமும் கவலையும் கொள்வார்கள். ஆனாலும் அவர்கள் தோல்வியிலிருந்து வெகு விரைவில் மீண்டு விடுவார்கள். அவர்கள் நீண்ட காலம் அமைதியாய் இருப்பது மிக அரிது. எப்போதும் தங்களை ஏதாவது பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டு செயல்பட்ட வண்ணம் இருப்பார்கள்.
- இவர்கள் இரு வகைப்படுவர். ஒரு வகை விசனப்படுபவர்கள். மற்றொரு வகை நன்கு பழகத்தக்கவர்கள். சீன ஜோதிடத்தில் சேவல்வாசிகள் சற்றே விநோதப் பாங்கு கொண்டவர்களாய்க் கருதப்படுகிறார்கள். கனவுலகில் அதிகம் சஞ்சரிப்பார்கள். வண்ண வண்ண உடைகளை அணிந்து பிறரைக் கவரும் வகையில் விளங்குவர். தங்களைப் பற்றி கர்வம் இருக்கும். செய்யும் காரியங்களைச் சரியாய்த் திறம்பட, வரிசைப்படுத்திச் செய்வர். எல்லா காரியங்களிலும் நுணுக்கமான விசயங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கவனம் செலுத்தும் கண்கள் கொண்டிருப்பார்கள்.
- செம்மைவாதிகள். மனிதத் தவறுகளுக்கு இடம் கொடுக்க மாட்டார்கள். சில நேரங்களில் அவர்களே தவறு செய்கிறார்கள் என்று பிறர் எண்ணினாலும், அது ஏதாவது ஒரு வகையில் சரியாய் இருக்கும் வாய்ப்புகள் அதிகம். கஷ்டமான காரியங்களைச் சவாலாய் ஏற்றுக் கொள்வர். தங்களைப் பற்றி செம்மையாய் பேசவும் எழுதவும் கூடியவர்கள்.
- வாக்குவாதங்களைத் துவக்கி வைப்பதைப் பெரிதும் விரும்புவார்கள். எந்தப் பொருளைப் பற்றி விவாதிக்க வேண்டுமென்றாலும், அவர்கள் அதில் தேர்ந்த ஞானம் பெற்றவர்களாய் இருப்பார்கள். அவர்களிடம் சவால் விட்டால், நீளமான சண்டைக்குத் தயாராய் இருக்க வேண்டி இருக்கும். அவர்களது உடல் உரம் பிரமிக்கத் தக்கது. தங்களது கருத்துக்களை எத்தனை விலை கொடுத்தும் வெல்ல வைத்து விடுவார்கள். அவர்கள் உருவாக்கவும், இருக்கும் சூழலுக்கு ஏற்பத் தங்களை மாற்றிக் கொள்ளவும் விரும்பாதவர்கள். ஆனால் கவனித்து, விருதுகளை வழங்க வேண்டும் என்று எண்ணுவர். விவாதத்திற்கும் சண்டையிடுவதற்கும் ஆவலாய்க் காத்திருப்பர். முரட்டுத்தனமானவர்கள்.
- பண விசயங்களில் மிகவும் சிறந்த வகையில் செயல்படுவார்கள். வரவுக்குள் செலவுகளை வைத்துக் கொள்ளும் சுயகட்டுப்பாடு இவர்களிடத்தில் உண்டு. கஞ்சத்தனம் இருக்காது. அதிக தயாள குணமும், பிறருக்கு கொடுத்துதவும் குணமும்

அவர்களிடத்தில் இருக்கும். தாங்கள் சேகரித்த செல்வத்தைச் சரியான முறையில் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணிச் செயல்படுவார்கள். அதையே மற்றவர்களுக்கும் எடுத்துச் சொல்வார்கள்.

- சேவல்வாசிகளை தன்னம்பிக்கை, ஆடம்பரம், ஊக்கம் ஆகிய குணங்களுக்கு அடையாளமாய்ச் சொல்லலாம். விசுவாசமும், நம்பகமும் மிக்க மனிதர்கள். ஒளிவு மறைவற்ற கருத்துக்களைத் தெரிவிப்பதில் எப்போதும் பின்வாங்க மாட்டார்கள். கீழ்த்தரமான குணமல்ல அது. உண்மையானவர்கள் என்ற காரணத்தாலேயே அத்தன்மையைக் கொண்டவர்கள். பிறரிடமும் அதையே எதிர்பார்க்கவும் செய்வார்கள்.
- காரியத்தைச் செவ்வனே செய்து முடிப்பதில் அக்கறையும் திறமையும் கொண்டவர்கள். சாதிக்கக் கிளம்பி விட்டால், செய்து முடிக்க வழியில் சிக்குவனவற்றையெல்லாம் திருப்பிப் போடாமல் விட மாட்டார்கள். அவர்கள் சுறுசுறுப்பான ஆவல் மிகுந்த மனத்தை ஆழமாய் ஆராயும் தன்மை கொண்டவர்கள். அவர்கள் ஒரு போதும் அசைவற்று இருக்கவே மாட்டார்கள். சேவல்வாசிகள் சில விசயங்களுக்கு நேரம் எடுக்கவே செய்யும் என்பதைப் புரிந்து கொண்டு செயல்பட வேண்டும். இந்த உலகத்தின் இயக்கங்களைத் தங்கள் கால அட்டவணைக்குள் புகுத்த முடியாது என்பதை உணர வேண்டும். அவர்கள் மிகவும் அற்புதமான விசயங்களையும் சாதிக்க வல்லவர்கள். ஆனால் அவர்கள் மிகவும் நுணுக்கமான விசயங்களை எப்போதும் கோட்டைவிட்டு விடுவார்கள்.
- சமூகத்தின் மேல் அக்கறை உள்ளவர்கள். பழகுதற்கு இனிமையானவர்கள். கூட்டத்தில் கவனிக்கத்தக்க இடத்தில் இருக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள். அதனால் தன்னைப் பற்றியும், தான் சாதித்தவற்றைப் பற்றியும் பெருமை பேசும் தன்மை உடையவர்கள். அவர்களின் தொடர்ந்த இந்தப் போக்கு சில நேரங்களில் தொல்லையாகக் கூட அமைந்து விடும். சேவல்வாசிகள் தங்கள் மேல் எவ்வளவுக்கெவ்வளவு கர்வமாய் இருக்கிறார்களோ, அதே அளவு தங்கள் வீட்டின் மேலும் குடும்பத்தார் மேலும் கர்வம் கொண்டவர்கள்.
- செய்யும் பணிகளைச் செவ்வனேச் செய்வார்கள். அதனால் அவர்களின் வீடுகள் மிகவும் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் காணப்படும். தாராள மனப்பான்மையற்றவர்கள். இதை வெளிக்காட்டாமல் இருக்க தங்களைத் தன்னம்பிக்கையும் போராடும் தன்மையும் உள்ளவர்களாய்க் காட்டிக் கொள்வர். அவர்கள் எல்லோர் கவனத்தையும் தங்கள் பக்கம் ஈர்க்க விரும்புவார்கள். மற்றவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பு கொடுப்பது மிகக் குறைவு. அதனால் அவர்கள் புகழாரம் சூட்டுவதைக் கேட்க பெரிதும் விரும்புவர்.

**தொழில்**

- குறிக்கோளுடையவர்கள். வானளவு உயர எண்ணுவார்கள். தேர்ந்தெடுத்த துறையின் மேல் தீவிரமான பற்று கொண்டு, வேலையைச் செய்து, பல புதிய யுத்திகளைப் புகுத்தி வெல்வர். இளமையிலேயே வாழ்க்கையை வாழ ஆரம்பித்து, தங்கள் இள வயதிலேயே வெற்றிப் படியில் மேன்மேலும் செல்வர். சுய வியாபாரத்தில் சிறப்பர்.
- முக்கியமான காரியங்களை அவர்களைப் போல் சரிவரச் செய்ய யாராலும் முடியாது. ஆணையிடும் போது சரியான ஆணையைக் கொடுக்க வேண்டும். தேவைக்கேற்ப வேலையை மாற்றிச் செய்ய உடன்பட மாட்டார்கள். செய்யவும் விரும்பமாட்டார்கள்.
- அவர்கள் எந்தத் துறையில் இருந்தாலும் வெற்றி பெறும் திறம் படைத்தவர்கள். விளம்பரம், கேளிக்கை, உணவகம் சம்பந்தப்பட்ட வேலைகளில் சிறக்க வாய்ப்புகள்

உண்டு. பண விசயங்களில் சிறந்தவர்கள். அவர்கள் மனிதக் குறைகளை என்றும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அனுமதிக்கவும் மாட்டார்கள். அவர்கள் மனம் அறிவியல் ரீதியில் வேலை செய்து நடைமுறையுடன் ஒத்தக் காரியங்களைச் செய்யத் துடிக்கும்.

- சேவல்வாசிகள் ஊக்கம் மிகக் கொண்டவர்கள். கடின உழைப்பாளிகள். இக்குணங்கள் அவர்களை வெற்றிகரமான நிலைக்கு உயர்த்தக் கூடியவை. அவர்கள் நல்ல நடிகர்களாகவும், நடனக் கலைஞர்களாகவும், இசைக் கலைஞர்களாகவும் இருப்பார்கள். பல் மருத்துவர், ஆயுட்காப்பாளர், உதவியாளர், நூலகர் போன்ற தொழில்களிலும் ஈடுபடலாம். இராணுவத்தில் சேர்ந்தால் மிகவும் சிறப்பான பணியைச் செய்யத் தக்கவர்கள்.

**உறவு**

நண்பர்களும் உறவினர்களும் ஏதாவது சிக்கலில் மாட்டிக் கொண்டால், அவர்கள் உதவி கோரும் முன்பே சிக்கலைத் தீர்க்க முயன்று, வெற்றியும் பெறுவார்கள். அந்தக் குணம் சிக்கலில் மாட்டியவர்களுக்கு பிடிக்காத போதும், தீர்வு காணும் சமயத்தில் மகிழ்வர். நேரம் பற்றி அதிகம் எச்சரிக்கை குணம் உடையவர்கள். அவர்களுடன் பழகும் போது, நேரம் காலம் பார்த்து, திட்டமிட்டுச் செயல்பட வேண்டும். பிறருக்கு உதவும் தன்மையில் நம்பகமானவார்கள்.

சேவல்வாசிகளின் ஒளிவுமறைவற்ற உண்மையான குணம், பல இடங்களில் சரிப்படாது. உணர்வுப்பூர்வமான மனிதர்கள் அவர்களால் பெரிதும் பாதிக்கப்படுவர். அதனால் அவர்கள் மிகவும் திடமான மனம் கொண்டவர்களுடன் பழகுவது நல்லது. அவர்களின் திடமான மனத்திற்குள் மிகவும் அன்பான இதயம் இருப்பதை அவர்களால் மட்டுமே புரிந்து கொள்ள முடியும்.

சில சமயம் தங்கள் எண்ணமே சரி என்று அவர்கள் நடக்கும் போது, பிறருக்கு பிடிக்காமல் போகலாம். ஆனால் பல சமயங்களில் அவர்கள் எண்ணம் சரியானதாகவே இருக்கும். சேவல்வாசிகள் தங்கள் நண்பர்களையும் தங்கள் அன்பிற்குப் பாத்திரமானவர்களையும் மகிழ்வுடன் வைத்துக் கொள்ள பலவற்றைச் செய்யத் துணிவது குறிப்பிடத்தக்கது. அதில் வெற்றி பெறாவிட்டால், மிகவும் வருத்தமுறுவர். அவர்களது உண்மையான அன்பும், ஆதரவும், நேரடிக் கண்காணிப்பும் அவர்களிடம் நண்பர்களும் உறவினர்களும் அவர்கள் பால் அன்பும் மதிப்பும் மரியாதையும் கொள்ள வைக்கும்.

சேவல்வாசிகள் நேருக்கு நேர் பேசும் தன்மை அவர்களைச் சிறந்த ராஜீயவாதியாய்க் கருத விடாது. தங்கள் மனத்தில் பட்டதை பட்டென்று எடுத்துக் கூறும் போது, பிறரது உணர்வுகளை யோசிக்காமல் செய்வது பல சமயங்களில் பிரச்சினைகளில் மாட்டி விடும். பிறரை ஏன் வருத்தப்பட வைக்க வேண்டும்? சேவல்வாசிகள் எப்போதும் சரியாகவே செய்வார்கள் என்று மற்றவர்கள் எண்ண வேண்டும். அப்படி எண்ணினால் மனத்தாங்கல்கள் விலகி விடும்.

மற்றவர்களை மகிழ்விக்க விரும்புவார்கள். அவர்கள் ஏற்பாடு செய்யும் விழாக்கள் கேளிக்கைகள் நிச்சயமாய்ப் பெரியதாகவும், நீண்ட நாட்கள் நினைவில் நிற்பவையாகவும் இருக்கும்.

**உடல் நலம்**

சேவல்வாசிகள் பெரும்பாலும் சுறுசுறுப்பானவர்கள். அவர்கள் தங்களை எப்போதும் இயக்கிய வண்ணம் இருப்பதால், உடல் நலம் நன்றாகவே இருக்கும். ஏதாவது நோய்வாய்ப்பட்டாலும், வேகமாய் அதிலிருந்து மீண்டு விடுவார்கள். எப்போதேனும் அதிகமாய் நோய்வாய்ப்பட்டால், அழுத்தத்துடனும் சோகத்துடனும் காணப்படுவார்கள்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

தொழிலதிபர்கள் முகேஷ் அம்பானி, அசீம் பிரேம்ஜி, சுனில் மிட்டல், தீரஜ்லால் ஹிராநந்த் அம்பானி, தமிழக முதல்வர்கள் பேரறிஞா; அண்ணா, பக்தவச்சலம், கிரிக்கெட் வீரர்கள் மகேந்திர சிங் தோனி, சனத் ஜெயசூர்யா, யுவராஜ் சிங், சதுரங்க விளையாட்டு வீரர் விஸ்வநாதன் ஆனந்த், மாண்டரின் சீனிவாஸ், அமைச்சர் ப. சிதம்பரம், ஆங்கில எழுத்தாளர் ரட்யார்ட் கிப்லிங், நடிகர் பீட்டர் உஸ்தினாவ், ஜெர்மனியில் பிறந்து ரஷ்யப் பேரரசியான காத்தரின் தி கிரேட்.

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் - 1,5,6,12.15,16,24,51
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் - எருது, பாம்பு, டிராகன்
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் - முயல், நாய்

**மூலகக் குணங்கள்**

சேவல்வாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்புச் சேவல்** (ஜனவரி 31,1957 - பிப்ரவரி 17,1958)

கடின உழைப்பாளிகள். சுதந்திரமானவர்கள். சரியாய்ச் செய்பவர்கள். நிதானமற்றவர்கள். சமூகத்தின் முன் தங்களது பிம்பத்தை சரி செய்து கொள்வதிலேயே பெரும்பாலான நேரத்தைக் கழிப்பர். அவர்கள் சமூகத் தொண்டர்கள். தலைச்சிறந்த தலைவர்கள். அதிக ஒளிவுமறைவு அற்றவர்கள். அவர்களது இந்த குணம் பலரையும் வருத்தக் கூடியது.

**மரச் சேவல்** (பிப்ரவரி 13,1945 - பிப்ரவரி 01,1946 மற்றும் பிப்ரவரி 09,2005 - ஜனவரி 28, 2006)

உண்மையானவர்கள். சிந்தனைவாதிகள். அடக்கமானவர்கள். சுயநலமற்றவர்கள். குழுவைச் சார்ந்து இருக்க விருப்பம் கொண்டவர்கள் என்பதால், நண்பர்களும் தெரிந்தவர்களும் அதிகம் இருப்பார்கள். எப்போதுமே மனிதர்களிடத்தில் கெட்ட குணங்களைத் தவிர்த்து நல்ல குணங்களை மட்டுமே கண்டு பழகுவர். வாழ்க்கையிலும் நல்லனவற்றையே நோக்குவர். அவர்களிடம் குறை என்று சொல்ல வேண்டுமென்றால், ஆரம்பித்தக் காரியத்தை முடிக்க வேண்டும் என்ற வேகம் இல்லாதது மட்டுமே. இது பெரும்பாலும் தங்கள் சக்திக்கு எட்டாத பணிகளை எடுத்துக் கொள்வதன் காரணமாய் இருக்கும்.

**பூமிச் சேவல்** (ஜனவரி 22,1909 - பிப்ரவரி 09,1910 மற்றும் பிப்ரவரி 17,1969 - பிப்ரவரி 05,1970)

அறிஞர்கள். பண்பானவர்கள். ஒழுங்காய்க் காரியங்களைச் செய்பவர்கள். விசயங்களை ஆராய்ந்து செயல்படுபவர்கள். பல காரியங்களை ஒரே நேரத்தில் செய்யக் கூடியவர்கள். வெற்றியால் ஊக்கம் கொண்டு, செயல்படுவர். உயரிய கருத்துக்களைக் கொண்டு, மற்றவர்களும் அதன் வழி நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். அந்த எதிர்பார்ப்பு சில சமயங்களில் மற்றவர்களைத் துன்புறுத்த வல்லதாய் அமைந்துவிடும் என்பதால் மிதமாய் நடந்து கொள்வது நலம் பயக்கும்.

**உலோகச் சேவல்** (பிப்ரவரி 08,1921 - ஜனவரி 27,1922 மற்றும் பிப்ரவரி 05,1981 - ஜனவரி 24,1982)

கடின உழைப்பாளி. நடைமுறைவாதி. அகம்பாவம், தற்பெருமை மிகக் கொண்டவர்கள். அந்தத் தற்பெருமையைப் பெரிதாய் வெளிப்படுத்தும் நண்பர்களை எப்போதும் தேடிய வண்ணம் இருப்பார்கள். அவர்களது நண்பர்களுடனும் உறவினர்களுடனும் உள்ள உறவுகளை தூரப்படுத்தும். எல்லாவற்றையும் ஆராயும் தன்மை மிக்கவர்கள். கற்பனை அதிகம். சந்தர்ப்பங்களை பயன்படுத்திக் கொள்பவர்கள்.

**நீர் சேவல்** (ஜனவரி 26,1933 - பிப்ரவரி 13,1934 மற்றும் ஜனவரி 23,1993 - பிப்ரவரி 09,1994)

திறமை மிக்கவர்கள். கல்வியாளர்கள். நடைமுறைவாசிகள். புத்தி சாதுர்யத்தால் ஊக்கம் கொள்பவர்கள். உற்சாகமானவர்கள். சேவல்வாசிகளைச் சாந்தப்படுத்தும் தன்மை நீருக்கு உண்டு. அவர்கள் கூட்டத்தில் முக்கியத்தஸ்தர்களாய் இருக்க வேண்டும் என்ற உணர்வு அதிகம் இல்லாதவர்கள். பேச்சுத் திறமை செம்மைப்படுத்தப் பட்டதாய் இருக்கும். எப்போதும் சுறுசுறுப்பு, விசயங்களை கூர்ந்து கவனிக்கும் தன்மைகள் குறிப்பிட்ட காரியத்தைக் கவனமாய்ச் செய்வதில் நல்ல பலன் கிடைக்கும்.

நீங்கள் சேவல் வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனர்.

**சேவல் வருடப் பலன்கள்**

சக்தி மிகுந்த வருடம். வாதம் விதண்டாவாதம் நிறையவே இருக்கும். எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய வருடமும் கூட. யாரும் யாருடையக் கருத்துக்களையும் கேட்க விரும்ப மாட்டார்கள். அதனால் பெருத்த வேற்றுமைகள் ஏற்பட்டு சண்டைச் சச்சரவுகள் அதிகமாகும். இருந்தாலும் யாரும் பெருத்த கஷ்டங்களை அனுபவிக்க மாட்டார்கள்.



## 11. நாய்



- ✓ ஆண்டுகள் - 1910 1922 1934 1946 1958 1970 1982 1994 2006 2018 2030 2042 2054
- ✓ நேரம் - இரவு 7:00 முதல் 9:00 வரை
- ✓ உரிய திசை - மேற்கு, வடமேற்கு
- ✓ உரிய காலங்கள் - இலையுதிh; காலம், அக்டோபா;; மாதம்
- ✓ நிலையான மூலகம் - உலோகம்
- ✓ யின்- யாங் யாங்

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி, எருது, புலி, முயல், டிராகன், பாம்பு, குதிரை, ஆடு, குரங்கு, சேவல் முதலியன முதல் பத்து இடங்களில் வந்தன. நாய் நீச்சல் அடிப்பதில் சிறந்தது என்றாலும், பதினொன்றாவதாய் வந்தது. ஏன் தாமதம் என்று கடவுளர்கள் கேட்டதற்கு, நீண்ட நேரம் நீச்சல் அடித்த பின்னர் சற்றே ஓய்வு எடுத்துக் கொண்டு, குளிர்ந்த நீரில் சுகமாய் ஒரு குளியல் போட்டு விட்டு வர நேரம் ஆகிவிட்டது என்றதாம் நாய். கடவுளர்கள் வாழ்த்தி வருடச் சக்கரத்தின் பதினொன்றாவது சின்னமாய் நாயைத் தெரிவு செய்து அறிவித்தார்கள்.

இந்தக் கதை நாய் ஏன் பதினொன்றாவதாய் வந்தது என்பதைக் குறித்துக் கூறப்படும் கதை.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் நாய் வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ பிப்ரவரி 10,1910 - ஜனவரி 29,1911
- ➢ ஜனவரி 28,1922 - பிப்ரவரி 15,1923
- ➢ பிப்ரவரி 14,1934 - பிப்ரவரி 03,1935
- ➢ பிப்ரவரி 02,1946 - ஜனவரி 21,1947
- ➢ பிப்ரவரி 18,1958 - பிப்ரவரி 07,1959
- ➢ பிப்ரவரி 06,1970 - ஜனவரி 26,1971
- ➢ ஜனவரி 25,1982 - பிப்ரவரி 12,1983
- ➢ பிப்ரவரி 10,1994 - ஜனவரி 30,1995
- ➢ ஜனவரி 29,2006 - பிப்ரவரி 17,2007

**குணங்கள்**

- ❖ தோழமை மிக்கவர்கள். உண்மையானவர்கள். நேர்மையானவர்கள். நேரிடையான போக்குடையவர்கள். விசுவாசம், நம்பகத் தன்மை, உண்மை போன்ற குணங்களை

நாய்வாசிகளின் குணங்களாய்ச் சொல்லலாம். அவர்கள் மனிதாபிமானம் மிக்கவர்கள். உலக மக்களுடன் கஷ்டப்படத் தயாராய் இருப்பார்கள்.

- அவர்கள் விளையாட்டுத் தன்மை கொண்டவர்கள். நகைச்சுவை உணர்வு மிக்கவர்கள். அவர்கள் விரைவில் உணர்ச்சி வசப்படக் கூடியவர்கள். புத்திசாலிகள். சமன்பாடுடையவர்கள். கபடமற்றவர்கள். தந்திரசாலிகளாய் இருக்க மாட்டார்கள். பொய் சொல்வதைத் தவறாக எண்ணுபவர்கள். உணர்வுகளில் அல்லாட்டம் கொண்டவர்கள்.
- நாய்வாசிகள் தங்களைப் பெரியவர்களாய்க் காட்டிக் கொள்ள மாட்டார்கள். பலர் கூடும் இடங்களில் பல சமயங்களில் நாணத்துடன் நடந்து கொள்வர். அவர்கள் பிறர் சொல்வதை நல்ல கவனத்துடன் கேட்பவராய் இருப்பார்கள். பிறவியிலேயே வீரர்களாய் இருக்கும் நாய்வாசிகள் அருகில் இருப்பவர்களிடம் குரைப்பதோடு வார்த்தையால் கடிக்கவும் செய்வார்கள். தங்களது கடமைகளை அவர்களளவிற்கு செய்யாதவர்களை விமர்சிப்பார்கள். எதிர்மறையாக சில நாய்வாசிகள் மிகவும் அமைதியாகவும் இருக்கக்கூடியவர்கள்.
- இளைய நாய்வாசிகள் தவறுகளையும் நீதியற்றச் செயல்களைக் கண்டு கொதித்தாலும், முதிர்ந்த நாய்வாசிகள் வயது ஆக ஆக பெரும்பாலும் அவற்றைப் பெரிதுபடுத்தாமல் முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்து விடுவார்கள். இருந்தாலும் சமூகத்தில் நடக்கும் தவறான விசயங்களைச் சாடி, எதிர்த்து, பாதுகாப்பு அளிக்கும் அடிப்படை குணம் மட்டும் அவர்களிடம் எப்போதும் இருக்கும். அடிமட்டத்தில் இருப்பவர்களுக்கும், நீதி கேட்டு போராடுபவர்களுக்கும் துணையாகப் பேச நாய்வாசிகள் என்றும் தயங்க மாட்டார்கள். முன்னின்று பணியாற்றுவார்கள்.
- அவர்கள் தங்களையும், தங்கள் அன்பிற்குப் பாத்திரமானவர்களையும் மிகவும் பாதுகாப்புடன் இருக்க வேண்டும் என்று விரும்புவார்கள். நீதிக்கும் நேர்மைக்கும் தீவிர முக்கியத்துவம் அளிக்கும் குணம் கொண்டதால், அவர்கள் துயரத்தில் உள்ளவர்களை ஒவ்வொரு முறையும் காப்பாற்றத் தயங்க மாட்டார்கள். அவர்கள் தத்துபித்தென்று சில சமயங்களில் உளறினாலும், தவறை நேர் செய்யும் வரை ஓய மாட்டார்கள்.
- அவர்கள் மேல் மற்றவர்கள் காட்டும் அக்கறை, சமுதாயத்தில் நடத்தப்படும் விழாக்கள் அவர்களைக் கவராது. கூர்மையான கண்களால், மனிதர்களைச் சரியாய் எடை போட்டு அவர்களது உத்தேசங்களை அறிந்து கொள்ளும் திறமை படைத்தவர்கள்.
- மனித இயற்கையைப் பற்றி தெள்ளத் தெளிவாய் தெரிந்து வைத்திருப்பார்கள். அவர்கள் குணங்களை எடை போடுவதில் சமர்த்தர்கள். நாய்வாசிகள் ஒருவரைப் பகுத்து அறிந்து கொண்டு விட்டால், பிறகு அவர்களது மனதை மாற்றவே முடியாது. அவர்கள் எல்லாவற்றையும் கருப்பு வெள்ளையில் பார்த்து உணர்வார்கள். நீங்கள் ஒரு நண்பர், இல்லாவிட்டால் எதிரி. வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்ற மனப்பான்மையினர்.
- சரியான நேரத்தில், நாய்வாசிகள் நீண்ட நேரம் கடின உழைப்பைச் செய்யத் தயங்க மாட்டார்கள். அவர்களுக்கு ஓய்வெடுக்கவும் உற்றார் உறவினரோடு அன்பு கொண்டவர்களோடு மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவும் நன்றாகவேத் தெரியும். அவர்களை வருத்தினால் பதிலுக்கு வஞ்சம் தீர்க்க, திறமையுடன் அவமானப்படுத்தாமல் விட மாட்டார்கள். சில சமயங்களில் செய்ததை, மறந்து, அதே வேகத்தில் மன்னிக்கவும் செய்வார்கள்.
- பெரும்பாலான நாய்வாசிகளுக்கு நல்ல வசதியான வாழ்க்கை தானாகவே அமைந்துவிடும். எல்லா வசதிகளும் வீடும் அமையும். அவர்கள் எப்போதும் தங்கள் பொருட்களைத் தற்காத்துக் கொள்வார்கள். அதற்குப் பெருமதிப்பும் கொடுப்பர். வீடும்

குடும்பமும் முதலிடம் பெறும். நாய்வாசிகள் அதில் சிறந்தவற்றைப் பெறும் வரை ஓய மாட்டார்கள்.

- அவர்களுக்கு பணம், சொத்து, வெற்றி ஆகியவை இரண்டாம் பட்சமே. விசுவாசம், நேர்மை, நம்பிக்கை கொண்ட இவர்கள் நல்ல திடமான கொள்கையுடன் இருப்பர். ஒத்துப் போகும் தன்மை, இரக்கம், விசுவாசம் ஆகிய குணங்களின் உருவமாய் இருப்பார்கள். நாய்வாசிகள் அடிக்கடி அன்பான வார்த்தைகளைக் கூறி, தேவையான உதவிகரமான அறிவுரைகளைக் கூறி, பேசுவதைக் செவிமடுத்து, அவசியம் ஏற்படும் போது, தோள் கொடுத்துதவுவார்கள். சில சமயம் அடுத்தவர் வாழ்க்கையில் அதிகமாகப் பங்கேற்று, மூக்கை நுழைத்துக் கொள்வதும் உண்டு. அடுத்தவர்கள் மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்று உறுதியுடன் செயல்படுவார்கள்.
- வீட்டை நன்கு நிர்வகிப்பார்கள். ஒழுக்கான வீடு அவர்களுக்கு முக்கியமானது. சுத்தமான வீடு, வேலையில் உதவி ஆகியவை அவர்களைச் சுறுசுறுப்பாகவும், பொறுப்பாகவும் செயல்படச் செய்யும். பணத்தைச் சாமர்த்தியமாகச் செலவு செய்வார்கள். வருங்காலத் தேவைக்குச் சேமிக்கவும் செய்வார்கள்.
- நாய்வாசிகள் சில சமயம் கோபக்காரர்களாகவும், குறுகிய மனம் கொண்டவர்களாகவும் பிடிவாதக்காரர்களாகவும் இருப்பார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் பிரச்சினைகளைச் சரி செய்ய தனித்துச் செயல்பட முயல்வர்.

### தொழில்

- விலங்குகளில் மிகவும் பிரபலமான நாய் வருடத்தில் பிறந்தவர்களை எல்லோருக்கும் பிடிக்கும். கடமையிலிருந்து விலக எண்ண மாட்டார்கள். வேலைகளில் தங்கள் பங்கைச் சரிவரச் செய்வர். காரணங்களைச் செவிமடுப்பர். உதவிக்கு அழைப்பவர்களைத் தட்டிக் கழிக்க மாட்டார்கள். தங்களது பிரச்சினைகளைத் தள்ளி விட்டு, பிறருக்கு உதவ என்றும் தயங்க மாட்டார்கள். பொறாமை குணம் அற்றவர்கள். யாரையும் நேரடியாக எதிர் கொள்வார்கள். அவர்கள் விவகாரத்தில் தலையிடுதலை விரும்ப மாட்டார்கள். உடனடி பதில்கள் அவர்களிடத்தில் எப்போதும் இருக்கும்.
- நாய்வாசிகள் செல்வந்தராக வேண்டும் என்ற ஆசை அற்றவர்கள். வாழ்க்கை வசதிகளைப் பெற வேண்டும் என்றும் எண்ண மாட்டார்கள். அவர்களது திறமையும் உடன் பிறந்த குணங்களும் அவர்களைச் சமுதாயப் பணியில் சிறப்பானவர்களாக்கும். அவர்கள் ஆசிரியர், மருத்துவர், செவிலியராய் இருக்கும் பட்சத்தில் சிறப்பாய்ச் செயல்படுவார்கள். வியாபாரத்தில் சிறப்பவர்கள்.
- நாய்வாசிகள் திடமான மனிதர்கள். எப்போதும் புதிய விசயங்களில் தேர்ந்த ஞானம் பெற விரும்புவர். ஆரம்பித்த வேலையை முடித்துக் காட்டுவர். அதனால் ஆரம்பிக்கும் முன்னரே, அந்த வேலையைப் பற்றி நன்கு அறிந்த பின்னரே ஆரம்பிப்பர். அவர்களது திடமான மனம், அவர்களை அறிவுரையாளர்களாகவும், மனோதத்துவ மருத்துவர்களாகவும் சிறப்பாய்ச் செயல்பட உதவும். அவர்கள் எந்தக் கடினமான சூழலையும் எதிர் கொள்ள வல்லவர்கள். நம்கபமானவர்கள். இரகசியங்களைக் காப்பாற்றத் தெரிந்தவர்கள். திறமை வாய்ந்த அரசியல் குணங்கள் கொண்டதால், தங்கள் விருப்பு வெறுப்புகளை மறைக்கத் தெரிந்தவர்கள். அரசியல்வாதிகளாக இருக்கத் தகுந்தவர்கள்.
- உடன் பணி புரிபவர்கள் நாய்வாசிகளை உதவிக்கு எப்போதும் அழைக்கலாம். புதிதாய்க் கற்பதற்கும், வேலைப் பளுவைக் குறைப்பதற்கும் அவர்களை முழுவதுமாய்

நம்பலாம். மதிப்பு மிக்க வேலைகாரர்கள். காவலாளி, விஞ்ஞானி, அறிவுரையாளர், வீட்டை அலங்கரிப்பவர், விரிவுரையாளர், மடாதிபதி, செவிலியர், உதவியாளர், நீதிபதி, புரோகிதர் ஆகிய தொழில்களில் ஈடுபடத் தகுந்தவர்கள்.

**உறவு**

நல்ல நண்பர்களாய் ஆக்கிக் கொள்ளத் தக்கவர்கள். அவர்கள் மற்றவர்களிடம் அடிக்கடி ஊக்கமும், நம்பிக்கையும் தரும் வார்த்தைகளைக் கூறி எப்போதும் தேவைப்படுபவர்களுக்கு உதவி செய்யக் காத்திருப்பார்கள். அவர்கள் புகழ் பெற்ற மனிதர்களுக்கு நல்ல நண்பர்களாய் தோழடையுடையவர்களாய் இருப்பார்கள். தன் அன்பிற்குப் பாத்திரமானவர்களிடம் கோபப்படும் படி நடந்து கொள்ள வேண்டிய சந்தர்ப்பத்திலும் அன்பின் காரணமாய் நியாயம் கற்பித்து இனிதாகவே நடப்பார்கள். நண்பர்களைப் பெற பாடுபடுவார்கள். நட்பிற்கு மதிப்புக் கொடுப்பர்.

நாய்வாசிகள் நண்பர்கள் விசயத்தில் மிகவும் மிதவாதிகள். உங்களை நண்பராய் ஏற்றுக் கொள்ளும் முன்பு பல வித சந்திப்புகளும் பேச்சு வார்த்தைகளும் செய்த பின்னரே மெல்ல நட்பை வளர்த்துக் கொள்வர். உங்களை அறிந்து கொண்டு நண்பராய் ஏற்றுக் கொண்டுவிட்டால், நீங்கள் அவர்களது உள்ளத்தில் நீங்கா இடத்தைப் பெற்று விடுவீர்கள். உங்களுக்குத் தேவைப்படும் போது நிச்சயம் வந்து நிற்பார்கள். உதவி செய்வார்கள்.

தங்களது வாழ்க்கையை பிரத்தியேகமானதாய் ஆக்கிக் கொள்ள விரும்புவர். அவர்களது குடும்ப விசயங்களில் மூக்கை நுழைத்தால், இரகசியமாய் செயல் பட ஆரம்பித்து விடுவார்கள். அவர்களது நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாய் ஆகிவிட்டால், மனம் திறந்து காட்டத் தயங்க மாட்டார்கள்.

நாய்வாசிகள் நம்பகமானவர்களாய் இருந்த போதும், அவர்கள் மற்றவர்களை நம்புவது மிகக் கடினம். ஒருவரைத் தன் நண்பராய் ஏற்க, பல காலம் பிடிக்கும். நம்பிக்கை கொள்ளாத வரை அவர்கள் பழகும் போது சற்றே கடினமானவர்களாய்த் தோன்றும்.

காதல் என்று வந்தாலும், கடினமான நேரம் தான். கவலை, பத்திரமற்ற தன்மை, வியாகூலம் அவர்களைக் கண்டு பயந்தோடச் செய்யும். நாய்வாசிகள் உணர்வுப்பூர்வமானவர்கள். குறை காண்பவர்கள்.

**உடல் நலம்**

நாய்வாசிகள் ஓய்வு எடுக்கக் கற்றுக் கொள்ளவும் விவேகத்துடன் நடக்கவும் கற்பது நல்லது.

நாய்வாசிகள் ஆரோக்கியமானவர்கள். உடல் நிலை சரியில்லாததை அவர்கள் சோகத்துடன், வருத்தமுடன் இருப்பதைக் கொண்டே கணித்து விடலாம். நோயை எதிர்த்துப் போராடி மீண்டு வர நாய்வாசிகள் முயல்வர்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

சமூக சேவகி அன்னை தெரசா, இந்தியக் குடியரசுத் தலைவர்கள் பிரதிபா பாடில், ஆர். வெங்கட்ராமன், நோபல் பரிசு பெற்ற இந்திய பௌதிகவியலாளர் சுப்ரமணியம் சந்திரசேகர்,

சோனியா காந்தி, இங்கிலாந்துப் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில், அமெரிக்க அதிபர் பில் கிளின்டன், பாடகி மெடோனா, விஞ்ஞானி பெஞ்சமின் பிராங்கிளின், அமெரிக்கத் தொழிலதிபர் டோனால்ட் ஜான் டிரம்ப், இந்தியத் தொழிலதிபர் நாராயணமூர்த்தி, கிரிக்கெட் வீரர்கள் கபில் தேவ், மார்வன் சாம்சன் அத்தபட்டு

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் – 1, 4, 5, 9, 10, 14, 19, 28, 30, 41, 45, 54
- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் – குதிரை, புலி, முயல்.
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் - டிராகன், ஆடு, எருது, சேவல்

**மூலகக் குணங்கள்**

நாய்வாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்பு நாய்** (பிப்ரவரி 02,1946 - ஜனவரி 21,1947 மற்றும் ஜனவரி 29, 2006 - பிப்ரவரி 17,2007)

ஆக்ரோசமானவர்கள். மயக்கக் கூடியவர்கள். மன வலிமையால் ஊக்கம் பெறுபவர்கள். உண்மையானத் தலைவர்கள். மற்றவர்கள் அவர்களுடன் இருப்பதில் மகிழ்ச்சியை அனுபவிப்பார்கள். வசீகரமான, தன்னம்பிக்கையின் உருவமாய் இருப்பவர்கள். ஓடிக் கொண்டே இருக்க விரும்புவர்.

**மர நாய்** (பிப்ரவரி 14,1934 - பிப்ரவரி 03,1935 மற்றும் பிப்ரவரி 10,1994 - ஜனவரி 30,1995)

தாராள மனம் கொண்டவர்கள். திடமும், பாசமும் மிக்கவர்கள். இவர்கள் தன்னம்பிக்கையை வளர்ப்பதன் காரணமாய், கூட்டத்தில் அங்கம் வகிப்தையே விரும்புவார்கள். ஆரம்பத்தில் அமைதியாய்க் காணப்பட்ட போதும், காலப் போக்கில் மிகச்; சிறந்த நண்பர்களாய் ஆகும் தன்மை உடையவர்கள். வளைந்து கொடுக்கவும் சூழ்நிலைக்கேற்ப தங்களை மாற்றிக் கொள்ளவும் அன்பான விசுவாசிகளாகவும் இருப்பார்கள்.

**பூமி நாய்** (பிப்ரவரி 18,1958 - பிப்ரவரி 07,1959)

குணங்கள் நடைமுறைவாதிகள். எச்சரிக்கையுடன் செயல்படுவார்கள். புதிரானவர்கள். முன் ஜாக்கிரதைவாசிகள். நம்பகம், சாரும் தன்மை ஆகிய காரணங்களால் தலைச்சிறந்த தலைவர்களாய் இருப்பார்கள். அவர்களது நேர்மை, உண்மையின் பால் கொண்ட கொள்கை அனைவருக்கும் ஆதரவு அளிக்கும் குணத்தை ஏற்படுத்தும். தங்களின் மேல் அதிக நம்பிக்கை கொண்டவர்களாய் இருப்பதோடு, பிறரையும் தன்னம்பிக்கையோடு செயல்பட ஊக்குவிப்பார்கள்.

**உலோக நாய்** (பிப்ரவரி 10,1910 ஜனவரி 29,1911 மற்றும் பிப்ரவரி 06,1970 ஜனவரி 26,1971)

குணங்கள் தாராள மனப்பான்மை, நீதி, திடம், கருணை உடையவர்கள். பணியிலும், உறவுகளிலும் பூரண பங்கு வகிப்பார்கள். தங்கள் மேலும் பிறர் மேலும் எதிர்ப்பார்ப்புகள் மிகக் கொண்டவர்கள்.

**நீர் நாய்** (ஜனவரி 28,1922 பிப்ரவரி 15,1923 மற்றும் ஜனவரி 25,1982 - பிப்ரவரி 12,1983)

குணங்கள் தத்துவவாதிகள். உள்ளுணர்வு மிகக் கொண்டவர்கள். சுதந்திரமாய் இருக்க, செயல்பட எண்ண மாட்டார்கள். இவர்கள் கூட்டத்தாருடன் சேரும் போது அதிகத் தன்னம்பிக்கை கொண்டு செயல்படுவார்கள். கூட்டத்தின் தலைவராய் இருப்பதை விடவும் அங்கம் வகிப்பதையே அதிகம் விரும்புவார்கள். அவர்கள் விசுவாசம், பாசம், வளைந்து கொடுக்கும் தன்மை உடையவர்கள். கேளிக்கை பேர்வழியாய் இருப்பார்கள். அனுபவிக்க அனுபவிக்க அனுபவிக்க ஊக்கம் மிகக் கொண்டு உழைப்பார்கள்.

நீங்கள் நாய் வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனர்.

**நாய் வருடப் பலன்கள்**

நாய் வருடம் தங்களைத் தாங்களே மதிப்பிட வைக்கும் வருடமாய் அமையும். தொந்தரவுகள், போராட்டங்கள் இருக்கும். நாய் எப்போதும் கவனித்துக் கொண்டே இருக்கும் குணம் கொண்டதால், இந்த வருடத்தில் நேர்மையே முக்கிய விதியாய் அமையும். கற்பனைக்கெட்டாத விசயங்களும் நடைமுறைப் படுத்தப்படும். பல எதிர்பாராத மாற்றங்கள் வரும். கண்ணியம், தாராள மனப்பான்மைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு, அனைவராலும் ஆதரிக்கப்படும்.



# 12. பன்றி



- ✓ ஆண்டுகள் - 1911 1923 1935 1947 1959 1971 1983 1995 2007 2019 2031 2043 2055
- ✓ நேரம் - மாலை 9:00 முதல் 11:00 வரை
- ✓ உரிய திசை - வடக்கு, வடமேற்கு
- ✓ உரிய காலங்கள் - இலையுதிர் காலம், நவம்பர் மாதம்
- ✓ நிலையான மூலகம் - நீர்
- ✓ யின்- யாங் யின்

கடவுளர்கள் வைத்த ஆற்றைக் கடக்கும் போட்டியில் எலி, எருது, புலி, முயல், டிராகன், பாம்பு, குதிரை, ஆடு, குரங்கு, சேவல், நாய் முதலியன முதல் பதினொன்று இடங்களில் வந்தன. நாய் கரையைச் சேர்ந்ததும், போட்டியை முடிக்க எண்ணிய போது பன்றி மூச்சிரைக்க வருவதைக் கடவுளர்கள் பார்த்தனர். பன்றி வழியில் என்ன செய்தது என்று கேட்ட போது, போட்டியின் போது பசியின் காரணமாய் உணவு உண்டதாலும், உண்ட களைப்பு நீங்க சிறிது தூங்கி எழுந்து வந்த காரணத்தால் தாமதம் ஏற்பட்டதாய் கூறியதாம். பின்னர் கடவுளர்கள் பன்றியை வாழ்த்தி வருடச் சக்கரத்தின் பன்னிரண்டாவது சின்னமாய்த் தெரிவு செய்து அறிவித்தார்கள்.

இந்தக் கதை பன்றி ஏன் பன்னிரண்டாவதாய் வந்தது என்பதைக் குறித்துக் கூறப்படும் கதை.

கீழ்க்கண்ட தேதிகளுக்குள் பிறந்திருந்தால் அவர்கள் அனைவரும் பன்றி வருடத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

- ➢ ஜனவரி 30,1911 - பிப்ரவரி 17,1912
- ➢ பிப்ரவரி 16,1923 - பிப்ரவரி 04,1924
- ➢ பிப்ரவரி 04,1935 - ஜனவரி 23,1936
- ➢ ஜனவரி 22,1947 - பிப்ரவரி 09,1948
- ➢ பிப்ரவரி 08,1959 - ஜனவரி 27,1960
- ➢ ஜனவரி 27,1971 - பிப்ரவரி 14,1972
- ➢ பிப்ரவரி 13,1983 - பிப்ரவரி 01,1984
- ➢ ஜனவரி 31,1995 - பிப்ரவரி 18,1996
- ➢ பிப்ரவரி 18,2007 - பிப்ரவரி 06,2008

**குணங்கள்**

- ❖ செம்மைவாதிகள். புத்திசாலிகள். வீரர்கள். பொறுமைசாலிகள். நல்ல ஆசானாய் இருப்பார்கள். அதிர்ஷ்டசாலிகள். கோபக்காரர்கள். அறிவைத் தேடி அலைவார்கள். படிப்பதை நேசிப்பார்கள். அறிவுத் தாகம் மிக்கவர்கள். அதிகமாய்ப் பேச மாட்டார்கள்.

சந்தர்ப்பம் வாய்க்கும் போது, பிடித்த விசயங்களைப் பற்றி, ஒத்த விருப்பம் உள்ளவர்களுடன் மணிக்கணக்கில் வாதிடவும் பேசவும் தயங்க மாட்டார்கள்.

- அறிவார்ந்த ஆர்வம், நேர்மை, பொறுமை ஆகிய குணங்களைக் கொண்டவர்கள் பன்றிவாசிகள். விசுவாசத்தில் நம்பிக்கை வைக்கலாம். வாழ்நாள் நண்பர்களாய்க் கொள்ளத் தக்கவர்கள். பழங்காலத்திய அரசர்கள் போன்று பன்றிவாசிகள் வீரத்திற்கும், உள்ளத் தூய்மைக்கும் பெயர் போனவர்கள். பிறருக்கு உதவுவதற்காகத் தங்களையே பலி கொடுக்கவும் தயாராய் இருப்பார்கள்.
- அவர்கள் திகைப்பூட்டுபவர்களாய் இருக்க மாட்டார்கள். அவர்களை நம்புவது மிகவும் எளிது. அமைதியான உணர்வுகளை வெளிக்காட்டுவர். நம்பகமான பழக்க வழக்கங்களை கொண்டவர்கள். திடமான மார்க்கத்தை மேற்கொள்ள வரமளிக்கப்பட்டவர்கள். மிகுந்த பொறுமையுடன் காரியத்தை முடிக்கும் வரை வேலையை நிதானமாய்ச் செய்ய அவர்களால் முடியும்.
- மிகவும் அமைதியானவர்கள். அமைதியை என்றும் நாடுபவர்கள். அதைப் பெறத் தேவையானவற்றை எப்போதும் செய்து கொண்டே இருப்பார்கள். அவர்களது அந்தக் குணத்தினால் மற்றவர்கள் அவர்களைப் பயன்படுத்திக் கொண்டு, எளிதாகச் சிக்கல்களில் மாட்டி விட முயல்வார்கள். பன்றிவாசிகள் தங்களைப் போன்றே எல்லோரையும் விசுவாசிகளாகவும், பாதுகாவலர்களாகவும் எண்ணுவார்கள் என்பதால் சிக்கல்களில் சிக்கிக் கொள்வது சாதாரணமாய் நடக்கும். அவர்களின் மிகுந்த அமைதியும், கபடமற்ற தன்மை மட்டுமே, அவர்களது குறையாய்க் கூடக் கொள்ளலாம். நேர்மையும் நம்பகமும் குணங்களாய்க் கொண்டதால், ஏமாற்ற நினைப்பவர்களின் சூதுகளைப் புரிந்து கொள்வது அவர்களுக்குக் கடினமான காரியமாய் இருக்கும்.
- நன்மையே நடக்கும் என்று திடமாய் நம்புபவர்கள். சண்டைகளை விரும்பாதவர்கள். அவர்களது கோபம் வேகமாய்த் தணிந்து விடும். அறிவுரைகளை ஏற்க விரும்ப மாட்டார்கள். சமயம் கிடைக்கும் போதெல்லாம், தங்களது நற்குணங்களைப் பிறர் அறியுமாறு நடந்து கொள்வார்கள். பிறருக்கு உதவுவதையே தங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்கள். எவ்வளவு கஷ்டமான சூழ்நிலை ஏற்பட்ட போதும், எடுத்தக் காரியத்தை, முயற்சியை விட்டுச் செல்ல விரும்ப மாட்டார்கள். எல்லாம் நன்மைக்கே என்று முடிவு செய்து கொண்டு மேன்மேலும் முயற்சியைத் தொடரத் துணிவார்கள்.
- பன்றிவாசிகள் பழகுவதற்கு ஏற்ற, நம்பகமான, தீவிரக் கொள்கை உடையவர்கள். உட்பகை கொள்ள மாட்டார்கள். விவாதங்களை வெறுப்பவர்கள். முனைகளைச் சேர்க்க முயல்வார்கள். வாழ்க்கையில் ஆழமான நீண்ட நட்பினை ஏற்படுத்திக் கொள்வார்கள். பன்றிவாசிகள் எல்லா விதமான சமூகக் கூட்டங்களுக்குச் சென்று மகிழ்ச்சியுடன் அனுபவிப்பார்கள். கூட்டங்களை எதிர் நோக்கிக் காத்திருப்பார்கள். பன்றிவாசிகள் எப்போதும் தங்கள் செயல்களின் மேல் கவனம் செலுத்துவது நலம். அனுபவிக்கும் போக்கின் காரணமாய், மற்ற வேலைகளைச் செய்யாமல் விட அதிக வாய்ப்புகள் ஏற்படும்.
- கழகத்தில் உறுப்பினர்களாய் இருப்பர். நிதி சேர்ப்பதில் தேர்ந்தவர்கள். அவர்கள் சமூகப் பணிச் செய்வதிலும் தருமம் செய்வதிலும் தனி வழியைக் கடைப்பிடிப்பார்கள். பிரச்சினைகளைக் காது கொடுத்துக் கேட்பர். பிரச்சினைகளில் புகுந்து தீர்வு காண வேண்டுமென்றால் எந்த அச்சமும் கவலையுமின்றி நுழைவார்கள். பரந்த மனம் படைத்தவர்கள்.

- பன்றிவாசிகள் ஒரு முடிவுக்கு வந்து விட்டால், அதன் பிறகு அவர்களை நிறுத்த முடியாது. அந்த முடிவுக்கு வரும் முன்னர் நல்லது கெட்டது அனைத்தையுமே ஆராய்வது அவர்களது இரத்தத்தில் ஊறிய பண்பு. பிரச்சினைகளைத் தவிர்க்க விரும்புவார்கள். சில சமயங்களில் வெகுவாய் ஆய்ந்து பார்த்து சந்தர்ப்பங்களைத் தவற விடும் வாய்ப்புகளும் உண்டு. ஆனால் அதற்குக் கவலைப்பட மாட்டார்கள். அவர்கள் எப்போதும் அற்புதங்களை நம்புவார்கள். அவர்களது வாழ்க்கையில் அற்புதங்கள் நடப்பதும் உண்டு. விதி அவர்களுக்கு நன்மையே விளைவிக்கும். கேட்காமலேயே அவர்களுக்கு மற்றவர்கள் தேவைப்படும் போது உதவி செய்ய முன் வருவார்கள்.
- தன்னலம் கருதாதவர்கள். மற்றவர்கள் அதை நன்கு பயன்படுத்திக் கொள்வார்கள். எல்லோரையும் நம்புவார்கள். கேட்பதனைத்தையும் நம்புவார்கள். பிறருக்கு உதவி செய்து இன்புறுவர். எளிதில் ஏமாறக் கூடியவர்களாய் இருந்தாலும், அவர்கள் உண்மையில் புத்திசாலிகள். தங்களைக் காத்துக் கொள்ள அறிந்தவர்கள். அவர்களை மனம் வருந்தச் செய்தால், அந்த வலியை காலத்திற்கும் மறக்க மாட்டார்கள். அன்பானவர்களிடம் இல்லை என்று சொல்ல வருந்துவார்கள்.
- அவர்களுக்குத் தேவையானவற்றை அவர்களின் வாழ்க்கைப் பாதை அமைத்துக் கொடுத்து விடும். சீனர்கள் பன்றிவாசிகளை ஏராளமாய் எல்லாமும் கிடைக்கும் ராசி உள்ளவர்களாய்க் கருதுகிறார்கள். பண விசயங்களில் பன்றிவாசிகள் சேமித்து வைப்பதை விடவும் செலவு செய்வதில் மகிழ்ச்சி காண்பர். அவர்கள் பெயர் பெற்ற பிரபலமான பொருட்களை வாங்கிப் பயன்படுத்தவே எண்ணுவர். கஞ்சத்தனம் காட்டுவது மிகக் குறைவே.
- நன்னடத்தையும், இரசனையும் உள்ளவர்கள். பிரச்சினைகளைச் சீக்கிரம் தாண்டக் கூடியவர்கள். பிறர் முழுவதுமாய் தவறு செய்கிறார்கள் என்று தெரிந்த போதும், அவர்கள் கருத்துக்களையும் கவனித்துக் கேட்பார்கள். எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். எந்தச் சூழ்நிலையிலும், பின்னின்று பணியாற்றுவார்கள். அவரிடம் கேட்டுப் பார்க்க வேண்டும்” என்ற ஒருவர் சொன்னால், நண்பர் “அவரை எளிதில் சம்மதிக்க வைத்து விடலாம்” என்று சொல்லும் வகையில் பிறர் அவர்களை ஏற்றுக் கொள்வர்.

**தொழில்**

- எந்தத் துறையில் இருந்தாலும், நம்பகம் மிக்கத் துணையாய் அவர்களைக் கொள்ளலாம். அவர்கள் சமூகநலப் பணியாளராகவும், அரசியல்வாதியாகவும், கேளிக்கை நிகழ்ச்சி நடத்துபவராகவும் பிரகாசிப்பார்கள். தங்களிடமிருக்கும் அபரிமிதமான சக்தியை எப்போதும் வேலையில் ஈடுபடுத்த முயன்ற வண்ணம் இருப்பார்கள். வழிகளைத் தேடிப் பார்த்த வண்ணம் இருப்பார்கள். அவர்கள் கடின உழைப்பாளிகள். எல்லாவற்றையும் இழக்க நேர்ந்தாலும், சோர்ந்து போகாமல், அதிலிருந்து மீண்டு புதிய வாழ்க்கையைத் தொடங்கும் சக்தி பெற்றவர்கள். நல்ல வருமானம் பெறும் வழியை அவா;கள் அறிந்திருப்பார்கள்.
- வேலையில் உதவி செய்வதை விரும்புவர். அவர்களைப் பெரிதும் நம்பலாம். அவர்களது படைக்கும் ஆற்றலை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்களை நன்முறையில் பயன்படுத்தி இன்புறுவர். விசயங்களை ஆயும் அறிவு அதிகம். மேலதிகாரிகள் அதைப் பெரிதும் பாராட்டும் நிலையில் இருப்பார்கள். பொறுப்புகளை ஏற்பதற்கு அஞ்ச மாட்டார்கள். அவர்களுக்கு பொழுது போக்காளர், உணவக நிபுணர், மருத்துவர், விலங்கு மருத்துவர், வீட்டை அலங்கரிப்பவர் போன்ற தொழில்கள் உகந்தவை. விருந்தோம்பல்

அவர்கள் கூடப் பிறந்த பண்பு. அதனால் அதற்கேற்ற வேலைகளில் நல்ல எதிர்காலம் இருக்கும்.

**உறவு**

எப்போதும் பிறருக்கு உதவுவதையே குறிக்கோளாய்க் கொண்டதால், எந்த வகையிலேனும் உதவ முயல்வார்கள். ஆனால் தங்களுக்காகப் பிறரிடம் உதவி கேட்பது அரிது. இது அவர்களைத் தளரச் செய்தாலும், அதைப் பற்றி சிறிதும் கவலைப்பட மாட்டார்கள். இந்த பாராட்டத்தக்க குணம், பல சமயங்களில் பிறரால் எளிதில் பயன்படுத்திக் கொள்ளப்படும். அதன் காரணமாய் உறவினர்கள் நண்பர்கள் அவர்களைச் சுற்றி எப்போதும் இருப்பார்கள்.

பன்றிவாசிகள் வாழ்க்கையை இன்பமாய்க் கழிப்பர். அதற்குக் காரணம் அவர்கள் பிறருடன் இருக்கும் போது இன்புறுவதும், மற்றவர்கள் ரசிக்கத் தக்க வகையில் பொழுது போக வைப்பதும்தான். பிறருக்கு உதவி செய்வதில் அதிக இன்பம் பெறுவதன் காரணமாய், ஆத்மார்த்தமாய் உதவிகளைச் செய்வர். சமயத்தில் அதிகமாய்க் கூடச் செய்வார்கள். நேர்மையாய் மற்றவர்களிடம் நடந்து கொண்டு, அதையே பிறரிடமிருந்தும் எதிர்பார்ப்பார்கள்.

காதல் விவகாரங்களில் எச்சரிக்கையாய் இல்லாவிட்டால், பன்றிவாசிகள் சிக்கலில் மாட்டிக் கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படலாம். ஆதரிப்பது, கொடுத்துதவுவது போன்ற குணங்கள் காரணமாய் பன்றிவாசிகளை தோழமை கொள்வது சிறந்தது. அன்பானவர்கள். வெளியே செல்வதை விடவும் வீட்டில் இருப்பதையே அதிகம் விரும்புவார்கள். இருப்பதைக் கொண்டு இன்புறுவர். வீடு, குடும்பம் இரண்டில் இன்பம் காண்பர். சரியான கூட்டாளிகளைப் பெற்று விட்டால், நீண்ட நெடுங்காலம் அந்த உறவு தொடரும்.

**உடல் நலம்**

இன்பத்தையே என்றும் தேடிக் கொண்டிருப்பதால், அளவிற்கு அதிகமாகவே அனுபவிப்பார்கள். அதிக உணவு, குடிப் பழக்கம், புகை பிடித்தல் உடல்நலக் குறைவை ஏற்படுத்தும். சுறுசுறுப்பாய் இல்லாத பன்றிவாசிகள், அவர்களது நடத்தையின் காரணமாய் அதிக எடை போடும் வாய்ப்பு அதிகம். பழகுவதற்கு விருப்பம் கொண்ட காரணத்தால், தனிமையில் கவலை கொள்வர். நல்ல ஆரோக்கியாமான வாழ்க்கை முறை அவர்களுக்கு நல்ல பலனைத் தரும்.

**முக்கியமானவர்கள்**

இந்த விலங்கின் ராசிக்குரிய முக்கியமான சிலர் இங்கு தரப்பட்டுள்ளது.

கணித மேதை சீனிவாச இராமானுஜம், பாடகர்கள் பி.சுசிலா, டி. எம். சௌந்தரராஜன், தமிழக முதல்வர் ஜானகி ராமச்சந்திரன், தொழிலதிபர் அனில் அம்பானி, நடிகர் அஜீத், வயலின் வித்வான் குன்னக்குடி வைத்தியநாதன், கிரிக்கெட் வீரர் கிருஷ்ணம்மாச்சாரி ஸ்ரீகாந்த், எழுத்தாளர்கள் சுஜாதா இரங்கராஜன், எர்னெஸ்ட் ஹெம்மிங்வே, நடிகர் ஆர்னால்ட் சுவார்செனிகர், இயக்குநர் ஆல்பிரட் ஹிட்ச்காக், அமெரிக்கத் தொலைக்காட்சி நிகழ்ச்சி அமைப்பாளர் டேவிட் லெட்டர்மேன்.

**பிற தகவல்கள்**

- ✓ அதிர்ஷ்ட எண்கள் - 1, 3, 4, 5, 8,16, 18, 34, 41, 48

- ✓ ஒத்துப் போகும் விலங்குகள் - முயல், ஆடு
- ✓ ஒத்துப் போகாத விலங்குகள் - பாம்பு, குரங்கு, பன்றி

**மூலகக் குணங்கள்**

பன்றிவாசிகள் ஐந்து மூலகங்களுடன் சேரும் போது வெவ்வேறு குணங்களைப் பெறுவதாய்ச் சீன ஜோதிடம் நம்புகிறது.

**நெருப்புப் பன்றி** (ஜனவரி 22,1947 - பிப்ரவரி 09,1948 மற்றும் பிப்ரவரி 18,2007 - பிப்ரவரி 06,2008)

ஆழமானவர்கள். பிடிவாதக்காரர்கள். அன்பினால் ஊக்கம் கொண்டு உழைப்பர். உணர்வுப்பூர்வமானவர்கள். சிலர் பொறுப்பற்றவர்களாய் இருப்பார்கள். செய்யும் செயல்கள் அனைத்திலும், ஜூவாலை தெரியும். எந்தச் செயலையும் பயமின்றிச் செய்யத் துணிவார்கள். ஏதாவது பணியில் முழுமையாய் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்கள். அவர்கள் நல்ல தலைவர்களாகவும், எஜமானர்களாகவும் இருப்பார்கள். வேலை, காதல், குறிக்கோள் எதுவானாலும் பயமின்றி முழுச் சக்தியையும் பயன்படுத்திச் செயல்படுவர்.

**மரப் பன்றி** (பிப்ரவரி 04,1935 - ஜனவரி 23,1936 மற்றும் ஜனவரி 31,1995 - பிப்ரவரி 18,1996)

இளகிய மனம் படைத்தவர்கள். மிகுந்த உதவி செய்பவர்கள். திட்டமிட்டுச் செயல்படுவார்கள். குறிக்கோளினால் ஊக்கம் பெறுவர். துறுதுறுப்பானவர்கள். மற்றவர்களுடன் இணைந்து பணி செய்ய வழி பார்த்துக் கொண்டு இருப்பார்கள். தேவையில்லை என்று சொன்ன போதும், பிறருக்கு உதவி செய்வார்கள். பரந்த மனம், உறுதி இவர்களின் பிறவிக் குணங்கள். சிலர் ஏமாற்றுக்காரர்களாய் இருப்பார்கள்.

**பூமிப் பன்றி** (பிப்ரவரி 08,1959 - ஜனவரி 27,1960)

அமைதியானவர்கள். சுறுசுறுப்பானவர்கள். சமன்பாடுடையவர்கள். விருந்தோம்பல் பண்பு உடையவர்கள். எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். வீடு, குடும்பம் அவர்களை திருப்திப்படுத்தும் விசயங்கள். திட்டமில்லாமல் எந்த ஒரு வேலையையும் தொடங்க மாட்டார்கள். தலைவராய் இருப்பதை விடவும் வழி நடத்தப்படும் மனிதராகவே இருக்க விரும்புவர்.

**உலோகப் பன்றி** (ஜனவரி 30,1911 - பிப்ரவரி 17,1912 மற்றும் ஜனவரி 27,1971 - பிப்ரவரி 14,1972)

அதிகாரத்தைக் காட்டுபவர்கள். பொறுமையுடையவர்கள். பெருமிதம் கொள்பவர்கள். வெளிப்படையானவர்கள். உற்சாகமானவர்கள். மிகுந்த திடகாத்திரமான உருவம் கொண்டவர்கள். அவர்களது வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளிலும் அவர்களது பலத்தை அறிந்து கொள்ளலாம். கடினமான உழைப்பாளிகள். தாங்கள் பெற்ற அனைத்தையும் விரும்புவர். அதிகமாய் பேசும் தன்மை உடையவர்கள். எல்லோரையும் ஒரேயடியாய் நம்பி விடுவார்கள்.

**நீர்ப் பன்றி** (பிப்ரவரி 16,1923 - பிப்ரவரி 04,1924 மற்றும் பிப்ரவரி 13,1983 - பிப்ரவரி 01,1984)

வசீகரிப்பவர்கள். ஆழ்ந்த அறிவுடையவர்கள். நம்பிக்கையினால் ஊக்கம் பெறுவர். எந்தத் தவறும் கூற முடியாத அளவிற்கு நம்பகமானவர்கள். பிறர் அவர்களை எளிதில் மயக்கி விடுவார்கள். ஆனால் இவர்கள் தங்களுக்கு வேண்டியதைப் பெற பிறரை மயக்கவும்

செய்வார்கள். அவர்கள் மிகுந்த சமுதாய நோக்குடையவர்கள். நேரத்தை வீணாக்காமல் அனுபவிக்க எண்ணுவார்கள்.

நீங்கள் பன்றி வருடத்தில் பிறந்திருந்தால், மேற்சொன்ன குணங்களைக் கொண்டிருப்பீர்கள் என்று சீனர்கள் கணிக்கின்றனா;.

**பன்றி வருடப் பலன்கள்**

கருணை நிறைந்த வருடம். நல்லவை நடக்கும். ஏராளமாய் எல்லாமே கிடைக்கும் வருடம். தொழில் சிறக்கும். வாழ்க்கையை முழுமையாய் வாழலாம். எதிர்பாராத விசயங்கள் நடப்பது மிகக் குறைவாகவே இருக்கும். செல்வச் செழிப்பு மிக்க வருடம். பண விவகாரங்களில் எச்சரிக்கை தேவை. மிகுந்த வீரமும், ஒற்றுமையும் பன்றிக்கான குறிகள் என்பதால் ஒற்றுமை முக்கிய பங்கு வகிக்கும் வருடமாய் இருக்கும்.



**இது ஒரு முத்துக்கமலம் இணைய இதழின் மின்புத்தகப் படைப்பு.**

முத்துக்கமலம்

**இணையத்தில் ஒரு இலக்கியப் படைப்பு! இது தமிழ் ஆர்வலர்களின் இலக்கியத் துடிப்பு!!**

http://www.muthukamalam.com/homepage.htm